வெளியீடு எண் 220.

முத்தமிழ் முழக்கம்

தருமபுர ஆதீனம்



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
24-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதினம்

இருபத்து நான்காம் மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஐந்தாவது ஆண்டு

குருபூஜை விழா அணிமலர்

25—5—1950

வெளியீடு எண் 220.

உ

குருபாதம்

முத்தமிழ் முழக்கம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்

திருவுள்ளப்பாங்கின்வண்ணம்

வெளியிடப்பெற்றது.

எழுதியவர் :

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரையாளர்

வித்துவான், திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.

1960.

பொருளடக்கம்.

உ

குருபாதம்

பதிப்புரை

"ஆரியந் தமிழோ டிசையானவன்", "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்பன தெய்வத் தமிழ்கண்ட அனுபவஞானிகளின் திருவாக்கு. அவற்றை மேல்வரிச்சட்டமாகக்கொண்டு, அவர்கள் காட்டிய அருளாணை வழியே நடைபெற்று வருவது இத்திருமடம். இத்திருமடத்திற்குச் செந்திறத்த தமிழோசையும் வடசொல்லும் இருகண்களாக அமைந்தன.

முந்நூற்றைம்பது ஆண்டுகட்குமுன் இத் திருமடத்தின் ஆசாரிய ஞானபானுவாக விளங்கிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தேடி வைத்த அருள்விளக்கம் தெய்வத் தமிழுலகத்தைச் செந்நெறியில் நிலைக்கச்செய்து வருகின்றது. அந்த ஞானசாரியபரம்பரையில் வந்த இருபத்துநான்காம் குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுடைய ஐந்தாவது ஆண்டுக் குருபூஜை நினைவு மலராக இம் முத்தமிழ்முழக்கம் இன்று கேட்கிறது.

முழக்கம் மகிழ்ச்சியின் விளைவு. மகிழ்ச்சியோ செந்தமிழ்த்தேன் குடித்ததால் உண்டானது. எழுத்தாளரின் உள்ளப்புலத்தில் வசந்தகாலத்து எழுந்த

எண்ணப்பூங்கொத்துக்கள் இந்தக்கட்டுரைகளாகிய தேனைச் சொரிந்தன. அவற்றைக்குடித்து மகிழ்ந்து முழங்கத் தமிழுலகம் எதிர்நோக்கியிருக்கிறது. அத்தகைய சீரிய கட்டுரைக்கொத்தே இவ்வெளியீடு.

இதனை ஆக்கித்தந்த நமது அன்பர் வித்துவான் திரு ஜி. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் இதனை வெளியிட எண்ணி, திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களிடத்தில் தெரிவித்துக் கொண்டபோது அவர்கள் அன்பும் பொருளும் தந்துதவினார்கள். பின்னர், தருமை ஆதீனத்திலும் பிள்ளை அவர்கள் தம் கருத்தைத் தெரிவித்தபோது ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களும் அங்ஙனமே அருளும் பொருளும் வழங்கினார்கள்.

மற்றொருமுறை அன்பர் திரு. பிள்ளையவர்கள் மகாசந்நிதானமவர்களிடம் தெரிவித்துக்கொண்ட போது கருணைத்திருவுருவாக விளங்குகிறஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இதனை ஆதீன வெளியீடாகவே ஏற்று வெளியிடத் திருவுள்ளம் பாலித்தார்கள். அங்ஙனமே இது இன்று வெளிவருகிறது.

தமிழுலகம் முத்தமிழ் முழக்கம் கேட்டு விழிப்புற்றுப் புத்துணர்ச்சி எய்துமாக.

தருமபுரம்,
19—5—50.

இங்ஙனம்,
ச. தண்டபாணி தேசிகர்.

உ

முன்னுரை

“ நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலே
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானேத்
தொண்ட னேன் அறி யாமை யறிந்து
கல்லி யன்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டிஎன் களேகளே யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் ருனே
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.”

சிவபெருமானின் திருவாயால் உலகறியத் ‘திருநாவுக்கரசு’ என்ற பட்டம் பெற்றுச் சிவஞானச் செல்வராய்த் திகழ்ந்தவர் அப்பரடிகள். அவர் நாளும் தமிழோடு இசை பாடலே மறந்தறியாத தலேயான மனிதர். அத்தகைய அடிகளே “பன்னிய செந்தமிழறியேன்” என்று கூறுவாராகில், என்போன்றவர் தமிழின் அருமை பெருமை யனேத்தையும் எங்ஙனம் அறிதல் கூடும்? தண்ணர் தமிழ் அளிக்குந் தண்பாண்டி நாட்டானுகிய சிவபெருமான், தமிழ் இன்பம் பெறவேண்டி, அப்பருக்கும் சம்பந்தருக்கும் மிழலே

யம்பதியில் நாடோறும் பொற்காசருளித் தமிழ்மாலை சூடி அவ்விருவர் உள்ளக்கோயிலையும் தனக்கே உறைவிடமாய்க் கொண்டார் என்று சேந்தனர் பாடுகிறார்:—

"பாடலங் காரப் பரிசில் காசருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை."

இத்தகை அருந்தமிழின் மீதுள்ள ஆர்வத்தினால், தமிழன்னையை நம் முன்னோர் எவ்வாறு சிறப்பித்தனர் என்ற சில குறிப்புக்களைக்கொண்டு இதிலடங்கிய கட்டுரைகளை எழுதினேன். அவை அவ்வப்போது 'ஞானசம்பந்தம்' 'குமரன்', 'செட்டிநாடு' 'பாரதசக்தி', சென்னைத் 'தமிழ் இசைச்சங்கமலர்' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இவற்றைக் கொண்டு பலவிடங்களில் சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளேன். தமிழைப் பற்றின இக்கட்டுரைகளையெல்லாம் தொகுத்துப் புத்தகவடிவில் முத்தமிழ்முழக்கம் என்ற தலைப்புடன் திருவருளால் இப்பொழுது வெளிவருகிறது. இக்கட்டுரைகள் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் சிறப்பினையும் நன்கு எடுத்து முழங்குவதால் முத்தமிழ்முழக்கம் ஆயின.

எனக்குள்ள தமிழ்ப்பற்றினையும் சைவப்பற்றினையும் அன்பெனும் நீர்பாய்ச்சி வளர்த்துவந்தவர்கள் ஸ்ரீ-லா-ஸ்ரீ காசிவாசிஅருணந்தித்தம்பிரான்சுவாமிகள் ஆவார்கள்.

அவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவராய் வீற்றிருந்து தமிழுக்கும் சைவத்திற்கும் செய்துவருகிற அரும்பணிகள் மிகப்பலவாகும். என் கட்டுரைகளை நூல் வடிவில் ஆக்குதற்கு அவர்கள் பேராதரவளித்துப் பொருளுதவியும் செய்தார்கள். என்றென்றும் என் நன்றி அவர்களுக்குரித்தாகும். அவர்கள் ஆற்றிவரும் அரும்பணிகளின் விபரம் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பெற்றுள்ளது.

தருமபுரம் எனது தாயகம். அங்குள்ள ஞானசம்பந்தம் அச்சகத்தில் இந்நூலினை அச்சிடுவதற்காக நான் எடுத்துச் சென்றபொழுது, தருமபுர ஆதீனத்தலைவராய் 25-வது குரு மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பார்வையிட்டுத் திருவுள்ளம் மகிழ்கூர்ந்தார்கள். இதனைத் தமது ஆதீன வெளியீடாகவும் அச்சிட்டு உதவினார்கள். அவர்கள் சைவத்தையும் தமிழையும் தம் இருகண்களாகப் பாவித்துப் பாதுகாக்கும் பெருந்தகையார். அவர்கள் அண்மையில் ஸ்ரீ காசியாத்திரை சென்று விசுவநாதரை வழிபட்டு வந்த செய்தி இவ்வுலகு அறியும். அவர்களது காசியாத்திரையின் நினைவாக அடியேன் இந்நூலினை அர்ப்பணிக்கிறேன்.

ஒவ்வொரு பொழுதும் பிழைதிருத்தங்களை மேற்பார்த்து இந்நூல் நல்ல முறையில் அச்சாகி வெளிவருவதற்கு வேண்டும் ஊக்கத்துடன் உதவிசெய்த என் அருமை நண்பர், வித்வான் M. ஆறுமுக தேசிகர் அவர்களுக்கு

நன்றி கூறுவது என் கடமையாகும். ஞானசம்பந்தம் அச்சகத்தாருக்கும் என் நன்றி.

இந்நூலிலுள்ள குற்றம் குறைகளைப் பொருட்படுத்தாது, நல்லனவற்றை நாடிக்கண்டு, தமிழ்ப்பெரியோர் எனக்கு நல்லாசி வழங்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறேன்.

ஜி. சுப்பிரமணியம்.

உ

குருபாதம்

முத்தமிழ் முழக்கம்

சங்கத் தமிழ்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த பாண்டிய மன்னர்கள், சங்கங்கள் நிறுவிப் புலவர் களைக் கூட்டிவைத்துத் தமிழை ஆராய்ந்து இன்பம் கண்டதாக நாம் படிக்கிறோம். அவ்வாறு ஏற்படுத் தப்பட்ட சங்கம் மூன்று. முச்சங்கங்களும் முத் தமிழை வளர்த்தன. இறையனர் அகப்பொருள் என்னும் நூலின் உரையில், "தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயினர் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனரும், திரிபுரமெரித்த விரி சடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன் பதின்மர் என்ப" என்று தமிழ்ச்சங்க வரலாறு தொடங்குகின்றது. இவ் இறையனரகப்பொருள்

நூலானது மதுரைசோமசுந்தரக்கடவுளே இயற்றிப் பலிபீடத்தில் இட்டுவைத்ததாகக் கூறப்படும். அதனால் அதன் ஆசிரியர் இறையனார் என்னப் பட்டார்போலும். இறையனார் என்னும் பெயர் கொண்ட புலவரும் சங்கத்துச் சான்றோரில் ஒருவ ராகக் காணப்படுகிறார். மேலும் தலைச்சங்கப் புலவர் களில் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் ஒரு புலவராக வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்தார் என்று அகப்பொருள் உரை குறிப்பதைக் கண்டோம்.

இதை ஆதாரமாகக்கொண்டே சேக்கிழாரும், முக்கண்ணுடைய முழுமுதற் கடவுள் ஒரு தமிழ்ப் புலவராய்ச் சங்கத்திருந்து தமிழின்பம் பருகினார் என்று மூர்த்தி நாயனார் புராணத்தில் மொய்ம்புறப் பாடியுள்ளார். முத்தமிழுக்கும் மூன்று பாடல் எனப் புத்திக்கண்கொண்டு தித்திக்கப் பாடினார் போலும்!

"மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்றசந்தின்
மைவைத்த சோலை மலையந்தர வந்தமந்த
மெய்வைத்த காலும் தரும் ஞாலம் அளந்தமேன்மைத்
தெய்வத் தமிழும் தருஞ்செவ்வி மணஞ்செ யீரம்.

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண்மூதூர்
நூல்பா யிடத்தும் உளநோன்றலை மேதிபாயப்
பால்பாய் முலைதோய் மதுப்பங்கயம் பாய எங்குஞ்
சேல்பாய் தடத்தும்உள செய்யுள் மிக்கேறு சங்கம்.

மும்மைப் புவனங்களின் மிக்கதன்றே அம்மூதூர்
மெய்மைப் பொருளாந் தமிழ்நூலின் விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளுந் தருவார் திருவாலவாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்ததென்றால்"

கடவுள் மணக்கும் கவித்திறம் வாய்ந்த கல்வியிற்பெரிய சேக்கிழாருக்குத் தமிழ் வளர்ந்த மதுரை என்றதுமே மகிழ்ச்சி பொங்கித் தாண்டவம் ஆடுகிறது: தமிழை அவர் வாயாரப்பாடி வழிபடுவதை இப் பாடல்களில் தெளிவுறக் காணலாம். தெய்வத் தமிழ், ஞாலம் அளந்த தமிழ், சால்பாய மும்மைத் தமிழ், மெய்மைப் பொருளாந் தமிழ், வாய்மைச் செம்மைப் பொருள் விளங்கு தமிழ் என்ற சொற்றொடர்கள் தமிழின் உண்மை மாண்பை அவர் எவ்வாறு கண்டு போற்றித் தொழுதுய்ந்தார் என்பதை நன்கு விளக்குகின்றனவாம். பழந்தமிழ் நூல்களினிடை உண்மையும், வாய்மையும், மெய்மையும் செறிந்து மிளிரக் காண்போர்கள், சேக்கிழார் வாக்கு பொருளுரையே, வெற்றுரையன்று என்பதைத் தெற்றென அறிவார்கள். தமிழ் செய்த தவத்தால் நம்பவம் தீர்ப்பவனே பாவலனாய் வந்து தமிழைப் பயின்றான்போலும்!

இப் பாடல்களில் சேக்கிழார் உட்பொருளாகக் குறிப்பிற் புலப்படும்படி செறியவைத்த பொருள்களையும் நாம் தெரிந்துகொள்வது நலமாகும். சால்பு என்பது நற்குணம்,மேன்மை,நிறைவு,மனவமைதி, உயர்வு போன்ற பல பொருள்தரும் ஒரு சொல்.

தமிழ்மொழி தன்னைப் பயில்வோர்க்கு இத்தகைய மேன்மைக் குணங்களை யெல்லாம் தரவல்லது. அது முத்தமிழாய்விளங்குகிறது. ஆதலால் அதனைச் 'சால்பாய மும்மைத் தமிழ்' என்றார். இயல் இசை கூத்து என்னும் மூன்று பிரிவினையுடைமையால் அது மும்மைத்தமிழ் என்னப்பட்டது. மனம், மொழி, செயல் என்ற மூன்றையும் ஆட்சி புரிவது மொழி. எண்ணங்கள் எழுத்து வடிவாகவே எழுகின்றன. தூய எண்ணங்களை மனத்திடை நிறைவிப்பது இயற்றமிழ். தூய இனிமை பயக்கும் சொற்களை வாயால் வழங்குவது இசைத் தமிழ். நன்மை பயக்கும் தூய செயல்களை நிகழ்த்துவது கூத்துத் தமிழ். எத்தகைய நற்செயலும் மலர்ந்த முகம், இன்னுரைக்கு இவற்றை முதன்மையாகக் கொண்டே நிகழவேண்டும். இவ்வாறு தூய மனம், தூய சொல், தூய செயல் இம் மூன்றும் ஒருங்கு நிகழ்வதே அறம் எனக் கண்டனர் தமிழர்.

அறிவின் உச்ச நிலையிலே நிகழ்ந்த முன்னைத் தமிழர் அறமே நினைந்து, அறமே பேசி, அறமே புரிந்தனர். அறிவு ஈன்றதே அறமெனப்பட்டது. அறமே அறிவின் வெற்றியும் ஆயது. இந்த அறத்திற்கு அடிப்படையாக அகம் தூய்மை பெறுதல் வேண்டும். இதை உணர்ந்தே வள்ளுவப் பெருந்தகையார்,

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்றார். தூய்மையான மனத்திலேதான் தூய்மையான சொல்லும், அதற்கேற்ற தூயசெயலும் பிறக்கும். மனமும், சொல்லும், செயலும், தூய்மை பெறுவதுதான் அறம். இதை நாயனர் எவ்வளவு தெளிய எடுத்து ஓதுகிறார் பாருங்கள்!

"முகத்தா னமர்ந்தினிது நோக்கி அகத்தானும்
இன்சொ லினதே அறம்."

முகத்தான் அமர்ந்து இனிது நோக்குதல் மெய்யின் செயல். அது மெய்ம்மை. மெய்ம்மையைத் தருவது நாடகத் தமிழ். அகத்தான் ஆவது உள்ளத்தின் செயல். அது உண்மை. உண்மையைத் தருவது இயற்றமிழ். இன்சொல்லைத்தருவது வாயின்செயல். அது வாய்மை. வாய்மையை உடையது இசைத் தமிழ். இங்ஙனம் முத்திறம்கொண்ட தமிழின் முழுமையைக் கண்டவனே உண்மைத் தமிழன். அறவாழி அந்தணன். தமிழ் நமக்கு இயற்றமிழால் உண்மையையும், இசைத்தமிழால் வாய்மையையும், நாடகத்தமிழால் மெய்ம்மையையும் அளிக்கும் ஆற்றல் சான்றது. இது கருதியே சேக்கிழார் "மெய்ம்மைப் பொருளாந் தமிழ் நூலின் விளங்கு வாய்மைச், செம்மைப்பொருளுந் தருவார்" என்று அமைவுறப் பாடினர். உண்மையை இங்குச் செம்மை என்று கூறினர். மனதைச் செம்மைப்படுத்தி அறிவினைக் கொளுத்தும் தமிழின் உண்மைச் சிறப்பு நோக்கி அதனைச் செம்மைப்பொருள் என்று புலவர் பெருமான் பாராட்டுகின்றார்.

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட"

என்ற இடத்தில் செம்மை என்றது செம்பொருளாகிய சிவபெருமானைக் குறிப்பதைக்காணலாம். சிவ் பெருமானுடைய இயல்புகளை நன்கு விளக்கி, உயிர்களை இன்ப நெறிப்படுத்து, அயரா அன்பின் அரன் கழல் செலுத்தும் சிறப்புடையது தமிழ்.

"குன்ற முறைந்தாய் கொடுவிருள் தான்தடிந்தாய்
தென்றமிழ்என் அன்னையே தேசுடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறார்ந்தான் ஏரே
உளையாய்என் னுள்ளத் துறை"

என்று தமிழை வணங்குதல் நமது கடன்.

ஆன்மகோடிகளின் உள்ளங்கவர் கள்வனின் உள்ளத்தையே கவர்ந்த உயர்தமிழின் ஊற்றத்தையும் ஏற்றத்தையும் என்னென யாம் விளம்புகேம்!

கன்னித் தமிழின் சொன்மாலை புனையவேண்டி இறைவனும் என்னென்ன திருவிளையாடல்கள் செய்தருளினர்! திசைமுகனும் மாலும் தேடியுங் காணாத் திருவடிகள் நோகும்படி, திருவாரூர்ப் பெரு வீதியில் ஒருமுறைக்கு இருமுறை தூதுநடந்தார். முதலையுண்ட பாலகன் ஏழாண்டு வளர்ச்சியுடன் மீண்டுவந்தான். வெள்ளெலும்பு பெண்ணுருவாய் வெளிப்பட்டது. திறவாக்கதவும் திருமறைக்காட்டில் திறந்துகொண்டது. அங்ஙனம் அப்பர் திறந்த கதவை உடன் அடைக்கப் பாடினர் திருஞான

சம்பந்தர். திறக்கப் பாடியதைவிட அடைக்கப் பாடியதே சிறக்கப்பாடியதாகும் என்று அப்பர் அடிகள் அந்நிகழ்ச்சிகண்ட அப்பொழுதே வியந்து சம்பந்தரின் செந்தமிழ் உறைப்பினை உளங்குளிரப் போற்றியிருப்பது நோக்கத்தக்கது.

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே"

இதுபோற் பல செயற்கரியனவற்றைச் செய்து கொடுத்தது தெய்வத் தமிழ். தமிழ்ப்பாடல் சிவ பெருமானையே வளைத்தாடல் கண்டது.

இவ்வாறு சிவபெருமானல் சிறப்பு இனிமை பெருமை உணர்ந்து ஆராயப்பட்ட தேமதுரத் தமிழ்த் திருமொழியை ஏனைய மொழிகளைப்போல் எண்ணுவதும் தவறு என்கிறார் பரஞ்சோதியார்:—

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமி ழேனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ"

ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கும் உயர் குணமுடையது தமிழ். அதன் இன்ப வளத்தை வாரியுண்டவர் கரைந்து நெக்குருகி உடல்குறைந்து மெலிவர். தமிழின் உண்மையை உணர்ந்து அதனை

இனிது சுவைப்பவர் உருகி யுருகி நெக்கு நெக்குள் உடைந்திட உழுவலன்பு கசிந்திட்டு அசும்பூறும். அவ்வாறு ஊறஊற அவர் உள்ளத்தடத்தில் ஊற் றெடுத்துப் பரமானந்த வெள்ளம் பெருகியோடிப் பாய்ந்து நிறையும். தமிழின் இன்பச் சுவை சிவ பெருமான் மனதையும் குழைவித்தது. அவர் எண்ணத்தையுங் கவர்ந்தது. மதுரைக் கரசாய் மாதேவர் வந்தார். சங்கப் புலவராய் சங்கரர் தோன்றினர்.

"மூவர்கட் கரியான்நிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்
பாவலர் வீற்றிருக்கும் பாண்டி நன்னாடு போற்றி"

என்று திருவிளையாடற் புராணம் போற்றியது.

"தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை"

என்று தித்திக்கப்பேசியது திருவாசகம். சுந்தரரும்,

"தண்டமிழ் நூற்புல வாணர்க்கோ ரம்மானே"

என்று தண்டனிட்டார்.

சங்கம் என்ற சொல்லே இடையிட்டு வந்தது தான். முதலில் கூடல் என்றுதான் கூறப்பட்டது. பலரும் கூடுவது கூடல். அவ்வாறு கூடிய இடமும் கூடல். அதனால்தான் மதுரையும் கூடல் என்னும் பெயர்பெற்றது. ஆலவாய் அமரும் பெம்மான் கூடலில் இருந்து ஆராய்ந்த ஒள்ளிய தீவிய தமிழைத் திருக்கோவையார் எடுத்துப் புகல்கிறது.

"சிறைவான்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னுய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ வன்றிஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத்தோட் கென்கொலாம் புகுந்
[தெய்தியதே".

சேக்கிழார் வாய்மணக்கும் தெய்வத் தமிழின் மாட்சியினை மனங்கொண்டு பாடிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் பின்வருமாறு தமிழின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.

"எண்ணிற் பொலிபல் புலவர் குழாத்
தெய்தி நும்மோ டியாமொருவேம்
என்று கூறி யெம்பெருமான்
இருந்தாய் தருநன் னயமுடைத்தாய்
மண்ணிற் பொலிபு கயிலாய
வரைக்க ணிவர்ந்தம் மாதேவன்
வடிகா தகம்புக் குள்ளுருக்கும்
வளமை யுடைத்தாய் வளத்தருவாழ்
விண்ணிற் பொலிவார் களும்வியப்ப
வெள்ளென் பழத்திற் குயிரருளி
வெங்கராக் கொண்டது மீட்கு
மிக்க விறலிற் றுயெங்கள்
கண்ணிற் பொலிசெந் தமிழ் மணக்குங்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே"

இவ் அருமைப் பாடலில் தமிழின் நயமும், வளமையும், விறலும் நன்கு கூறப்படுவதுபோலவே பரஞ்சோதியாரும் கன்னித் தமிழின் கவினைப் போற்றிப் பாராட்டினர்:—

“தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்டபாலனை யழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்.”

இவ்வாறு கடவுளையும் மொழியையும் தொடர்பு படுத்திக் கூறும் வழக்கம் தமிழ்நாட்டில் மட்டுமே காணப்படும். வேறு எந்த மொழிக்கும் இத்தகைய சிறப்பு வாய்த்ததில்லை. தமிழ் அறிஞர் தமிழையும் இறைவனையும் தொடர்பு படுத்தினதோடு அமையாது ஒன்றுபடுத்தியும் காட்டினர். இல்லை; இறைவனைவிட இன்றமிழுக்கு ஒருபடி உயர்வுகொடுத்தும் போற்றினர். சிவபெருமான் சான்றோர் இருந்த சங்கப் பலகையின்கீழ் இறைஞ்சி நின்றான் என்று இறும்பூதுகொண்டனர். கடவுளும் கைதொழும் கசிவுடைத் தமிழைவிட ஒருவன் இவ்வுலகிற் பெறக் கூடியது வேறு யாது உண்டு? ஓர் இளைஞன் தன் காதலியைப் பிரிந்து சிலகாலம் தமிழ்க்கல்வி கற்று வர எண்ணினன். காதலியோ பிரிவுக்கு உடன் படாள். எப்படியும் அவளுக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழின் உயர்வை எடுத்துக்கூறினன்:—

"நாவித் தகர்சென் றிருந்தமை யாலியல் நாடியன்று
பாவித்த சங்கப் பலகையின் கீழுழை பார்த்திரங்குங்
காவித் தடங்கணல்லாய் கடம்பாடவிக் கண்ணுதல்போய்ச்
சேவித்து நிற்குந் தமிழ்க்கெதி ராயென்கொல் தேடுவதே."

இதைக் கேட்டதும் மனைவிக்கு உயிரே போய் விடும்போலிருந்தது. அவனைப் பிரிந்தால் இறந்தே விடுவாள். அவள் அதைச்சொல்லவும் முடியவில்லை. கணவன் சொல்லைத் தட்டியதாக வரக்கூடாது: ஆனால் சொல்லியும் ஆகவேண்டும். அவனுக்கு இசைவதுபோல் உடன்பட்டு விலக்கினாள். அவள் கூறியது இதுதான்:— "எனது ஆருயிர் நாயக! படிக்கவேண்டாமென்று யார்தான் சொல்வார்கள்? சென்று வாருங்கள். தாங்கள் கற்பதுமட்டும் தமிழாக இருக்கட்டும். தமிழ்க்கவி பாடும் திறம் பெற்று வாருங்கள். கவியும், மைலாப்பூரில் திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்குவதற்குப் பாடிய தேவாரப் பதிகம்போன்று அருமையாய்ப் பாட வேண்டும். அங்ஙனமாயின் சென்றுவரலாம்" என விடைகொடுத்தாள்:—

"ஆரும் விரும்பிய கல்விமே லாசை உமக்குளதாயிடின்
பாருற என்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
நீரு மருந்தமிழ் செப்பிடு நீர்மை யறிந்திவண் ஏகுவீர்
மேரு நெடுஞ்சிலை யத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே."

மைலாப்பூரில் சிவநேசச் செட்டியார் என்பவர் தன் மகள் பூம்பாவையாளைத் திருஞானசம்பந்த

ருக்குத் திருமணம் செய்துகொடுக்க எண்ணி யிருந்தார். அதற்குள் பூநாகம் தீண்டிப் பூம்பாவை இறந்தாள். இறந்த உடலை எரியிலிட்டு எஞ்சிய சாம்பல் எலும்புகளைச் செட்டியார் ஒரு குடத்திலிட்டுப் பாது காத்துவந்தார். மைலாப்பூருக்கு வந்த சம்பந்தருக்கு இச்செய்தி தெரிந்தது. உடனே குடத்தைக் கோயிலுக்கு எடுத்துவரச்செய்து ஒரு தமிழ்ப் பதிகம் பாடினார். "சிவனடியார்களுக்குத் திருவமுதளித்தலும், அரனார் திருவிழாக்களை அன்பர்களுடன் களித்துக்கலந்ததோர் காதற்கசிவொடு காண்டலுமே இம்மண்ணிற் பிறந்தவர்கள் மாண்புறப் பெற வேண்டிய பயன் என்பது உண்மையானால், அரும் பெறற் பாவாய்! நீ அப்பயன்களைப்பெறாது சென்று விடலாமா? மீண்டும் உடனே உயிர்பெற்று வா" என்னும் பொருள்பட, சிவநெறிச் சீர்மையினைக் காழிவள்ளலார் பாடியவுடன், குடம் தாமரை மலர் போல் விரிந்தது. அதன் நடுவிலிருந்து திருமகள் போல் பூம்பாவை எழுந்துவந்தாள். இவ்வாறு எலும்புக்கு உயிர்கொடுத்தது தெய்வமறைத் திருத்தமிழ்; அதுபோல் அவனும் அருந்தமிழ் கற்றுவர வேண்டும் என்று வேண்டினாள் மனைவி.

அவள் கூறியதன் கருத்தைக் குறிப்பாக உணர்ந்துகொண்டான் கணவன். தான் பிரிந்தால் அவள் இறந்துவிடுவாள். வீட்டினில் உள்ளார் அவள் உடலைச் சுட்டு எஞ்சும் சாம்பல் எலும்புகளைக் குடத்தில் அடைத்து வைத்திருப்பார்கள். தான்

படித்து மீண்டதும் ஒரு தமிழ்ப் பாட்டினைப் பாடி அவளை எழுப்பிவிடவேண்டும். அவள் கூறிய கருத்து இதுதான். இவ்வாறு இசைவதுபோலக் கூறி, தான் இறந்துபட அவன் பிரியக்கூடாது என்பதைச் சொல்லாமலே சொல்லிவிட்டாள் மனைவி. இப்பாடல் நயத்தை யுணர்ந்த இளைஞன் தமிழைப் படிக்க வெளியிலா போயிருப்பான்? பிரியாது வீட்டிலேயே தங்கிவிட்டான். மனைவியின் சங்கத்திருந்து ஆராயும் தமிழே மேல் என்ற ஞானம் கணவனுக்குப் பிறந்துவிட்டது. சங்கம் என்பது கூடல். தமிழ் என்பது இன்பம். இந்நயம் தொனிக்க வரும்பாடல் ஒன்றையும் இங்குக் காணலாம்.

"சிங்கத் துரிபுனை கோடீச் சுரர்சித்தர் தென்மதுரை
தங்கத் தமிழ்ச் சங்கத் தார்சொற் றவறினுஞ் சார்ந்துநந்தம்
சங்கத் திருந்து தமிழாய்ந் தவர்சொற் றவறுவரோ
இங்கிற்றை யேவரு வார்மன மேதெளி யின்னதுவே."

ஆ! சங்கத்துச் சான்றோர்களைத் தவறாதசொல் லுடைய தங்கத் தமிழ்ச் சங்கத்தார் என்று இப் பாடல் போற்றுகிறது. ஆகவும் அழிக்கவும் பாடும் ஆற்றல் மிக்கவர் அத்தமிழ்ப்புலமையோர். அகத் தியர் பெற்ற தமிழ்ச் செழுங் குதலையைச் சங்கப் பலகை என்னும் தொட்டிலில் இட்டுச் சீராட்டிக் கோதாட்டி வாழ்த்தி வளர்த்தனர். நன்னடை வாய்ப்ப இன்னகை யெழில்வீசிப் பேதைத் தமி ழணங்கும் கோதின்றி வளர்ந்தெய்தினாள். மகிழ்நனை மறுகின் மாடமதுரையில் தமிழ்நிலை நின்று தழைத்

தோங்கியது. மங்கை தமிழ் மணந்த சங்கத்துச் சான்றோரை எங்கும் எப்பொழுதும் ஏத்துதல் நம் கடனேயாகும்.

"தடவரை முனிவனீன்ற தமிழ்க்கொழுங் குழவிதன்னைப்
படர்வெயி லுமிழுஞ்சங்கப் பலகையாந் தொட்டிலேற்றி
நடைவர வளர்த்துஞால நனந்தலை மறுகில்விட்ட
மடனறு புலமையோரை மனத்தியா னினைத்துமன்றே."

உண்மைத் தமிழ்ப் புலமைகொண்ட உத்தமச் சங்கத்தார் திண்ணிய சிவநேசச்செல்வர்களாகவும் திகழ்ந்தனர். சிவனை அறியும் அறிவே தமிழ் அறிவு என்பது உண்மையல்லவா? அத்தகைய தமிழ் அறிவு சங்கத்துச் சான்றோர்களிடம் குறைவறக் கூடியிருந்தது. அவர்கள் சிவனிடத்திற்கொண்ட பற்று தூய்மையையுடையது. மலமாயை கன்மம் என்னும் பொய்யைக் களையும் மெய்யான பற்று. அதனல் சுந்தரமூர்த்தி நாயனர்,

"பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்"

என்று அவ் அறிஞர் குழாத்தை அஞ்சலித்தார். அடியார் நடுவுள் அடைந்திருக்கும் அழற்சுடர் வண்ணனும் விடாது சங்கத்தில் வளைந்து வளைந்து வந்தார். தமிழ்ப்புலவரோடு நட்புக்கொண்டார்; நகைமாடினர்; பகையாடினர்; பழகி உறைந்தார்.

ஒருசமயம் சண்பகமாறன் என்னும் பாண்டியனுக்கு ஒருசந்தேகம் தோன்றியது. தனது

மனைவியின் கூந்தலிற் கமழும் நறுமணம் இயற்கை வாசனையா, அல்லது செயற்கை வாசனையா என்று சிந்திக்கலுற்றான். ஒரு முடிவும் பெறாத நிலையில் தமிழ்ச்சங்கத்திலே ஒரு பொற்கிழிகட்டித் தொங்க விட்டான். தான் மனதிற்கொண்ட கருத்தை விளக்கித் தெளிவிக்கும் புலவருக்கு அக்கிழி உரித் தாகுக! என்று கூறிவிட்டான். அவன் கூறாது மனத்தில் அடக்கியிருக்கின்ற கருத்தை வைத்துப் பாடுவது எங்ஙனம்? சங்கப் புலவர்களும் இன்ன தென்றே தெரியாது இன்னலுற்றிருந்தனர்.

தருமி என்பவன் ஓர் ஏழைப் பார்ப்பனன். மணம் நாடிப் பணம் தேடி, மனம் நொந்தவன். மதுரைச் சோமசுந்தரக் கடவுளிடத்தில் மெய்யன்பு கொண்டவன். பாண்டியன் மனக்கருத்தை விளக் கும் ஒரு பாடல் கிடைத்தால் தனக்குப் பொற்கிழி கிடைத்துவிடுமே என்று எண்ணினான். கோயிலுக் குச்சென்று கடவுளிடத்தில்முறையிட்டான். ஆலவா யப்பரும் அருள்புரிந்தார். ஏட்டிலே தீட்டிய பாட் டொன்று பலிபீடத்திற்கு வந்தது. அக்கிழிக் கிசை கவி எடுத்து வழிக்கொண்டான் தருமி. வாட்ட முற்ற புலவரிடைவீற்றிருக்கும்மன்னனிடம்ஓலையை நீட்டினான். அம்மன்னன் மறைவாகக்கொண்ட மனக்குறையை இறைவனார் வரைந்தபாடல் நிறைவு செய்து மகிழ்வூட்டியது. சிந்தாசமுத்தியாகப் பாடிய அவ் இறையனார் பாடலை யாவரும்கேட்கப் பாடினான் பாண்டியன்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ? நீ அறியும் பூவே."

தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என்னும் நயம்தோன்ற மெய்தொட்டுப் பயின்று நலம் பாராட்டிய துறையில் அமைத்துப்பாடிய இக் கடவுட்பாடல், பாண்டியன் மனக்கவலையை அகற்றி விட்டது. அருமை மன்னவன், நிறுவிய பொற்கிழி தருமிக்கென்றலும், பொருக்கெனஎழுந்தார்நக்கீரர். குற்றமுள்ள அப்பாடலுக்குப் பொற்கிழி அளித்தல் அடாது என்று முழங்கினர். தருமிக்கு ஒன்றும் விளங்கவில்லை. பொன்னை விடுத்துத் தன்னை விடுவித்துக்கொண்டாற் போதும் என்று, நேரே கோயிலுக்கு ஓடினன். வெகு விநயமாக இறைவ னிடத்தில் முறையிட்டான். "அகதிக்குகந்த அண் ணலே! என் கைக்கு எட்டிய பொற்கிழி வாய்க்கு எட்டாது போய்விட்டது. அதற்காக நான் வருந்த வில்லை. வாலறிவனாகிய உனது பாடலுக்குச் சில் வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடைய ஒரு மனிதன் குற்றம் சொன்னனே என்றுதான் என் மனம் வருந்துகிறது" என்று இறைவனைக் கிளப்பிவிட் டான். அதனைப் பரஞ்சோதியார் பண்புறப் பாடு கிறார்.

"வறுமைநோய் பிணிப்பப் பன்னாள்
வழிபடும் அடியேன் நின்பாற்
பெறுபொருள் இழந்தேன் என்று
பேசிலேன் யார்க்குமேலாங்
கறைகெழு மிடற்றோய்! நின்றன்
கவிக்குற்றம் சில்வாழ்நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னால்
ஆருனை மதிக்கவல்லார்".

இவ்விகழ்ச்சி இறைவனாகிய நின்னையே சாரும் என்று சைவச் சிறுவன் சிந்தைநோ யுழந்து இரங்கவும், சுந்தரவிடங்கன் அங்கோர் புலவனாய்த் தோற்றம் செய்தான். ஆ! அவன் தோற்றம்தான் என்னே! அவனைச் சுற்றிலும் நின்ற கற்றுச் சொல்லிகள் கவிதைபாடினர். அவனுடைய விரி கதிர்ச் சட்டையும் தெரிமணிக் கடகமும் கண்ணைப் பறித்தன. இளையவர் அடைப்பை ஏந்தி நின்றனர். தலையிற் சுடர்முடி. கழுத்திற் கண்டிகை. மார்பிடை மதாணி. விரல்களிற் கணையாழி, காதிலோ வயிரக் குண்டலம். அவன் பொன்னார் மேனியின் பொற்பை யெல்லாம் அவ் அணிகள் வாரி விழுங்கின. அவன் விலாடத்திட்ட திருநீறு திரிபுண்டரமாகத் திகழ்ந் தது. அவ்வெண்ணீற்றின் நிலவொளி பொய் யிருளைக் கிழித்துத் தள்ளியது. நெற்றித் திருநீறு மூன்றுகோடாக விளங்கினது, முத்தமிழிலும் வல்ல புலவன்தான் என்பதை முத்திரையிட்டு முழக்கம் செய்தது.

“ கண்டிகை மதாணி யாழி
கதிர்முடி வயிரம் வேய்ந்த
குண்டலம் குடிகொண்டாகத்
தழகெலாம் கொள்ளை கொள்ளத்
தண்டமிழ் மூன்றும் வல்லோன்
தானெனக் குறியிட்டாங்கே
புண்டரம் நுதலிற் பூத்துப்
பொய்யிருள் கிழித்துத்தள்ள ”

அக்காலத்தில் சோமசுந்தரக் கடவுள் தமிழ்ப் புலவராய்த் தோன்றியருளிய திருவிளையாடலை யாம் கண்டறியோம். ஆனால் இன்றும் என்றும் எம் போலியர் கண்டு மகிழ்ந்து கையெடுத்தேத்த இச் சொல்லோவியத்தில் அச்சுந்தரவுருவனை—சொல்லற் கரியானை—உள்ளபடி தீட்டிய பரஞ்சோதியாரின் வியத்தகு கவித்திறனையும் உதவியையும் நாம் என்றும் பாராட்டுதல் வேண்டும். இப்பாடலைப் படிப்போர் மனக்கண்முன் தமிழினைத் தந்த அத்தையல்பாகன் இன்னகை ததும்ப எழிலொளி வீசி முன்னுற வருவது முற்றிலும் உறுதி.

இவ்விதம் சிவபெருமான் நன்பாட்டுப்புலவனாய் வெளிவந்து தருமிக்குப் பொற்கிழி அளித்தது வியப் பாகாது; அது தமிழின் பெறலரும் பெருமையே யாகும் என்று அகம் உருகிப் பாடுகிறார் அப்பர் அடிகள். யாருக்கும் பொன்னைக்கண்டால் கை நீளுவது இயல்பு. அதுபோல் சங்கத்தில் தொங்க விட்ட தங்கப்பொதியைக் கண்டதும் தருமி தனக்

கென்று கைநீட்டினுன். தமிழ் அருமை தெரிந்த தண்புனல் வைகைக்கோமகனும், "ஒரு தமிழ்ப் பாட்டுப்பாடு; தருகிறேன்" என்ருன். ஐயோபாவம்! நீட்டியகை வறுங்கையாய் மடங்கலாகாதே யென்று குடங்கைநீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும் படங்கொள்பாயும் அருளுகின்ற பரம சிவன் ஒரு தமிழ்ப்பாட்டுப் பாடி, அப்பொன்முடிப் பைத் தருமி கையில் வீழ்த்திவிட்டான். தமிழ் நாட்டில் தமிழுக்கே பொன்னளிப்பு, பரிசளிப்பு, உபசரிப்பு அக்காலத்தில் இருந்துவந்தது. ஆறறி விற் குறைந்தனவும் செடிகொடிகளுங்கூடத் தமிழ் உணர்ச்சி பெற்றிருந்தன என்பதை இயற்கை யிலேயே கண்டார் வாகீசப்பெருந்தகையார்.

திருப்புத்தூரையடுத்த காட்டிலே கொன்றை குலுங்கப் பூத்துப் பொன்மயமாய்ச் சுடர்விட்டிலங் கியது. நல்ல வட்டுவட்டான மஞ்சள் மலர்கள் வண்ணப்பொதியவிழ்த்த வடிபொற் காசுகள்போல் பொலிந்திலங்கின. பொன் என்றவுடனே அருகில் நின்ற செங்காந்தள் கைநீட்டுவதுபோல் அழகுறப் பூத்து நின்றது. மலர்ந்த கொன்றையில் மதுவுண் ணும் வண்டு இமிழென்றிசைத்துத் தமிழ்ப்பாட்டுப் பாடியது. இனிமைநோக்கித் தமிழுக்குத் 'தென்' என்றும் ஒரு பெயர் உண்டு. அதனுல் அது தென் மொழி என்றும் வழங்கப்படும். தென்திசைமொழி என்பதோடுகூட, இனிமையையுடைய மொழி என் றும் அதற்குப் பொருள் உண்டு. "தென்ன தென

என்று வண்டு முரல் திருவேங்கடம்" என்று நம்மாழ்வாரும் பாடியருளினர். தமிழ்ப்பாட்டில் மகிழ்ந்து, நீட்டிய கரம்போன்ற காந்தள்மலர்மீது கொன்றை பொலபொலவென்று பொன்னைச் சொரிந்தது. அக்காட்சி திருநாவுக்கரசருக்குக் கூடலம் பெம்மான் தருமியின்கையிற் பாண்டியன் பொன்சொரியும்படி தமிழ்ப்பாட்டுப் பாடிய வண்மையை நினைவூட்டியது. அந்நிகழ்ச்சியையும் காட்சியையும் அழகுற அமைத்து அருமைத் தேவாரமாகப் பாடிவிடுகிறார்:—

"மின்காட்டுங் கொடிமருங்குல் உமையாட்கென்றும்
விருப்பவன்காண்பொருப்புவலிச்சிலைக்கையோன்காண்
நன்பாட்டுப் புலவனைச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கேநின்ற
புனக்காந்தள் கைகாட்டக்கண்டு வண்டு
*தென்காட்டும் செழும்புறவிற் றிருப்புத்தூரில்
சிவனவன்காண் அவன்என் சிந்தையானே."

"குழல்வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே"

என்று கம்பரும் பாடினர்.

இவ்வாறு தமிழ்ப்புலவர்களோடுஉறவுகொண்டு அவர்களுடன் கலந்து தமிழ் மாந்தி இன்புற்றான் இறைவன் என்று கூறுவது தமிழ்நாட்டில் சிவநெறியினர்க்கு மட்டுமே உள்ள ஒரு வழக்கு என்ப

---

*தென் - தமிழ்.

தில்லை. வைணவர்களும் இவ்வாறே திருமாலைப் பராவினர். திருமழிசையாழ்வார் என்னும் செந் தமிழ்ப் புலவர் காஞ்சிபுரத்திலே இருந்தார். அவ ருடைய மாணாக்கராகிய கணிகண்ணனை ஒரு பல்லவ மன்னன் பார்த்து "உமது குருவை என்னிடம் அழைத்துவாரும்" என்றான். 'அவர் வாரார்' என்று கணிகண்ணன் மறுக்கவும், தன்னையாவது அவரிடம் அழைத்துப்போக வேண்டினான் அப்பல்லவன். அதற்கும், 'அவர் பாரார்' என்று கணிகண்ணன் மறுக்கவும், மன்னன் "நீராவது ஒருபாட்டுப் பாடி எனக்கு இளமை அளிக்கவேண்டும்" என்று கெஞ் சினான். "நான் நாராயணனைப் பாடும் வாயால் நரனைப் பாடமாட்டேன்" என்றார். பல்லவன் பல்லை நெறுநெறுவென்று கடித்தான். சீறிச் சினந்து துடித்தான். உடனே, "என் நாட்டைவிட்டு வெளி யேறு" என்ற ஆணை பிறந்தது. அதைக் கணி கண்ணன் ஆழ்வாரிடம் தெரிவிக்கவும், அவர் "நானும் பெருமாளை எழுந்தருளச்செய்துகொண்டு உன்னுடன் வருவேன்" என்று,

"கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீகிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்"

என்று பாடிக்கொண்டே புறப்பட்டார். தனது பாம்புப் படுக்கையைச் சுருட்டிக்கொண்டு திரு மாலும் புலவரைப் பின்தொடர்ந்து வெளிக்கிளம்

பினர். அதுகண்டு வருந்திய பல்லவன் ஆழ்வாரின் அடிபணிந்து குருவையும் சிடனையும் மீட்டுக்கொண்டு வந்தான். ஆழ்வாரும்,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீகிடக்க வேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்"

என்று பாடிப் பெருமாளையும் அழைத்துக்கொண்டு திரும்பிவந்தார். திருமாலுக்குத்தான் தமிழ்ப்புலவரிடத்தில் என்ன அன்பு! தமிழினிடத்தில் எவ்வளவு பிரியம்! தமிழ்ப்புலவனுக்குப் பின் நீலவண்ணன் சென்ற கோலவண்ணந்தான் எத்தகையது! பள்ளி கொண்ட பரந்தாமன் புள்ளிகொண்ட பாம் பணையை அள்ளியெடுத்துப் பிடரியிலே மெள்ள இருத்திக் கிளம்பிவிட்டார். பாம்போ நழுவிநழுவி விழுகின்றது. அவரோ அதைத் தழுவித்தழுவித் தாங்கி நடக்கிறார். நையும் இடை ஒசியக் கையணையைச் சுமந்துகொண்டு தையல் திருமகள் பையவே செல்கிறாள். வேதங்களும் ஆற்றாது ஓவென்றரற்றின. இதற்குள் தாமரைக்கண்ணனின் தண்துழாய் மாலை தேனைப்பொழிந்து வழியெல்லாம் கழனிபோற் சேறாக்கிவிட்டது. பின்னும் விடாது பின்தொடர்கிறார் திருமால்.

இவ்வாறு பைந்தமிழ்ப்பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலைக் குமரகுருபரர் இச்சைகொண்டேத்தும் மெச்சுபுகழ்த் தமிழ்க்கவிதைவருமாறு:—

“மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டுமோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமானத்து
வாலுளை மடங்கல்தாங்கும்
அணிகொண்ட பீடிகையின் அம்பொன்முடி முடிவைத்தெம்
ஐயனொடு வீற்றிருந்த
அங்கயற் கண்ணமுதை மங்கையர்க் கரசியை எம்
அம்மனையை யினிதுகாக்க
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறுசெய்யக்
கழனிபடு நடவையிற் கமலத்தணங் கரசொர்
கையணை முகந்துசெல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்தலைப்பப்
பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே.”

நாகணைப்பள்ளியை வேகமாய் எழுந்து சுருட்டி யெடுத்து விருட்டெனக் கிளம்பிய விமலனின் கோலம் அழகுற இங்கே சித்திரிக்கப்படுகின்றது. விண்டுவைத் தண்டமிழ் தொடர்ந்ததோ? தண்டமிழை விண்டுதான் விரைந்து தொடர்ந்தனனோ என்று வியக்கிறது தமிழ்விடுதூது:—

“ஆடாவத், தாழ்பாய லாளரைநீ தானேதொடர்ந்தாயோ?
சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ?”

பண்ணாரின்றமிழ்

தமிழ் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் ஒருமொழிவைத்துலகாண்ட அந்நாளில், அன்னாரின் அரசவைகள் இன்னொலி யரவம் படைத்து இசை மயமாய் விளங்கின. காலை என்றும் மாலை என்றும் பகல் என்றும் இரவு என்றும் வேற்றுமையின்றி, எக்காலத்தும் இசைச் செல்வத்தில் மூழ்கிக்கிடந் தனர். அதனால் அவர்கள் அவையில் அமர்ந்து இசையை எக்காலமும் கேட்கின்ற செல்வத்தினை யுடையவர்கள் என்பதை,

"இசைபெறு திருவின் வேத்தவை"

என்று மலைபடுகடாம் என்னும் நூலிற் கூறப்பட் டுள்ளது.

இவ்விதம் நமது தீந்தமிழ் மொழியானது ஏழிசைச் சூழலில் எழிலுற்றமர்ந்து இலங்கி யொளி ரும்நாளின்கண், கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கு மேல், வடநாட்டிலிருந்து சமணமதத்தினர் நம்நாட் டினுட் புகுந்து, தமது மதக்கொள்கையாகிய பசை யற்ற கண்ணியிலே தமிழ் மன்னர்களை வீழ்த்துத் தம்வயப்படுத்தினர். உலகியல் இன்பங்களை வெறுத் தொதுக்கிய அன்னவர், "பாட்டு காமத்தை விளை விக்கும். பாட்டும் கூத்தும் காமத்திற்குத் தீபனம்"

என்று போதனைகள்செய்து, தமிழிசை வளர்ச்சிக்கு இடையூறு விளைவித்தனர். இதை, "கிளைநரம் பிசையுங் கூத்துங் கேழ்த்தெழுந்தீன்ற காம விளை பயன்" என்னும் சீவகசிந்தாமணிக் குறிப்பாலும் அறியலாம்.

இவ்விதமாக மூன்று நூற்றாண்டுகள் இசைத் தமிழ் இடருற்று எழில் சாம்பித் தளர்ந்துவந்தது. தமிழ் முழுமுதற்கடவுளாகியசிவபெருமானைத் தமிழ் மக்கள் இசைவடிவாகவே வைத்து வணங்கி வந்த வர்கள். சமணர்கள் இசை வளர்ச்சியைத் தடுத்தது சிவநெறியையே தூர்த்ததுபோலாயிற்று. தமிழ் நாட்டிற் பலரும் சமண்சமயத்தைச் சார்வாராயினர். பண்டளவு எழுநரம்பின் ஓசையனுப் பண்ணார்ந்த இன்னிசைகள் பாடியாடும் பரம்பரனார் இதைப் பார்த்திருப்பாரா? சிவநெறிவிட்டுச் சமண்வழி யடைந்தோரில் மருணீக்கியார் என்பவரும் ஒருவர். சிவபெருமான் இம் மருணீக்கியாரைக் கொண்டே தமிழிசைப் பயிரைப் புரந்தருள நினைத்தனர் போலும்! அதற்கு இறைவன் ஒரு சூழ்ச்சிசெய்தார். அதாவது மருணீக்கியார் வயிற்றில் சூலைநோயை மடுத்தருளினர். தமது வயிற்றுநோய் சமணர்களது மருந்து மந்திரங்களுக்கு மாளாது, குடரோடு துடக்கி முடக்கிக் குமைவதைக்கண்டு, சிவனது நன்னெறி உய்க்கும் இன்னிசைப் பைந்தமிழ்ப் பாடலே மருந் தாகித் தீர்க்கவல்லது என்பதை மருணீக்கியார் உணர்ந்தார். உடனே அலறித் துடித்துத் திரு வதிகை வீரட்டம் மேய சிவக்கொழுந்தின் திருமுன்

சென்றடைந்தார். "கூற்ருயினவாறு" என்னும் தெய்வத்தமிழ்ச் செந்தொடைப் பதிகத்தை உளங் கனிய உவந்துருகிப் பாடினர். அப்பதிகத்தின் ஆருவது பாடல் வருமாறு:—

"சலம்பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னுமம் என்னுவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே."

"இனி ஒருபோதும் தமிழிசையை மறக்கமாட்டேன்; தமிழ்ப் பாமாலைகளை இனிதினிசைத்து உன்னை ஏத்தித்தொழுவேன். சழக்குடைச் சமணரைச் சாரமாட்டேன்" என்று அவர் ஆணையிட்டு அழுங்குவதைக்கண்டு சிவபெருமான் இரங்கினர். அவர் செந்தமிழ்ப் பாடலைக்கேட்டு மகிழ்ந்தார். தமிழிசை சிவபெருமான் உள்ளத்தைக் குளிர் வித்தது. ஆற்ருத சூலையும் காற்ருய்ப் பறந்தது. மருணீக்கியாரும் 'திருநாவுக்கரசு' என்று உலகு ஏழும் போற்றும் திருநாமம்பூண்டார். என் அப்பன் என்னைப்பாடினுன் என்று எம்பெருமான் திருநாவுக் கரசைக் கொண்டாடினர். அதுமுதல் தேவாரத் திரு இசைப்பாக்கள் தெருவெல்லாம் முழங்கின. வெஞ்சூலையைப் பஞ்சாய்ப் பறக்கடித்த செஞ்சொற்

றமிழிசையின் சீர்மைதான் என்னே! இன்றும் அப் பதிகத் திருப்பாடல்களை உள்ளுருகிப் பாடினல் கொடுவெங் நோய்களும் கடிதின் அகலும் என்பதை அறிஞர்கள் அறிவார்கள்.

திருநாவுக்கரசரோடு ஒத்தகாலத்தவராய் விளங் கியவர் திருஞானசம்பந்தர். அவர் மூன்றுவயதி லேயே ஞானமுதம் உண்டு தேனமுதப் பாக்களால் இறைவனை மகிழ்வித்து, இன்னிசையால் நாடெங் கும் தமிழ் பரப்புவதையே தமது தொண்டாகக் கொண்டிருந்தார். அவர் பாடியுள்ள முதற்பாட லாகிய 'தோடுடைய செவியன்' என்பதை "இம் மாநிலத்தோர் களிசிறக்கப் பாடிய மல்லல் நெடுந் தமிழ்" என்று சேக்கிழார் வாயாரப் புகழ்கின்றார். திருக்கோலக்கா என்னும் பதியிலே கையினல் தாள மிட்டு இன்றமிழ்ப்பாடலை ஆளுடையபிள்ளையார் பாடக்கேட்டு அகங்குழைந்த சிவபெருமான் ஞானப் பிள்ளைக்குக் கை நோகாவண்ணம் பொற்றாளமீந்து பேரருள் காட்டினர். சிவபெருமான் இவ்வாறு தமிழ்ப்பாட்டுக்கு உருகி அருள் சுரந்த திறத்தைத் தம்பிரான்தோழர் எனப் புகழ்வாய்ந்த சுந்தர மூர்த்திநாயனர்,

"நாளு மின்னிசையாற் றமிழ் பரப்பு
ஞான சம்பந்தனுக் குலகவர் முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை யென்மனக் கருத்தை

ஆளும் பூதங்கள் பாடவின் ருடும்
அங்கணன்றனை யெண்கண மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே''

என்னும் தேவாரப் பாடலிற் போற்றிப் பாராட்டக் காணலாம்.

ஞான மணிவிளக்காகிய சம்பந்தர் இசைக் கலையில் மிக வல்லுநராய் விளங்கினர். மலரும் மணமும்போலத் தமிழும் பண்ணும் தம்முட் கலந்து இனிதினிசைந்து இன்னெலிகொண்டு இறையொளி வீசி இன்புறுத்தும் வண்ணம் அருட்பாசுரங்களை அடுக்கடுக்காய்ப் பாடிவந்தார். திருநீலகண்ட யாழ்ப் பாணர் என்னும் இசைவல்லார் சம்பந்தரை விடாது பின்சென்று, அவர் பாடல்களுக் கிசையத் தாம் யாழ் மீட்டிப் பருந்தும் நிழலும் போலப் பாட்டொடு பண்ணைப் பொருத்திப் பரிமளிக்கச் செய்தனர். அவ்விசை வல்லார் ஒருமுறை தருமபுரம் என்னும் தலத்தில் சம்பந்தர் பாடிய யாழ்மூரிப் பாடலைத் தமது யாழில் அமைத்துப் பாடமுடியாது திகைத்து யாழைத் தரையில் மோதித் தகர்க்க முயன்றார். அதனைக் காழிப்பிள்ளையார் தடுத்து "இறைவன் என்னுள்ளிருந்து என்னைப் பாடவைத்த தமிழ் மறைப் பாடல்களை நாம் இயன்றவரை யாழில் அமைத்துப் பாடவேண்டுமே யன்றி, முற்றிலும் பொருந்தப்பாடுதல் நம்மனோர்க்கு இயலாது. சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை செயலளவில்

எய்திவிடுமோ? அதனுல் மனம் தளரற்க" என வேண்டுமொழி கூறித் தேற்றினுர். இதைச் சேக்கிழார் கூறுவது காண்க:—

"ஐயர்நீர் யாழிதனை முரிக்குமதென்
ஆளுடையா ளுடனே கூடச்
செய்யசடை யாரளித்த திருவருளின்
பெருமையெலாந் தெரிய நம்பால்
எய்தியஇக் கருவியினில் அளவுபடுமோ
நந்தம் இயல்புக் கேற்ப
வையகத்தோ ரறிவுறஇக் கருவியள
வையினியற்றல் வழக்கே யென்றுர்".

தேவாரப் பாடல்கள் மனித நிலையைக்கடந்த தெய்வத் திருமறைகள். எண்ணிறந்த பண்களைத் தம் அகத்தே கொண்டுள்ளன. அவற்றைப் பாலரு வாயரும் பண்மிழற்றிப் பாடலாம். இசைக்கலையின் உயரிய நிலையில் நின்றேரும் உணர்ந்தோதற்கரி தாய் வீறிட்டோங்கியும் நிற்கும். அவை இறைவ னருளாற் போந்தவை யென்பதையும், இசைத் திறனின் இறந்த வெல்லையை முடியக்கண்ட பண் களைத் தம்முட்கொண்டன என்பதையும் உலகிற்கு எடுத்துக்காட்டவே மேலே கூறிய தருமபுர நிகழ்ச்சி நடந்ததாகும். இதனைக்கொண்டே சேக்கிழாரும் காழியர்கோனை, "தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங் கானத்தின் எழு பிறப்பு" என்று போற்றிப் புகழ்ந்தார்.

அப்பரடிகளும் ஆளுடையபிள்ளையாரும் ஒரு காலத்தில் திருவீழிமிழலை என்னும் தலத்தில் கூடியிருக்க நேர்ந்தது. அங்கு அவர்கள் நாள்தோறும் கோயிலுக்குச்சென்று சிவனார்மனங்குளிரத்தமிழ்ப் பாடல்களைப் பாடிவந்தனர். அப்பொழுது நாட்டிற் பஞ்சம் உண்டாகி மக்கள் உணவுகிடையாது வருந்தினர். தமக்கு அடியார்கள் நித்தலும் நடத்திவரும் தமிழிசைவிருந்து எங்குத் தடைப்படுமோ என்று திருவீழிமிழலை கோயில்கொண்டார்க்குக் கவலை ஏற்பட்டது. உணவுப்பஞ்சம் வரினும் இசைக்குப் பஞ்சம் வரலாகாதே என்று இறைவன் திருவுளங் கொண்டு, அப்பருக்கும் சம்பந்தருக்கும் வைகலும் ஒருபொற்காசு கோயிற் பீடத்தில் வைத்தருளினர். இவ்விதமாக அடியார்களுக்கு உணவுவருத்தம் நேராதபடி ஆதரம் காட்டித் தமிழ்தழீஇய இன்னிசையைத் தடையின்றி இறைவன் நுகர்ந்து மகிழ்ந்தார் என்பதைச் சுந்தரமூர்த்திகள் மெய் சிலிர்க்கப் பாடி வழுத்துவதைக் காணலாம்:—

“ பரந்த பாரிட மூரிடைப் பலி
பற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்
கிடமாய திரு மிழலை
இருந்துநீர் தமிழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தநல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர்
அடியேற்கும் அருளுதிரே.”

இப்பாடலில் தொனிக்கும் நயங்களைச் சிறிது நோக்குதல் பெரிதும் பயனுடையதாகும். சிவ பெருமானுக்கு அணுக்கத்தொண்டராயுள்ள பரிவாரங்களாகிய பூதகணங்கள்கூட உணவுக்குவழியின்றி யாரெல்லாம் பிச்சையெடுத்துண்ணுகின்றன. வட மொழி வேதங்களையும் விடாது அந்தணர்கள் சிவ பெருமானிடத்தில் ஓதியோதித்தான் பார்க்கின் றனர். ஆனால் அவையொன்றும் சிவபெருமான் திருச்செவியில்விழவில்லை. சிவனார் கவலையற்றிருந்து இசைத்தமிழைப் பருகுவதையே நினைத்தார்; பூதங் களின் வறியநிலையையும் மறந்தார்; வேதங்கள் அறிவதையும் துறந்தார்; பொற்காசுகளைத் தமி ழாளிகளான வாகீசருக்கும் காழிவள்ளலுக்கும் வழங்கினார். இக்கருத்துக்கள்தெரிய, சுந்தரர்பாடிய பாடலை அறிஞர்கள் போற்றுவார்களாக.

திருஞானசம்பந்தர் தமிழோடிசை கேட்கும் இச்சைவாய்ந்த இறைவனைத் திருவீழிமிழலையினுள் தமது ஞானக்கண்கொண்டு துருவித் தேடினார். இறைவனும் தமது உண்மைவடிவினை விரித்தருளி னார். சம்பந்தர் கண்டதென்ன? தீந்தமிழின் திற மனைத்தும் தானேயாகித் தமிழ்ப்பண்ணும், ஏழிசை யும், சுவையும், தாளமும், ஓசைஒலியெல்லாம் ஒரே தமிழ்மயமாகி, இறைவன் சுடர்விட்டு விளங்கக் கண்டார். பண்ணார்ந்த தமிழனைத்தும் கண்ணார்ந்த உருவாகி இறைவன் காட்சியளித்தார். பரவசரான சம்பந்தப்பெருமான் உள்ளத்தினின்றும் சொல் ஓவியமாய்ப் பாடல்பொங்கிப் பெருகியது:—

"பண்ணும்பதம் ஏழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையும்உறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழலையே."

இத்திருப்பாடலில் அந்தரத்தகிலகோடியண்டங்கள் எல்லாம் தானேயாகிப் பரந்துநிற்கும் பெம்மான் திருவீழிமிழலைப்பதியின் சிறுகோயிலினுள்ளே இன்றமிழின் இசைக்கு உருகி இழைந்து நிற்கும் கோலத்தை ஞானபோனகர்கண்டுகளித்துக் கவினுறச் சித்திரித்திருப்பதை நாம் என்றும் மறத்தல் கூடாது.

இவ்வாறு நம்சமயகுரவர்கள் அனைவரும் தமிழ் நெறியையும் தமிழ்மொழியையும் ஒற்றுமைப்படுத்தி ஒன்றவைத்து ஒருமை செய்தே தம் உணர்வில் இருத்தினர். மொழியின்றிச் சமயம் இல்லை. சமயத்தைச் சாராத மொழியும் பழியேயாகும். தமிழர் மொழியினின்றும் தமிழர் சமயத்தைப் பிரித்தலொண்ணாது; அவ்விதம் பிரித்தால் உயிர் நீங்கிய உடலம்போல் ஒளிகுன்றிவிடும். உண்மையில் உயிர்த்து ஒளிராநிற்கும் தமிழர் நெறிக்குத் தமிழ்மொழி இலக்கியமும் இசையும் ஊன்றுகால் இரண்டாய் அமைந்துள்ளன. தமிழ் மொழிக்கு ஏற்கும் சிறப்பெல்லாம் தமிழ் இறைவனுக்கும் ஏற்புடையன.

"முத்திக் கனியே! என் முத்தமிழே!—புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே!"

என்று தமிழைப்போற்றுதல்போல் சிவபெருமானை யும்,

"முத்திக் கனியே! என் முக்கணனே!—புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே!"

என்று போற்றுதல் மிகவும் பொருந்தும். தமிழ் புத்திக்குள் உண்ணப்படுந் தேன். சிவனும் அறி வாலே கண்டு அறிவால் நுகரும் அறிவுப்பொருளா கவே இருக்கிறான். இக்கருத்துப்பற்றியே திருவள்ளு வரும் இறைவனை 'வாலறிவன்' என்று வணங்கினர். சிவானந்தப்பெருக்கோடிய செல்வர்கள் இறை வனைத் தத்தமக்குள்ளேயே தேடிக் கண்டு கொண் டாடினர். தாயினும் நல்ல சங்கரனுக்கன்பர் ஆய உள்ளத்தமு தருந்தப்பெற்ற அப்பரடிகள் தமது உணர்வுமயமாயிருக்கும் இறைவன், உள்நின்ற நாவை உரையாடச்செய்து தமிழ் பாடவைத்து அப் பாட்டிற் பண்ணைப் பயின்று நிற்கிறான் என்ற உண்மையைத் திருக்கருகாவூர்ப் பாடலில் நன்கு விளக்கியுள்ளார்:—

"குருகாம் வயிரமாம் கூறு நாளாம்
கொள்ளுங் கிழமையாம் கோளே தானும்
பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்
ஒருகா லுமையா ளோர் பாகனுமாம்
உள்நின்ற நாவிற் குரை யாடியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றுங்
கண்ணும் கருகாவூ ரெந்தை தானே."

அப்பரடிகள் இவ்வாறு பாடி வணங்கிச் சென்ற சின்னுளைக்குப்பின் அத்திருக்கருகாவூர் சென்றடைந்த திருஞானசம்பந்தருக்கு அப்பர் பாடிய இப்பாடல் தெரியவந்தது. அதைமறவாமல் நினைவில்வைத்துக்கொண்டே, அப்பர் "பாட்டிற் பண்ணும்" என்று பரிந்து பழகி உருகிக் குழைந்து அழைத்துப்பாடிய கருத்தினைத் தமது பாடலிற் செவ்வனே அமைத்து அழகுறத் தீட்டியுள்ளார்:—

"பழகவல்ல சிறுத் தொண்டர்பா வின்னிசைக்
குழகரென்று குழை யாவழை யாவரும்
கழல்கொள் பாடலுடை யார்கரு காவூரெம்
அழகர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே."

செந்தமிழ்த்திறனும் ஓசையும் இப்பாடலில் எங்ஙனம் குழைந்து இழைந்து விழைந்து வளைந்து வளைந்து வட்டமிடுகிறது என்பதை அன்பர்கள் பாடிச் சுவைத்துக்காணலாம். இவ்வாறு இமிழென்றிசைத்து அமிழ்தின் இனிக்கும் சம்பந்தர் பாடல்கள் செந்தமிழ் உறைப்புப்பெற்ற செம்பொருட் பாடல்கள் என்பதைத் திருநாவுக்கரசரே தமது தேவாரத்தில் வியந்து போற்றி விம்மிதங்கொள்கிறார். அத்தகைய செந்தமிழ்வீரகர்முன் இறைவன் மறைந்து நிற்கவும் முடியாது என்று மகிழ்ந்து கூறுகிறார். அப்பாடல் வருமாறு:—

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்

மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.''

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் ஒரு பாட்டுப்பாடுமுன் கதவை அடைக்கும்படிசெய்தவர். ஆகவே காலம்தாழ்த்தித் திறக்கப்பாடிய தன்னை விட அவர் செந்தமிழ் உறைப்புப்பெற்ற பாவலர் என்றும், அவர்முன் சிவன் தன்னை ஒளிக்க நினைத் தால் அவர் பித்தர் என்றும் நயம்பட அப்பர் பாடி யுள்ளார்.

சிவபெருமானது திருவருட்கடலில் திளைத்தாடி இன்பம் நுகர்ந்த பெரியார்கள் எல்லாரும் கண்டு களித்த உண்மை இதுதான். அதாவது, வேதங்கள் அண்ணா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஞான கண்ணுதற்கடவுள் இசையுருவினனாய்த் தமி ழிற் கலந்து இன்பமூட்டி இன்னருள் சுரக்கிறான் என்பதே. இதை நம்பியாரூரர் நமக்கு அறிவூட்டும் முறை சாலச்சிறந்தது. அவர்காலத்தில் திருவாரூர் சோழவரசர்களின் தலைநகராய் விளங்கியது. களிக் கின்றாரலாற் கவல்கின்றார் ஒருவரும் அங்கில்லை. இசைக்குருகும் இறைவனை மங்கலகீதங்கள்கொண்டு மங்கைமார் மனமாரப் பாடி எழிலார ஆடி இன்பம் தேக்கினர். அவர்கள்பாடிய பாடல்கள் கல்லெனும் ஒலிபடைத்து விண்ணோரும் விழைய உயர்ந்து கிளம்பின. இதைச் சம்பந்தரே கண்டு வியந்து கூறியுள்ளார்:—

"விண்டவெள் ளெருக்கலர்ந்த வன்னிகொன்றை மத்தமும்
இண்டைகொண்ட செஞ்சடை முடிச்சிவன் இருந்தவூர்
கெண்டைகொண் டலர்ந்தகண்ணி ஞர்கள்கீத ஓசைபோய்
அண்டரண்ட மூடறுக்கும் அந்தணூரூர் என்பதே."

அத்தகைய ஆரூரில் நெடுநாள் வாழ்ந்து பரவையாருடன் இன்புற்றிருந்த சுந்தரருக்குத் திருவொற்றியூரில் குடிகொள்ள மனம்கொள்ளவில்லை. அங்கே சங்கிலியாருடனிருந்து இன்பம் துய்த்துங்கூட, ஆரூர் இறைவனை எவ்வாறு பிரிந்தாற்றுவேன் என்று தவித்துருகிப் பாடலானர்:—

"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரூர் இறைவனையே."

இவ்வாறு அவர் துயருற்றுத் திருவொற்றியூரைவிட்டுத் திருவாரூர் நோக்கி விரையலுற்றார். ஆனல் அவர் அங்ஙனம்செய்து, சங்கிலியாருக்கு முன்பு தான் மகிழமரத்தடியில்வைத்துக் கொடுத்த ஆணைக்கு மாருக நடந்துகொண்டதால், அவர் கண்கள் இரண்டும் பார்வையை இழந்தன. அதற்கு அவர் பெரிதும் வருந்தி இன்றமிழ்ப்பாமாலைகளை இறைவன்மேல் தொடுத்து வேண்டினர். காஞ்சிபுரத்தில் வைத்து அவருக்கு ஒருகண் பார்வை வந்தது. அதற்கொண்டு தாழ்க்காது திருவாரூரை நெருங்கி, "தமிழ்வல்லார் பாடும் பாடலின் இசை

யொலி யுருவினனை ஆரூரமர்ந்தானை நான் என்று சென்றடைவேன்!'' என்றுஏங்கிக்கொண்டு தரியாது விரைந்து அவ்வூர் இறைவனை அடைந்தார். அப் பாடல் வருமாறு:—

''சூழொளி நீர்நிலந்தீத் தாழ்வளி யாகாசம்
வானுயர் வெங்கதிரோன் வண்டமிழ் வல்லவர்கள்
ஏழிசை ஏழ்நரம்பி னோசையை யாரூர்புக்
கேழுல காளியைநான் என்றுகொல் எய்துவதே.''

முன் ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' என்று பாடிய வன்றொண்டர், அதை நன்குவிளக்கி, நமக்கு அறிவிப்பவர்போல் இப்பாடலில் 'வண்தமிழ்வல்லவர்கள் ஏழிசை, ஏழ்நரம்பின் ஓசை' என்று விரித்துப் பாடுகிறார். இதனால் தமிழிசையின் சிறப்பு யாதொரு களங்கமுமின்றிக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சந்தம் பலவும் பாடும் அடியாரான சுந்தரர், கன்று முட்டியுண்ணச் சுரக்குங்காலி போன்று என்றும் முட்டாதுபாடும் தமிழ்விரகர். அவரன்னவரே தமிழிசையின் மாண்பினை மயக்கற உணர்ந்தவர்கள். அவர்களே அதைப்பற்றிப் பேசுதற்கும் உரியார்கள். கட்சிக்காகக் கண்ணழித்துப் பேசும் கூற்றுக்கள்போன்று இவ்வடியார்களின் அனுபூதிநிலைப் பாடல்களையும் கொள்ளலாகாது. சுந்தரர் திருவாரூர் சென்றதும் மற்றொருகண்ணையும் பெற்றார்.

இழந்தகண்ணை மீண்டும் தந்தது தமிழிசைப் பாடல் அல்லவா? ஆதலால் சுந்தரர் தமிழிசைப்

பாடலையே கண்கண்ட கடவுளாகப் போற்றிக் கொண்டாடினர். தமிழ்ப்பாடலே துன்பம் அகற்றி இன்பம் பெருக்கவல்லது. தமிழ்ப்பாடலே இறைவன்; தமிழ்ப்பாடலே வேண்டிய வேண்டியாங்களிக்கும் விழைதகுபொருளாகிய இறைவன் என்பதை, அவர்பாடிய:—

"கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணா ரின்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே"

என்னும் திருத்தமிழ்ப்பாடலில் திருந்த அறியலாம். இறைவன் பண்ணார் இன்தமிழாய பரிசுடையான் என்று கூறுவதிலிருந்து சுந்தரருடைய அழுத்தமான தமிழ்மொழிப்பற்றும் இசைஞானவுணர்ச்சியும் நன்கு புலனாகும். இன்னும் அவரது முதிர்ந்த அநுபவ உணர்ச்சியுடன் உள்ளளைந்து எழுகின்ற ஒரு பாடல் உண்டு. இறைவனையும் தமிழையும் ஒன்றுபடுத்தி அவ்வொற்றுமைக்கலப்பில் தானும் கலந்து களித்தவர் சுந்தரர். சிவபெருமான் அவருடைய துரிசுகளுக்கெல்லாம் உடனாயிருந்து, தோழனும், தொண்டனும், தூதனுமாகி அவர் விரும்பியபடியெல்லாம் நடந்தது, அவ்விறைவனுக்குத் தமிழிசை மேலுள்ள தணியாவேட்கையன்றி வேறொன்றுண்டோ? 'தூமறைபாடும் வாயார்' என்னப்படும் சிவபெருமான் வன்மைபேசிய வன்றொண்டரை வலிய ஆட்கொண்ட அந்நாளிலேயே மீளா அடிமை

யான சுந்தரரிடமிருந்து தான் பெறவிரும்பியது தமிழிசைப்பாடலேதான் என்பதைச் சேக்கிழாரும்,

“மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னுநாமம்
பெற்றனை நமக்குமன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க
அர்ச்சனை பாட்டேயாகு மாதலான்மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும்வாயார்”

என்று இனிதுகூறியுள்ளார். அவ்வானவர்கோனும் வாலறிவனுமான சிவபெருமானை வளைத்தாடல் கண்டது சுந்தரருடைய உருக்கம் மிகுந்த தமிழ்ப் பாடல் அல்லவா? அத்திருத்தகுபாடல் எங்கே உண்டு, அங்கே சிவனும் உண்டு. கண்ணிடை மணி போலும், பழத்தினிற் சுவைபோலும், பண்கலந்த தமிழின் உள்கலந்து நிற்கிறான் இறைவன். இவ் உண்மையை நம்பியாரூரர் நவிற்றிய,

“பண்ணிடைத்தமிழொப்பாய் பழத்தினிற்சுவையொப்பாய்
கண்ணிடை மணியொப்பாய் கடுவிருட் சுடரொப்பாய்
மண்ணிடை யடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே”

என்னும் நல்லிசைப் பாடலாலும் தெள்ளிதின் உணரலாம்.

இவ்வாறு தமிழிசைப்பாடலிற் கரைந்துருகித் திளைத்த சுந்தரருக்குப் பார்க்கும் இடமெங்கும் பண்ணார்தமிழ்ப்பாடலே பயின்று பரந்து காட்சி விருந்தூட்டியது. இயற்கையன்னையின்வளம் குலுங் கும் திருக்கேதாரம் என்னும் தலத்தில் ஆளுடைய

நம்பி பத்துப்பாடல்கொண்ட ஒரு தேவாரப்பதிகம் பாடியிருக்கிறார். அங்கு இயற்கையின் எழில்தவழும் புதுமைதான் என்னே! எங்கும் மலர்ச்சோலை; மணிச்சுனைநீர்; மகரந்தப்பொடிதவழும் மந்தமாருதம் வந்து கொஞ்சியது; கிளியினம் வாழையொண் கனி கிறியுண்டு கூவின; களிற்றினம் சுனைநீர்களைத் தூவி மழையைப் பொழிந்தன; மழைகண்டு மயில் இனம் ஆலின; மானினம் நிலத்தைக்கிளைத்து மணியைச் சிந்தின; களிறு முதுவேய்களை முளையிறுத்து முகமன்சொல்லிப் பிடியூட்டின; வந்துலாவிய தென்றலைத் தடவி முதுவேய் முழவதிர்ந்து பண்ணார் தமிழிசைப்பாடலைப் பயின்றன; தமிழ்ப்பாடலுக் குருகிக் கண்ணொளிபோன்ற கனகச்சுனைகள்வயிரம் சொரிந்தன; மதவேழங்கள் மணியைவாரிவழங்கின. நாம் பதிகம்முழுவதையும்படித்து இன்புறவேண்டும். ஒரு செய்யுளைமட்டும் இங்குக் காண்போம்:—

"பண்ணின்றமி ழிசைபாடலின் பழவேய்முழ வதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனை வயிரம்மவை சொரிய
மண்ணின்றன மதவேழங்கண் மணிவாரிக்கொண் டெறியக்
கிண்ணென்றிசை முரலுந்திருக் கேதாரமெ னீரே."

இசையென்பது மின்சாரம் போன்றதொரு சக்தி. மின்சாரத்தைக்கொண்டு உணவை ஆக்கலாம்; ஊர்தியை இயக்கலாம்; விளக்கை எரிக்கலாம்; இன்னும் பலவாறு பயன்படுத்தலாம். அதுபோல் இசையின் உதவியால் பாம்பை ஆட்டலாம்; யானையை அடக்கலாம்; கள்வர் கதத்தைக் கழல வீசலாம்; வெஞ்சமருக்கஞ்சாவீரத்தை எழுப்பலாம்;

பட்டமரத்தைப் பசுமைப்படுத்திப் பழுமரமாக்கலாம்; தீராநோயையும் தீர்த்துவைக்கலாம். சமணர் கூறுவதுபோல், காமக்கனலைக் கதழமூட்டலாம்; ஒன்பான்சுவையையும் உள்ளத்தூட்டலாம். இவை ஒவ்வொன்றும் சிறந்ததொரு செயலேயாயினும், இவற்றையெல்லாம் வெறுமிதாக்கும் வண்ணம் இன்னுமொரு சிறந்தபயனையும் இசையினின்று பெறலாம். அதுதான் கடவுள்பக்தி. பக்திவலையிற் படுவோனாகிய பரம்பொருளை இசைவலைகொண்டு எளிதிற்பற்றலாம்.

நம்நாட்டுப் பெருமக்கள் பலரும் இசையை இத்துறையிலேயே செலுத்தி, பக்திததும்பும் பாக்கள் பல்லாயிரமாகப் பாடியிருக்கின்றனர். அப்பாடல்களைப் பொருள்தெரிந்து நாம் பாடும்பொழுதும், பிறர்பாட நாம் பொருள்தெரிந்து கேட்கும்பொழுதும், அவை நம் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பனவாகும். அவ்வின்பக்கனலில் இதயம் இளகிப் பண்படுகின்றது. அப்பண்பட்ட உள்ளத்தில் தெளிந்த உண்மையான அன்பு ஊற்றுப்பெருக்கோடி அரனாரை வளைத்துக் குலாவுகிறது. குதிகொண்ட கடவுளும் பதிகொண்டமர்கின்றான். அதனால்தான் தமிழ்மக்கள் தமிழிசைப் பாடல்களைக் கேட்க அவாவுகின்றனர். பொருள் புரியாத ஒரு தோத்திரப்பாடலை நாம் பாடினாலாவது, பாடக்கேட்டாலாவது ஒருபயனும் உண்டாவதில்லை. இன்னது என்று புரியாது நாம் பாடும் தோத்திரத்தை இறைவன்தான் ஏற்றுக்

கொள்வானே? பொருள்புரியாதபாடல் இருள்மூடியே கிடக்கும். அதைப்பாடும் நம் மனத்தும் மருள் மண்டிக் களைதற்கரிய காரிருளால் மூடப்படுவோம். இதை அப்பர் அடிகள் அழகுறத் தெரிவிக்கும் பாடல்:—

“சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மைநோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை
நற்பான்மை யறியாத நாயினேனை
நன்னெறிக்கே செலும்வண்ணம் நல்கினானைப்
பற்பாவும் வாயாரப் பாடியாடிப்
பணிந்தெழுந்து குறைந்தடைந்தார் பாவம்போக்க
கிற்பானைக் கீழ்வேளூ ராளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடிலாரே.”

தமிழ்மொழியைத் தண்மதிசூடிய கண்ணுதற் கடவுள் தந்த மொழியென்று கூறுவர். திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் உலகத்திற்கு உயர் தமிழ் மொழியை அளித்ததுமட்டுமன்றி, வான்பழித்து இம் மண்புகுந்து கூடலம்பதியில் தமிழ்ப்புலவராய்த் தோன்றி, சங்கத்திருந்து தமிழ் ஆராய்ந்து மகிழ்ந் தனர் என்பதை,

“சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்ப
லத்தும் என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்தவொண் தீந்தமிழ்.”

என்னும் மணிவாசகர்வாக்கால் மயக்கறவுணரலாம். (சங்கம் என்ற சொல்லே பின்னால் வந்ததுதான்.

அதற்குத் தமிழில் கூடல் என்றே பெயர் வழங்கி வந்தது. புலவர் கூடியிருந்த இடம் கூடல்.) அது மட்டுமா? சிவபெருமானுக்குத் தமிழ்மொழியின் மேலுள்ள ஆர்வம்தான் என்னே? தானும் தன் தேவியும் இளங்குமரனுடனே மதுரையம்பதியிலே சவுந்தரமாறனாகவும், தடாதகாதேவியாகவும், உக்கிர வழுதியாகவும் முறையேதோன்றி, அரசுவீற்றிருந்து தேமதுரத் தமிழ்வளத்தையெல்லாம் இசையோடு கூட்டி வாரிவாரி உண்டார் என்று குமரகுருபரர் கூறுவதைப் பாருங்கள்:—

“தமரநீர்ப் புவனம் முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவுங்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் மதுரங்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்.”

இன்னும் பாட்டுக்குருகும் சொக்கர் பைந்தமிழிசையைப் பாலித்த வரலாற்றை யெல்லாம் திருவிளையாடற் புராணத்திற் பரக்கக் காணலாம். பாணபத்திரற்கு ஆலவாய் அரனர் அளித்த பெரும் பேறெல்லாம் தமிழிசை பெற்றபேறேயாகும்.

“பாட்டான நல்ல தொடையாய் போற்றி” என்ற திருவாக்குக்கு இணங்கத் தமிழ்மொழியிற் பாடும் பாட்டெல்லாம் பரம்பரனின் பாட்டாகவே

பல்கியது. தமிழிசைப் பாடல்களுக்கு மற்றொரு தனிச்சிறப்பும்உண்டு. காணுப்பொருளைக் கண்ணாடியிற் பார் என்பர். பார்க்கக்கூடாத பாவையரின் அழகை ஆடியின் நிழலில் அமர்த்திக் காண்பர். கட்புலங்கதுவலாகாச் சேய்மைப் பொருள்களைத் தொலைக்காட்சிக் கண்ணாடிகொண்டு (Telescope) காண்பர். மிகநுண்ணிய பொருள்களையும் நுணித்தறியும் கண்ணாடிகள் (Microscope) இருக்கின்றன. இப்பொழுது நெடுந்தொலைநிகழ்ச்சிகளையும் இருந்தபடியே படம்பிடித்துப் பார்க்கிறோம். (Television) கேட்டாரும் அறியாத காணுப்பரம்பொருளாகிய சிவபெருமானையும் ஒரு கண்ணாடிகொண்டு காணலாம் என்கிறார் அப்பர் அடிகள். ஆகா! இதைவிட ஓர் அரியசெயல் உண்டா? என்ன புதுமை? கடவுளைக் காணும் கண்ணாடி எங்குளது? அதுதான் தமிழிசைப்பாடல். பொன்புனைந்த கண்ணாடி, பூவேய்ந்த கண்ணாடி என்று எத்தனையோ அரிய கண்ணாடிகள் உளவேனும், அக்கண்ணாடிகளையெல்லாம் சிவபெருமான்காண விரும்பமாட்டார். அவர் காணவிரும்புவது சொன்மாலையால்வேய்ந்த தமிழ்க் கண்ணாடியே யாகும். இதைத்தெரிந்துகொள்ளாது மடமையுறுவதேனோ என்கிறார் அப்பரடிகள்:—

“பூம்படி மக்கலம் பொற்படி மக்கல மென்றிவற்று
லாம்படி மக்கல மாகிலும் ஆரூ ரினிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேற்றமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலஞ் செய்து தொழுதிய் மடநெஞ்சமே.”

இவ்வருமைத் திருப்பாடலை ஆயுந்தொறுந் தொறும் இன்பம் மல்கி இறும்பூதெழுகின்றது. தமிழிலுள்ள திருவருட்பாடல்கள் ஒவ்வொன்றும் இறைவனை ஆடியின் நிழல்போல் படம்பிடித்துக் காட்டாநிற்கும். அதில் நாம் இறைவனைத் தெள் ளிதிற் காணலாம். இறைவனைக் கலந்தெய்தும் இன்பவாரிதியை நாம் தமிழ்ப்பாடல்களின்மூலம் வாய்மடுத்து உள்ளம்குளிர ஈறிலா இன்பம் எய்த லாம். இறைவனுக்கு உகந்ததும் தமிழ்ப்பாடல்களே. தமிழின் சுவையும், பண்ணும், பொருளும் எல்லாம் தானாகவே இறைவன் விளங்குகிறான். இறைவனே தமிழ்; தமிழே இறைவன். செந்தமிழ்ப் பாடல்களை வடித்தெடுத்த தெளிவு யாதென நோக்கின், அது சிவப்பொருளாகவே முடியும். இசை காமத்தை விளைவிக்கும் என்ற சமணர்கூற்று பொய்யாகி, தமிழிசை சிவம்பூத்துத் தித்திக்கக் காணலாம். இத் தகைய சிறப்புகளை நோக்குங்கால் கம்பர்பாடிய,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழல்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்."

என்னும் பாடலில், சிவன் தான் தமிழைத் தந்தானா? அல்லது தமிழ்தான் சிவத்தைத் தந்ததா? என்ற தோர் ஐயுறவும் எழக்கூடும். ஆம், சிவனாரளித்த தமிழே சிவனையும் நமக்கு அளித்துள்ளது. சிவன் நமக்குத் தமிழை வழங்கியதுமன்றித் தன்னையும் அத்தமிழ்மூலம் நமக்கு எளிதில் அளித்துள்ளான்.

“தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.”

என்று குமரகுருபரர் பாடியது வெற்றுரையன்று. நெடுநாள் தமிழைச் சுவைத்தறிந்த பழக்கத்தாலும் பயனாலும் வெளிவந்த பொருள்மொழியேயாகும்.

மாபெருஞ் சீர்த்தியுறும் பைந்தமிழிற் பல்லாயிரக் கணக்கான திருவருட்பாடல்கள் தெய்வம் மணக்கும் தோத்திரப்பாக்களால் மிளிர்கின்றன. எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட தேவாரங்களும், நாலாயிரம் திவ்வியப்பிரபந்தங்களும்,திருவாசகமும், திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டுகளும் பண்

ளோடும் கூடிப் பயிலவல்ல இன்னிசைப்பாக்கள். பிற்காலத்தெழுந்த திருப்புகழ், திருவருட்பா முதலியனவோ எண்ணிறந்தனவாகும். இவையனைத்தும் இசைகெழுமிய இயற்றமிழ்ப்பாக்கள். தெய்வ அருள்கொண்டு பாடப்பெற்றவை. இவற்றை இறைவனே அடியார்கள் அகத்தமர்ந்து, ஆன்மாக்கள் உய்யவேண்டி அழகுறப்பாடியருளினான் என்பதை அகச்சான்றுகொண்டே நாம் அறிந்துகொள்ளலாம்.

“ கந்தமலர்க் கொன்றையணிச் சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத்தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண்டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு அருளினானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன்நானே.”

இத்திருத்தாண்டகத்தில் திருநாவுக்கரசு நாயனார், இறைவனே தம்மை ஆளாக்கித் தமிழ்ப்பாடல்களைப் பாடும்படி அருளினான் என்று ஐயமறக் கூறியுள்ளார். நம்மாழ்வாரான சடகோபப்பெரியார், திருமால் தமது உடல்புகுந்து உயிர்கலந்து உணர்வில் ஓங்கி நின்று, தன்னைத்தானே துதிக்கும் வகையால், தமிழ்ப்பாடல்களைத் தானே பாடியருள்செய்தான் என்று தெளிவுறக்கூறும் பாடல் வருமாறு:—

"என்னெஞ்சத்துள்ளிருந்து இருந்தமிழ் நூல் இவைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப்பாரதத்துப்பாண்டவர்க்காப்படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே"

இதிலிருந்து சடகோபரின் திருவாய்மொழி திருமால் திருவாய்மொழிந்த திருப்பாடல்கள் என்பது தெரிய வரும்.

நம்மாழ்வாராகிய தமிழ்மாறன் திருமாலுடன் இரண்டறக்கலந்து, தாம்வேறு, இறைவன்வேறு என்றுதநிலையில் ஒன்றுபட்டு, தாம் நேரிற்கண்டு, நுகர்ந்து சுவைத்த கன்னலினுமினிய கரையிலா மகிழ்ச்சி உண்ணிறைந்து இடங்கொள்ளாது பொங்கிப் பொழிந்து தித்திக்கும் தீந்தமிழ் இன்னொலிப் பாடல்களாய் அருமறைகளின் அரும்பொருளை அகத்தடக்கி அன்புருக என்பலைத்துப் புறப்படக் கண்டார். அவற்றைப் பாமாலையாய்த் திருமாலின் வெற்றித்தோளில் அணிவித்தார். கொற்றத் திருமகள் குலாவுமத்தோள்களும் பூரித்து விம்மின:—

"அருமறை துணிந்த பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
யருளிய சடகோபர் சொற்பெற் றுயர்ந்தன
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு வரங்கர் மணிதிகழ் முகுந்தர்
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே."

ஆழ்வாராதியர் அருளிச்செய்த திவ்வியப்பிர பந்தங்கள், தேவாரம், திருவாசகம் முதலிய தெய்வ மறைப் பாடல்களில் ஒவ்வொருபாட்டும் தீந்தமிழி லுயிர்த்து, இன்னிசையோடிலங்கி இன்பம் சுரக் கின்றது. நன்னெறிகாட்டி நலம்பயக்கின்றது. அப்பாலுக்கப்பாலாம் இறைவனை ஆடியில் அடைத் துக் காட்டுதல்போல் அணையச் சேர்க்கின்றது. அதைப் பொருள்தெரிந்துபாடவும் கேட்கவும் வல்ல வர்கள் தமிழ்மக்களே. அதன் செம்பொருள்கண்டு சீர்தலைப்படுவார் எம்பெருமானின் இணையடியின் பம் எய்துவரென்பது ஒருதலை. இதை வாதவூர் அடிகள்,

"சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

என்று இனிதியம்பியுள்ளார். இத்தெய்வப்பாடல் களை நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சினுள் பொன் னார் சடைப் புண்ணியன் புக்குநிற்பான். காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி இவற்றை ஓதுவார் நன் னெறியடைவர் என்பது திண்ணம்.

நல்லுணர்ச்சிகளை நலம்பெற நல்கும் இந் நல்லிசைப் பாடல்களைப் பாடவல்லவர்கள் இசைக் கலையில் ஏற்றமுறும் தமிழறிவு வாய்ந்தவர்களா யிருத்தல் இன்றியமையாதது. அத்தகையோர்களைத்

தமிழ்மக்கள் பெருமைப்படுத்திப்பாராட்டக்கடமைப் பட்டுள்ளார்கள். ஆனால், இந்நாளில் அவர்கள் நிலை எவ்வாறு அமைந்துள்ளது? தேவாரத்திருமுறை களைப் பயின்றவர்கள் ஓதுவார்கள் என்று ஒதுக்கப் பட்டுள்ளார்கள். இசைக்கலைக்கும் இவ்வோதுவார் களுக்கும் என்னதூஉம் உறவில்லைபோலும் என்று பொதுமக்களின் எண்ணம் வலுத்துவருகின்றது. தம்மைப் போற்றுவாரின்றி அவ்வோதுவாமூர்த்தி களும் ஒதுங்கிப் பிழைக்கின்றனர்; வறுமையால் வாடி வதங்குகின்றனர். ஒளிகுன்றி உடல்சாம்பி ஒடுங்குகின்றனர். அவர்கள் பாடும் பாடல்களை அவர்களேகேட்டு மகிழவேண்டும். மதுகையற்ற உடம்பில் மகிழ்ச்சி எங்கிருந்துவரும்? அவர்கள் மனமும் மருட்சிகொண்டுவிட்டது. கற்றூண்களுக் கும், கருங்கதவுப்பூண்களுக்கும், கடந்தவெளிகளுக் கும் பாடிப்பாடிக் கலங்குகின்றனர். வேண்டுமானால் ஆண்டிகள்சிலர் அயர்ந்துவந்து அவர் அண்டையில் நிற்பர். பொருள்தெரியாமலே பாடல்களைப் பாடு கின்றனர். "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என்று பாடும்பொழுது, "இந்தயானை எந்தக் காட் டில் வாழுமோ? தெரியேனே!" என்று அவர்கள் ஏங்குவதுபோலத்தோற்றும். அந்தோ! அவர்களின் நிலை பரிதாபம்! பரிதாபம்! நெஞ்சு பொறுக்கு தில்லையே! தமிழ் உலகமே நாணித் தலைகுனிய வேண்டியதுதான்.

நாலைந்து தெலுங்குக் கீர்த்தனங்களையும், இந்துஸ்தானிமெட்டுக்களையும், சினிமாத் துக்கடாக்

களையும் வைத்துக்கொண்டு மிகப் பலர் மேன்மை யுறுகின்றனர் தமிழ்நாட்டில். பதக்கத்தில் மிதக்கின்றனர், பொன்னிற் பொலிகின்றனர், பூவிற் புரளுகின்றனர். நூற்றுக்கணக்கான தேவாரத் திருமுறைகளை ஓதுகின்ற உத்தமர்கள் கந்தையும் கப்பரையும் கண்டிகையுமே கண்டகோலமாய்க் குழைந்து குழறிக் குறைகின்றனர். தேவாரம் திருவாசகம் பாடுவோர்க்கும் பாடக்கேட்போர்க்கும் ஆனந்தக்கண்ணீர் அமுததாரையாய் ஊற்றெடுத்துப் பாயுமாம். மணிவாசகரின் திருவாசகத்தின் மாண்பினைக் கூறும் சிவப்பிரகாசர், அந்நூலின் மணிவார்த்தைகள் கல்லைப் பிசைந்து கனியாக்கிக் கண்ணருவி கரைந்தோட இன்பக்கடலை இனிதூட்டும் என்றும், அச்சிறப்பு இறைவனால் அருளப்பட்ட வேதங்களுக்கும் இல்லையென்றும் இறும்பூதுடன் பாடினர்:—

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி

அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே."

அந்தோ! எத்துணை உறுதியுடன் அனுபவித்துப் பாடுகிறார் சிவப்பிரகாசர். திருவாசகத்தைப் பாடக் கேட்டால் அல்லவோ ஆனந்தக்கண்ணீர்! கேட்கவோ மனமில்லை. பாடுவோருக்காவது ஆனந்தக்கண்ணீர் உண்டா? கிரப்பிடும்பைக் கண்ணீர்தான் அவர்கள் நித்தலும் கண்டது. ஆனால், திருமுறை பாடும்பொழுது கண்ணீர் கசியாதிருந்தால் நன்றாயிராது என்று மிளகை அரைத்துக் கண்ணிமைகளில் தடவிக்கொண்டவர்களும் உண்டு. இப்படியே ஒருகோயில்கணக்கில் 'ஆனந்த பாஷ்பத்திற்கு அரைப்பலம் மிளகு' என்றே எழுதப்பட்டிருந்ததாம். மற்றொருகோயிலின் திருவிழாச் செலவு கணக்கில் நடனமாடிய நங்கைக்கு ரூபாய் நானூறும், வாணவெடிவகைக்கு வடிவாக ரூபாய் இருநூறும், தேவாரம்பாடிய ஓதுவாமூர்த்திகளுக்கு இரண்டுகட்டித் திருவமுதும் இரண்டரை அணவும் என்று எழுதப்பட்டிருந்ததாம். நடனக்கலையை ஆதரிப்பது போற்றவேண்டிய செய்திதான். அதற்காக ஒருவரும் இங்குக் குறைகூற முன்வரவில்லை. வாணவேடிக்கைகளும் இன்பக்காட்சி யாதலால் வேண்டுவனதாம். ஆனால், ஓதுவார்களுக்குமட்டும் ஏன் இந்த இழிவு என்றுதான் வருந்தவேண்டியிருக்கிறது. இத்தகையநிலை மாறி அமைந்தாலொழியத் தமிழுலகம் தழைத்துத் தலையெடுக்கமுடியாது.

"அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம் அருளுமாறே"

என்று பாடியதுகூட இதுகருதித்தானே என்னும் படியாயிருக்கிறது. நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பும் இசைவாணர்களை இவ்விதம் நல்குரவு நலியவிடக்கூடாது.

தேவாரத் திருமுறைப் பாக்களுக்கு உயரிய முறையில் உளங்கவரும் பண்கள் பல வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவே இப்பொழுது பயின்று வருகின்றன. எஞ்சியன கைநழுவப்பட்டு மறைந்தொழியும் நிலையிலுள்ளன. அவற்றை ஆராய்ந்து தெளிவுபடுத்தி வழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும். இத்துறையில் இசைவாணர்கள் முனைந்து உழைப்பதற்குவேண்டிய ஆதரவையும், பொருளுதவியையும் தமிழ்மக்கள் தயங்காது, தாழ்க்காது, அளித்துதவ முன்வரவேண்டும். தேவாரங்களுக்குப் பழைய பண்களுடன் புதியமுறையிலும் மெட்டுகள் அமைத்துப் பல்விதமக்கள் மனதையும் கவரும் விதம் பாடிப்பழகுதல் வேண்டும். திருக்கோயில்களில் திருமுறைஓதும் பணியுடையார்களுக்கு உரிய ஊதியத்தை உயர்த்தல்வேண்டும். அவ்விதம் செய்வதால் இசைத்திறனுடையார்கள் அத்தொழிலை விரும்பி ஏற்க முற்படுவார்கள். இசையரங்குகளில் தேவாரப்பண்கள் அதிகமாகக் கையாளப்படவேண்டும். ஓதுவார்களே இத்தேவாரங்களைப் பாடுதல் என்பதன்றி இசையுலகம் முழுதும் தேவாரமுழக்கம் பரவவேண்டும். இசை யரங்குகளில் மிகச்சில

தேவாரங்களே சிலராற் பயிலப்படுகின்றன. அவை சிலவேயாயினும், அவை நம் உள்ளத்தை உருக்கு கின்றன. இதை இசையில் ஈடுபட்டோர் அனைவரும் உணர்வர். ஆதலின் அவை பலவாகப் பயிலப்படுமே யானல் நம் தமிழ் இசை முன்னிலும் மிக ஏற்ற முறும் என்பது உறுதி.

தமிழும் ஆரியமும்

“செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.”

உலகிற் சிறந்த மொழிகளுக்குள்ளே மிகச் சிறந்தமொழி தமிழ். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நாடு தமிழ்நாடு. இத் தமிழ்நாட்டின் எல்லையினை,

“நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு”

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இதே தமிழ் நாட்டெல்லையை இன்னும் இனிக்கப்பாடுகின்றார் பாரதியார்:—

“நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.”

இவ்வாறு குன்றம் குமரி குண குட கடலாக எல்லை பேசப்படுகிறது. ஆனால் பெரியபுராணத்தில்

சேக்கிழார் வடக்கு எல்லையை வேங்கடமாகிய திருப்பதிக்கும் அப்பால் சிறிதுதள்ளி, கண்ணப்பர் வாழும் காளத்திமலைவரையிற் கொண்டுவிடுகிறார். காளத்திமலைவரை தமிழ் வழங்கப்பட்டு வந்ததாம். அதற்கு வடக்கேதான் வேறுமொழிகள் பயிலப் பட்டன.

"அங்கண் வடதிசை மேலுங் குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாக"

எனவரும் பெரியபுராண அடியைக்கொண்டு தெரியலாம்.

ஆயினும் இவ்வாறு குறிக்கப்படும் எல்லை மிகவும் பிற்பட்டகாலத்தில் ஏற்பட்டது. அதாவது சுமார் 2500 ஆண்டுகளுக்கு உட்பட்டேயிருக்க வேண்டும். அதற்குச் சிறிது முன்னர்தான் வடமேற்குக் கணவாய்களின் வழியாய் அவுணர்களும் (Huns) மிண்டர்களும் ஆரிய இனத்தவராய் இந் நாவலந்தீவினுட் புகுந்து தமிழர்களைத் தென்பகுதிக்கு ஒதுங்கும்படி செய்துவிட்டனர். ஆரியர் இந்தியாவினுள் அடியெடுத்துவைக்கும் நாள்வரை, இந்தியநாடு முழுதிலும் தமிழைப் பயின்றுவந்த தமிழ்மக்களே வாழ்ந்துவந்தனர். இன்றும் வங்காளத்தின் மொழியிலும் வாழ்க்கைப் பண்பாடுகளிலும் தமிழின்சாயை ஆழப்புதைந்து கிடப்பதைக் காணலாம். சிந்துநதிவெளியின் பழைய நாகரிகம் தமிழர் நாகரிகமேயாகும் என்பதை, மக்கெஞ்சோ

தாரோ, (மூசிஞ்சதரை = அழிந்துபோன நிலம்) அரப்பா முதலிய இடங்களிற் காணப்படும் புதை பொருள்களால் தெரியலாம். அந்த நாகரிகம் இன்றைக்கு 6000 அல்லது 7000 ஆண்டுக்கு முற் பட்டது என்று கலைவல்லவர்கள் கருதுகின்றனர். அதற்குப்பின்னரும், சங்ககாலத்துத் தமிழ்மன்னர் கள் இடையிடையே இமயம்வரை படையெடுத்துச் சென்று ஆரிய மன்னர்களை முறியடித்துத் தமிழ் மொழியை இந்தியமொழியாக்கித் தங்கள் ஆட்சியை நிலைநாட்டிவந்திருக்கின்றனர். "குமரியொடு வட இமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலா தற்கு" என்று சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, உரைப்பாட்டு மடையிற் கூறப்படுகிறது. பதிற்றுப் பத்தில்,

"ஆரியர் துவன்றிய பேரிசை யிமயந்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே"

"மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசி னுதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மா னல்லினி யீன்றமகன்
அமைவர லருவி யிமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபின் ஆரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ

அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த அணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ்சேர லாதன்"

என்று நெடுஞ்சேரலாதனின் வீரச்செயல் கூறப்படு கிறது. இமயம்வரை தமிழ்நாட்டை அகற்றித் தமிழ் பரப்பி ஆண்டதால் நெடுஞ்சேரலாதன் இமைய வரம்பன் என்ற பட்டம் பெற்றான். பதிற்றுப்பத்து நாற்பத்துமூன்றாவது பாடலில்:—

"கடவுள் நிலைய கல்லோங்கு நெடுவரை
வடதிசை யெல்லை யிமய மாகத்
தென்னங் குமரியொ டாயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவி னழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ"

என்று செங்குட்டுவனைப் பரணர் பாடிப் புகழ்கிறார். சேரன்செங்குட்டுவன் கண்ணகிதேவிக்குக் கல் லெடுக்கவேண்டி வடநாடுசென்று கங்கைக்கரையில் குயிலாலுவம் என்னும் இடத்தில் தன்னை எதிர்த்த கனகவிசயர்போன்ற ஆரிய மன்னரையும் புறங் கண்டு, இமயத்துக்கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப் படுத்து, கனகவிசயர் தலையேற்றிக்கொண்டுவந்த தைச் சிலப்பதிகாரம் உவகைபொங்க ஒலித்திடுகின் றது. கரிகால்வளவன் ஒன்னலரைப்பெறாது தின வெடுத்த தோளனாய் இமயம்வரைப் போர்நாடிச்

சென்று, 'வழிமறித்தது இவ்வான்மலை' யென்று அதன் தலையிலே புலிச்சின்னம்பொறித்து வெற்றிக் கொடியுடன் ஆரியமன்னன் திரையளக்க மீண்டு வந்தான். நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் ஆரியமன்னரின் படைகளை அழித்ததால் ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் என்று வழங்கப் பட்டான். இவ்வாறு வென்ற தமிழ்மன்னர்கள் தமிழே ஒரு தனிமொழியெனக் கொண்டு இமயம் வரை ஆண்டது வியப்பாகாது.

இதனால் தமிழ் மிகவும் தொன்மைவாய்ந்த உயர் தனிச் செம்மொழி என்பதை அறியலாம். அது முன்னைப் பழையமொழிக்கும் முன்னைப் பழைய மொழியாயுள்ளது. ஆயினும் இன்றும் இளமை யோடு இலங்குவதைநோக்கின், பின்னைப் புதுமைக் கும் பெயர்த்தும் அப்பெற்றியதாகக் காணப்படும். அது உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டிலும் இன்றும் என்றும் நின்று நிலவிவருகிறது. சொல் வளம், பொருள்வளம், ஓசைவளம் இனிமையாக அமையப்பெற்றது. அடித்தொண்டையைப் பிடுங் கிக்கொண்டும், கனைத்தும், உரப்பியும், கடுமூச்சுவிடுத் தும், நெடுமூச்சு எடுத்தும், உதட்டை நெளித்தும், மூக்கை உதறியும் பேசப்படும்மொழிகள்போலன்றி, யாதொரு வருத்தமுமில்லாமல், இமிழெனு இசைக் கும் அமுதகு தேன்மொழி நம் தமிழ்மொழியாகும். கேட்கக் கேட்கத் தெவிட்டா விருந்தாய், செவியும் உள்ளமும் குளிர்விக்கும்தகையது. பொருள்தெரியா தோரையும் செந்தமிழ் தன் இன்னிசைகொண்டு

சித்தம் திறைகொள்ளும். தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய தென்னிந்திய மொழிகளுக்குத் தாய்மொழியாகவுள்ளது. இத்தகைய அன்புமொழியாம் அருந்தமிழ்மொழியின் இன்ப வளத்தின் அருமை பெருமையினைச் சாற்றிட, நினைத்திட, மதித்திட, அறிந்திடச் சார்கின்ற தோறும் வாயெல்லாம் தித்திக்கும், மனமெலாம் தித்திக்கும், மதியெலாம் தித்திக்கும், மன்னியமெய் யறிவெலாம் தித்திக்கும் என்னில் இதனால் உண்டாகும் இன்பப்பெருக்கு இயம்பற்கரிதென்பது மிகையேயன்றோ!

வடஇந்தியாவிலிருந்து தென்னாட்டுக்குஒதுக்கப் பட்ட தமிழை ஆரியர்கள் சும்மாவிடவில்லை. ஆரிய மொழியைத் தமிழ்நாட்டிலும் புகுத்தித் தமிழரை ஆளமுயன்றனர். தமிழின் அருங்குணங்களையெல் லாம் ஆரியத்தில் எடுத்து அமைத்துக்கொண்டனர். தமிழ்மொழியிலிருந்து சொல்லும் பொருளும் பல வாக நேர்முகமாகவும் மறைவாகவும் எடுத்து ஆரியத் தில் சிலமாறுதலுடன் சேர்க்கப்பட்டன. இவற்றை ஆரியத்தின் இயல்புக் குணங்கள் என எடுத்து மொழிந்தனர். தமிழுக்குரிய சிறப்பெல்லாம் ஆரியத் தில் பன்மடங்கு இருப்பதாகக் காட்டித் தமிழை ஒருபடி தாழ்த்தினர். எதிலும் ஆரியத்திற்கு ஓர் ஏற்றம் கற்பித்தனர். வேதம் உடைத்து ஆரியம் என்றனர். ஏதம்படைத்த தமிழர் சிலர் ஏமாந்து விட்டனர். மானம்படைத்த தமிழர் பலர் மல்லுக்கு நின்றனர். ஏதுக்கள் காட்டி வாதுக்கு வந்தனர்.

மாதுக்கம்கொண்டு மனம் கலங்கினர். சாதுக்கள் சிலர் சமரசம் பேசினர்.

ஆரிய வேதத்திற்கு எதிராகத் தமிழில் யாது உண்டு என்றூர்க்குத் தமிழர் தமது திருக்குறளை எடுத்துக்காட்டினர். ஒருபுலவர் வேதத்தையும் திருக் குறளையும் சீர்தூக்கிப்பார்த்தார். இரண்டும் ஒத்து விளங்குவதாகவே அவருக்குப்பட்டது. சரி, ஆரிய மும் தமிழும் ஒன்றையொன்று மிஞ்சமுடியாது என்று முடிவுகட்டிப் பாடினர்:—

''ஆரியமும் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனர்
ஓது குறட்பா வுடைத்து''

இதைக்கேட்ட மற்றொரு புலவர் வேதத்திற்கில்லாத சிறப்பொன்று திருக்குறளுக்கு இருப்பதைக்கண்டு ஆரியத்தைவிட தமிழே சிறந்தது என அறுதியிட் டார். வேதம் எழுதாக் கிளவி; அதை ஏட்டில் எழுதினல் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமாய்ப் படித்து, படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் என்று ஆகிவிடு மெனப்பயந்து ஏட்டில் எழுதப்படவில்லை. இவ்வாறு வேதம் சொல்லளவில், கேள்விமாத்திரையே நின்று விட்டது. அதை ஏட்டில் எழுதிவைத்தால் பலரும் படித்து ஆராய்ந்து, இது இவ்வளவுதான என்று போய்விடும். ஆனல் திருக்குறள் அப்படியில்லை.

யாவரும் படித்துப்பயன்பெறுவிதமாய் எண்ணிறந்த ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. நவில்தொறும் நவில் தொறும் அந்நூலின் நயம் நன்னர் மதிக்கப்படும். நவநவமான பொருள்களை நல்கிக்கொண்டே யிருக்கும். மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறி நிறைவதுபோல், அதைக் கற்கும் அளவிற்கு அறிவுசுரந்து பல்கிக்கொண்டே யிருக்கும். அதனைக் கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டவர் மற்றீண்டு வாரா மெய்ந்நெறியில் தலைப்படுவர். அதனால் திருக்குறள் வேதத்தைவிட உயர்வு சிறப்புடையது என்று பாடினார்:—

"ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று."

இதற்குமேலாக ஓர்ஏற்றம் கண்டார் இன்னொரு புலவர். வேதம் செய்யா மொழி. திருக்குறள் பொய்யாமொழி. வேதத்திற்கூறிய பொருள் யாவும் திருக்குறளில் உண்டு. திருக்குறளில் இல்லாத எப்பொருளும் இல்லை என்று சொல்லலாம். வேதத்தை அந்தணர்மட்டுமே கற்றுப் பயன் அடையலாம். அதே பயனை இன்னர் இனியார் என்றில்லாது, மனிதனாய்ப் பிறந்த யாரும், திருக்குறளைப் படித்த மாத்திரத்தில் பெற்றுவிடலாம். ஆகையால் எவ்வழியாகப் பார்த்தாலும் திருக்குறள் வேதத்தைவிட

மிகச்சிறந்த நூல். அதுவே தமிழர்களின் திருமறை. தமிழ் மாதின் இனிய உயிர்நிலை. அத்தகைய தமிழ் ஆரியத்தைவிட உயர்ந்த மொழி என்று வேறு கூறவா வேண்டும்?

"'செய்யா மொழிக்கும்' திருவள்ளு வர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரிய ரல்லாதா ரில்."

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இத்தகைய வாதுகள் அடிக்கடி நிகழ்ந்ததாக நாம் கருதுதற்கு இடமுண்டு. ஒருமுறை மதுரைக் கடைச் சங்கத்தில் ஆரியம் பெரிதா? தமிழ் பெரிதா? என்று கடும்போர் நடந்தது. சங்கத்தின் தெற்கு வாயிலைத் திறவாது அடைத்துக்கொண்டு சொற்போர் நிகழ்த்தினர். நக்கீரர் தமிழின் உயர்வை எடுத்து நிலைநாட்டினர். அவரை ஒருவன் எதிர்த்து, "ஆரியமே நன்று, தமிழ் தீது" என்று வஞ்சமனத்துடன் நெஞ்சறியப் பொய் புகன்றான். இது அறத்திற்கும், உண்மைக்கும், தெய்வத்திற்கும் ஏற்காத கூற்றாதலால், அவன் உடனே உருண்டு பிணமாய் விழுந்தான். அவனைச்சார்ந்தவர்கள், "செத்துப்போன இவன் உயிர்பெற்று மீண்டால் தமிழை உண்மையில் உயர்வுடைய மொழியாகக்கொள்ளலாம்" என்று பேசினர். அதைக் கேட்ட நக்கீரர் விரைந்து உயிர் தளிர்க்கும் ஓங்கு தமிழ்ப்பாடல் ஒன்றைப் பாடினார்:—

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையாற்
செந்தமிழே தீர்க்க சுவாகா."

நிறைமொழி மாந்தராகிய நக்கீரரின் மறைமொழி உடனே பலித்தது. இறந்தவனை எழுப்பியது அப்பாடல்.

அவ்வமயம் ஆங்கோர் மூலையில் ஆரியத்தைப் போற்றுகின்ற வேட்கோவான குயக்கோடன் என்பவன் தமிழுக்கு உயர்வு கூறினோர்மீது ஓர் *ஆனந்தச்செய்யுள் பாடிக்கொண்டிருந்தான். அதனையறிந்த நக்கீரர்:—

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்க சுவாகா."

எனப்பாடி அவனைச் சாகஅடித்தார். பரணரையும் கபிலரையும் பாடி அவன் கொல்ல நினைத்தான் போலும். கெடுவான் கேடுநினைப்பான் என்றபடி அவனே கொல்லப்பட்டான். நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் கூறுவதிற் குறைவுகாணாத நக்கீரர் என்னும் நற்றமிழ்ப் புலவர் ஆரியம் என்ற

---

*ஆனந்தச்செய்யுள் - அறப்பாடல்; அதாவது சாகவைக்கும் பாடல்.

துமே ஆவேசம் கொள்வார்போலும். அவர் பாடிய 'கோபப் பிரசாதம்' என்னும் பாடலில்,

"ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்பும்...மூர்க்கமாக்களை
இன்னே கொண்டு ஏகாக் கூற்றம்
தவறுபெரி துடைத்தே! தவறுபெரி துடைத்தே!!"

என்று நெருப்பைக் கக்கிப் பாடியுள்ளார்.

ஆரியர் தமிழ்நாட்டிற் புகுந்து எவ்வளவு ஆர்வத்துடன் தமிழைக் கற்றுங்கூட, அவர்களால் தமிழைச் செவ்வனே பேசுதற்கு இயலாதிருந்தது. இன்றும் பிறமொழியாளர் தமிழ்பேசக் கேட்டால் நமக்குச் சிரிப்பு வந்துவிடுகிறது; அக்காலத்திலும் அப்படியேதான் இருந்தது. இதை, "நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன" என்று பேராசிரியர் எடுத்துக்கூறுகின்றார்.* திருவாசகம், திருக்குறள் முதலியவற்றில் நன்கு பயின்று, அவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்த டாக்டர்போப்துரைகூட "திருவாசகம் என்னும் தேன்" என்றுதான் கூறுவாராம். தமிழராய்ப் பிறந்தவர்களே ழகர உச்சரிப்பில் நழுவி விழும்போது, பிறமொழியாளரைப் பற்றிக் கேட்பானேன்!

---

*தொல் - பொருள் - மெய்ப்பாட்டியல் முதற் சூத்திர உரை.

சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஜெர்மன் போன்ற பிறமொழிகளைப் படித்தால்தான் தமிழினுடைய இனிமை எளிமைகள் நன்கு புலப்படும். இதைத் தமிழ்மூதாட்டியாகிய ஔவையார் அழகுறஎடுத்துப் பாடியதாக ஒரு பாடல் உண்டு:—

"நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை ஆரியத்திற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்."

இவ்வுண்மையை நாம் ஓர் உதாரணத்தால் எளிதிற் கண்டுவிடலாம். சொற்புத்தியும் சுயபுத்தியும் இல்லா தவன் ஒன்றுக்கும் உதவான் என்பதை ஜெர்மன் மொழியிற் கூறவேண்டுமானல் பின்வருமாறுதான் கூறுவார்கள்:—

"வேர் இஸ்ட் அன் உன் பிரக்ஹ்ற் பாரர் மன்
டெர் நிஷ்ட் பெபேலன் உண்ட் அவுக் நிஷ்ட்
கெஹார்க்கன் கன்."

இதை இன்னெருமுறை படித்து உச்சரித்துப் பாருங்கள். இதே கருத்தை இனிய தீவிய மதுர மொழுகிய தமிழினியல் பயில் திருக்குறளிலும் எவ்வாறு கூறப்படுகின்றது என்பதைப் படித்து உச்சரித்துப்பாருங்கள்:—

"எவவுஞ் செய்கலான் தான்தேருன் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்."

ஜெர்மன் வாசகத்தைப் படித்த வாயால் திருக் குறளைப் படிப்பது, பனம்பழத்தைக் கடித்த வாய்க்குப் பாலொடு தேன் கலந்து அண்ணிக்கும் அமுது போன்றினித்திருக்கும்.

இம்மொழிப்போராட்டம் தீதுவிளைக்கும் எனக் கருதிச் சில தமிழ்ப் பெரியார்கள் சந்துசெய்வது போல் நடுநின்றும் கூறிப்பார்த்தனர். அப்பர் அடிகள், 'ஆரியந் தமிழோடிசையானவன்' என்றும், 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்றும் இறைவனை வழுத்திப் பாடினர். வடமொழியும் தென் தமிழும் சிவபெருமானல் ஆக்கப்பட்டனவே. சிவ பெருமான் வடமொழி இலக்கணத்தைப் பாணி னிக்கும், தமிழ் இலக்கணத்தை அகத்தியருக்கும் அருளிச்செய்தார்; ஆதலால், இருமொழிகளும் ஒத்து, சரிநிகர் சமானமாய் விளங்குவனவே யாகும் என்று காஞ்சிபுராணம் கூறுகிறது:—

"வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
உலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பின் இதன்பெருமை
யாவரே கணித்தறிவார்."

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினு ரென்றால்இவ்
இருமொழியு நிகரென்னும் இதற்கைய முளதேயோ".

ஆனால், இவ்வாறு பூசி மெழுகிப் பொதுமை கூறியவர்கள் மிகச்சிலரேயாகும். சங்ககாலத்தில் தொடங்கியபோராட்டம் இன்றுவரை நின்றிலது. உலகியல் நெறியைச் சீயென உதறித்தள்ளி வீட்டுநெறி வேட்டுநின்ற அருட்சுடர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகூட, தமிழினது ஏரினையும் சீரினையும் எடுத்துரைக்கும் போதில், ஆரியத்தோடு ஒப்பிட்டு, வடமொழிக்கும் மிஞ்சியதோர் அடல்மொழியாய்த் திகழ்கின்றது தமிழ் எனக் கூறுதிருக்க முடியவில்லை. அவர் எழுதுவதாவது:—

"மணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர், திருமூலர் ஆகிய மகாபுருஷர்களால் சாத்திரதோத்திரங்களாக அருளிச்செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை யுடையதும், பலநாள் நைஷ்டிக அதிகாரணம் பூண்டு போதகாசாரியர் சந்நிதியில் தாழ்ந்து சகபாடிகளோடு சூழ்ந்து, சுரஒலி பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினாலும் பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷியம், வியாக்யானம், டீக்கா, டுக்கா, டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள்கொள்ளத் தேடவேண்டியதாயும், அவ்வவைகளையும் தேடிக் கைவரினும், அக்கருவிகளால் போதகம் பெறவேண்டியதற்குப் பாஷியகாரர்கள், வியாக்

கியான கர்த்தர்கள், டீக்கா வல்லபர்கள், டூக்கா சூசகர்கள் முதலிய போதக உப போதகாசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரியம், மகா ராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலியிலேசாயும், கூட்டென்னும் சந்தி அதிக சுலபமாயும், எழுதவும் கவிசெய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம், சொல்லாடம்பரம், போதுபோக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்காரமின்றி, எப் பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகை யால்,ஆண்டன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ், ற், ன், என்னும் முடி, நடு, அடி, சிறப்பிய லக்கரங்களில் முடிநிலை இன்பாநுபவ சுத்த மோனாதீதத் தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை யுண்மைத் தனித்தலைமைப் பெருமைச் சிறப்பிய லொலியாம்.

"சுத்த சித்தாந்த ஆரிடாீதி முப்பத(த, மி, ழ்)வுரைப் பொழிப்பு:— மருளியற்கை மல இருளைப் பரிபாக சத்தி யால் அருளொளியாக்கி, அதற்குள்ளீடான சிதாத்ம சிற்கலாசக்தி யென்னும் சுத்த ஆன்மாவை, தகர, ககன, நடன அருட்பெருஞ்சோதி யென்னும் சுத்த சிவானந்த பூரணத்தைச் சுத்தமோனாதீத இயலால் அநுபவிக்கும் இயற்கை உண்மையே தமிழ் என்னும் சொற்பொருள் சுட்டினவாறு காண்க".

"இதன் கருத்து யாதெனில், தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும் என்பதாம்."

இன்னும் அடிகளார், தமிழ் அனாதியாய்ச் சுத்த சித்தாந்த ஆரிட ரீதிப்படி கடவுள் அருளாணை யால் கற்பிக்கப்பட்டது என்றும், எம்மொழிக்கும் தாய்மொழியென்று ஆன்றோர்களால் கொண்டாடப் பட்டது என்றும், இனிமைப் பொருளைக்கொண் டுள்ளதென்றும், அதுவே இயற்கை யுண்மைச் சிறப்பியல் மொழி யென்றும் சுத்த சித்தாந்தச் செம்மை விரிவுரை எழுதியுள்ளார்.

வள்ளலார் தாம் எழுதிய சத்தியப்பெரு விண்ணப்பத்தில், இறைவன் திருவருளால் தமக்குத் தமிழினிடத்தே விருப்பம் பிறந்ததற்குப் பெருமகிழ் வெய்திப் பொங்கிப் புகல்கின்றார்:—

“இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தை யும், பெருமறைப்பையும், போதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் லேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமை யுடையதாய், சாகாக்கல்வியை லேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்ற னிடத்தே மனம்பற்றச்செய்து அத்தென்மொழிகளாற் பல வகைத் தோத்திரப்பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்.”

இராமலிங்கசுவாமிகள் தமிழ்மொழியைப்பற்றி எழுதியுள்ள குறிப்புக்களிலிருந்து அவர் தமிழி னிடத்து எவ்வளவு ஆர்வமும் பற்றும் கொண் டிருந்தார் என்பது நன்குபுலனாகும். ஆரியத்தைவிட

தமிழுக்கு இயல்பாய் அமைந்துள்ள உயர்வினை உள்ளவாறு எடுத்துக்கூறினும், தமது உரைநடையில் மிகுதியான வடமொழிச் சொற்களைப்பெய்து எழுதுவதிலிருந்து, பிறமொழிகளிடத்து அவருக்கு எள்ளளவு வெறுப்பும் இல்லாதிருந்தது என்பதையும் நாம் உணரலாம். சாகாக்கல்வியை அளிப்பது தமிழ் என்றும், எளிதில் சிவகதியுய்த்துச் செம்மையளிப்பது தமிழ் என்றும் அவர் கூறும் உண்மைகள் நாம் கவனிக்கவேண்டுவன.

ஆகவே தமிழ்மொழி எளிமை, மென்மை, வனப்பு, இனிமை முதலிய சிறப்புக்களைக்கொண்டது. அமர்ந்த நோக்குடன் அடக்கமும் செறிவும் கொண்டது. நட்புடனே அளவளாவும் விதமாய் வேறுசில மொழிகளிற் பேசும்பொழுது, நம்முடன் சண்டையிட்டு அடிக்கவருவதுபோன்றிருக்கும். அத்தகையகொடுமையும் கடுமுயற்சியும் தமிழிற் காண முடியாது. வாயும் மார்பும் வலியாமலே தமிழைப் பேசலாம். மூச்சுக்கு அதிகம் செலவில்லை. வாழ் நாளைக் குறைக்காது வளர்க்கும்மொழி தமிழ்மொழி. செந்தமிழால் ஒருவனை வையும்பொழுதுகூட, வாரம் கொண்டு சில வரிசைமொழி அல்லது வாழ்த்துரை பகர்வதுபோலவே தோன்றும். அதுதான்,

"முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்"

என்று அருணகிரியார் தமிழ்க்கடவுள் முருகனைப் பாடினர். பிறரை ஏசுதற்குக்கூட தமிழிற்பேசுதல்

அரிதாகிவிட்ட காலம் இது. ஆங்கிலம் கல்லாத தமிழர்கள்கூட "ராஸ்கோல்","பிளட்டிபூல்","டாம் பக்கர்", "டர்ட்டிகூஸ்" என்று பொருள்புரியாமலே திட்டுகின்றார்கள். அன்னார், ஒன்று தமிழில் திட்டு வதையே மறந்துவிட்டிருக்கவேண்டும். அல்லது தமிழில் திட்டுவது அவ்வளவு காரசாரமாய் இல்லை என்று கருதியிருக்கவேண்டும். இதனால் ஒருவரை யொருவர் திட்டிக்கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறவில்லை. திட்டும்பொழுதும் தமிழில் ஓர் அழகும் நயமும் தோன்றும் என்பதைத்தான் கூற விழைந்தது. ஒரு வீட்டுக்குப் பாணன் ஒருவன் வந்தான். அந்தவீட்டுப் பெண்ணுக்கு அவனைப் பிடிக்காது. தன் கணவனைப் பாணன் தவறான வழிகளில் இழுத்துவிடுகிறான் என்று அவள் கண்டு கொண்டாள். அதற்காக அவனை "நாயே! பேயே! நரியே!" என்று திட்டக்கருதினாள். திட்டவும் செய் தாள். அவள் அன்று ஏசினது தமிழ் உள்ளளவும் அழியாது நிலைத்துவிட்டது:—

"ஈட்டு புகழ்நந்தி பாணநீ யெங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவுங்—கேட்டிருந்தோம்
பேயென்றாள் அன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்றாள் நீயென்றேன் நான்."

விண்படாடோபத்துடன் அமளிபண்ணுகின்ற ஆரியமொழிகள் கோடையிடிபோல் ஆரவாரம் செய்பினும், முடிவில் பயன் ஒன்றும் இருக்காது.

முத்தமிழுக்குமுள்ள யாப்பு, பா, தாழிசை, துறை, விருத்தங்கள் யாவும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உயர்ந்த பொருள்களை எடுத்துக் கூறுவன வாகும். அவற்றைக்கற்பது பொழுதுபோக்குவதற் காகவன்று. அவற்றைஆராய்வோர் மெய்ப்பொருளை அறிந்து சான்றோர்களாய், மக்கட் பண்புடையவ ராய், இம்மை மறுமை வழுவாமல் வாழ்வார்கள். இருமைக்கும் உறுதிபயப்பது தமிழ்.

தமிழர்களுடைய உயிரை, உணர்வை, வளர்ப் பது தமிழ். அவர்களுடைய ஆண்மை, ஆற்றலுக்கு அடிப்படை தமிழ். அவர்களுடைய தெய்வம், சமயம், வாழ்க்கை, நாகரிகம், செல்வம், ஒழுக்கம் அனைத்தும் தமிழ். அவர்களுடைய மூச்சும் பேச்சும் தமிழ். இதை அவர்கள் நன்கு உணராதிருப்பதால் சென்னைக்கு வடக்கே தமிழ் தலையெடுக்க முடிய வில்லை. தமிழன் யார்? தமிழ் யாது? என வடநாட் டாருக்குத் தெரியாது. வெளிநாட்டார் தமிழின் அருமைபெருமையைத் தெரியும் நன்னாளிலேதான் தமிழன் வெளியுலகில் நன்கு மதிக்கப்படுவான். இதை அறிந்தே கவி பாரதியார் தூங்கும் தமிழரை இவ்வாறு தட்டி எழுப்புகிறார்:—

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மைகெட்டு

நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ! சொல்லீர்?
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல்வேண்டும்.''

தமிழர் மேன்மையுற வாழவேண்டின், தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கவேண்டும். வெளிநாட்டோர் அதை வணக்கம்செய்தல் வேண்டும்.

தமிழிசைச் செல்வம்

மலைச்சாரலொன்றில் தினைக்கதிர்கள் விளைந்து கிடந்தன. புனத்தின் நடுவிலுள்ள பரண்மிசை ஒருகுறவன் மதுவுண்டு களித்துச் சிங்கக்குட்டி போன்று சாய்ந்திருந்தான். குறத்தியும் அவன் பக்கலில் அமர்ந்தாள். அவள் அணிந்திருந்த சந்தனக் குழம்பு இன்னும் வாடவில்லை. அவளது நீண்ட கரிய கூந்தல் காற்றுவாட்டமாய் வீசி அலைந்து கொண்டிருந்தது. அதைத் தன்விரல்களால் வாரிக் கொடுத்துக்கொண்டே அத் தமிழ்மகள் பாடத் தொடங்கினள். குன்றுபோற் கொழுநன் அருகிருக்கவும், மெல்லிய பூங்காற்று மெத்தென உலவவும், அவள் உள்ளமும் பரவசமெய்திவிட்டது. களித்த மனத்திடைக் கனிவுறும் பாக்கள் பொங்கியெழும் என்பது உண்மையே. அதிலும் குறவன் மனம் உருகக் குறத்திபாடும் பாட்டல்லவா! அதையும் குறிஞ்சிப்பண்ணில் இசைக்கலுற்றாள். மல்லல் மகிழ்ச்சியலம்பிக்கொழித்தது. அவ்விசைப்பெருக்கு மதுரகானமாயிருந்தது. தினைபறிக்கவந்த யானையும் இசையில் மனம்பறிகொடுத்து, ஆடாது அசையாது நின்றது. இழுமென்ற இசையின் இனிமையால், குறத்தியின் குறிஞ்சிப்பண் அத்திருட்டுயானையைத்

தாலாட்டி உறங்கவும் வைத்துவிட்டது. யானை, தினைக்கதிரை மறந்ததன்றி, தன் இமையாத கண்களும் பொருந்தி உறங்கும்படி, தமிழிசையில் தன் முழுமனத்தையும் ஈடுபடுத்தியதென்றே சொல்லலாம். அகநானூற்றில் இது ஒரு சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கிறது:—

"உளமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊர விருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன்."

குறிஞ்சிப்பண் யானையின் கொடுமையையும், பசியையும் மாற்றித் தூங்கவைத்தது.

"காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்"

என்பதன் உண்மை இதனால் நன்கு விளங்கும்.

பண்டைத் தமிழ்மக்களிடையே, கானவரும் கொடிச்சியருங்கூட தமிழ்ப்பண்களைப் பன்னிப் பாடினரென்றால், உயர்வாழ்க்கையில் இருந்தோர் பயிற்சியைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை. அக்

காலத்தில் தமிழுலகையாண்டுவந்த அரசர்களும் தமிழர்களாய் இருந்தார்கள்; அதனல் தமிழ்மொழியைப் பேணிப் போற்றினுர்கள்; தமிழிசையைத் தாங்கி வளர்த்தார்கள். நாட்டில் எங்கேசென்ருலும் கூத்தரையும், விறலியரையும், பாணனையும், பாடினியையும் இசைக்கருவிகள் தாங்கித் திரிவதைக் காணலாம். அக்கருவிகளின் பெயர்கூட நமக்கு வாயில்நுழைவது இப்பொழுது கடினமாகிவிட்டது. மேகத்தைப்போல் அதிரும் முழவு, ஆகுளி என்னும் சிறுபறை, தகடாகத்தட்டின பாண்டில் அல்லது கஞ்சதாளம், பீலியணிந்த கொம்பு, துதிக்கை போன்ற நெடுவங்கியம், இளி என்னும் பண்ணைப் பாடும் தூம்பு, குழல், தட்டை அல்லது கரடிகை, சல்லிஎன்னும் எல்லரி, பதலைஎன்னும் ஒருகண்மாக் கிணை என்பன இசைக்கருவிகளுள் ஒருசிலவேயாம். யாழ் என்னும் நரம்புக் கருவியில் எத்தனையோ விதங்களுண்டு. இவையெல்லாம் தனித் தமிழிசைக் கருவிகளேயாகும். சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையிலும், மலைபடுகடாம் முதல் 40 வரிகளிலும் காணலாம்.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு"

என்னும் கலித்தொகையடிகளால், மதம்பிடித்த யானைகளைக்கூட யாழிசையால்வென்று வசப்படுத்தினர் என்று தெரிகிறது. யானை நாதத்திற்ருேற்றுதலால் இசைக்கு வணங்குதல் இயல்பு என்பர்.

தமிழ்ப்பண்களை, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழு பெரும் பிரிவுகளாகக்கொண்டு, ஒவ்வொன்றையும் பல திறங்களாகவும், திணைகளாகவும், துறைகளாகவும் அமைத்துப் பயின்றுவந்தனர். நாள்ஒன்றைப் பல பொழுதுகளாகப் பகுத்து, ஒவ்வொரு பொழுதிற்கும் ஏற்பன ஏலாதன பண்கள் இவை என்றும் பாகுபாடு செய்திருந்தனர். எடுத்துக்காட்டாக, காலையில் மருதப்பண்ணும், மாலையிற் செவ்வழிப்பண்ணும் பாடவேண்டுமென்று அக்காலத்தில் தமிழிசை வல்லோர் நியதியிட்டிருந்தனர்.*

வன்பரணர் என்னும் சங்கப்புலவர் இசைநலம் உணர்ந்தவராயுமிருந்தார். அவர் கண்டீரக்கோப் பெருநள்ளி என்பவனது அரண்மனைக்குச் சென்றிருந்த காலத்து அங்குள்ள இசைவல்லார் இசை வரம்பு கடந்து, காலையிற் பாடவேண்டியபண்ணை மாலையிற்பாடவும், மாலையிற் பாடவேண்டியபண்ணைக் காலையிற்பாடவுமாய் வரன்முறைபிறழ்வதைக் கண்டார். அதற்கு நள்ளியினுடைய வள்ளன்மையே காரணம் என்பதையும் தெரிந்தார். இசை கெடப் பாடினும் இல்லையென்னாது ஈயும் உபகாரியாய் நள்ளி விளங்கிய ஏதுவினால், அங்குள்ள பாணர் முதலியோர், கவலையின்றி இசைவிதிகளையும் மறந்தனர் என்று குறைகூறுவதுபோல்,

*மதுரைக்காஞ்சி 604, 658-ம் வரிகளிற் காணலாம்.

நள்ளியின் கொடைத்திறத்தைப் புலவர் வியந்து கூறும் திறன் போற்றத்தக்கதாகும்:—

“ நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மை யானே ”

—புறநானூறு 149.

இதனால் மரபு பிசகாது யாழ்வாசித்தல் வேண்டும் என்பதும் நயமுற வற்புறுத்தப்படுகிறது.

பாரி என்னும் சிற்றரசன் ஒரு மலைமீது தலைநகர் அமைத்து ஆண்டுவந்தான். பாடகர்களைப் பெரிதும் போற்றுபவன். இசையில் மிகவும் மனத்தைச் செலுத்தினவன்; இசைவிருப்பத்தால் உயிரையுங் கொடுக்கும் வள்ளலாவான். அவன் மீது அழுக்காறு கொண்டு சேர சோழ பாண்டியராகிய மூவேந்தரும் போர்தொடுத்து அவன் மலையை முற்றுகையிட்டனர். பாரி மனந்தளராது மலையைக்காத்தான். மூவரும் அவனை வெல்ல முடியாது திண்டாடினர். அப்பொழுது பாரியின் நண்பரான கபிலர் என்னும் புலவர் அம்மூவரையும் நோக்கி, “நீவிர் மூவருங்கூடி முழுவலியுங் காட்டினும் அவனது வானுறவோங்கிய பறம்பினை வலிதிற் பற்றமுடியாது. ஆனல் நீங்கள் இசையால் அவனை வெல்லலாம். உமது உரிமை மகளிரை

விறலியராக அழைத்துக்கொண்டு, கையில் யாழ் எடுத்துப் பண் எழுப்பிப் பாடிக்கொண்டும், ஆடிக் கொண்டும் அவனை யடைந்தால், மூங்கில்நெல்லும் பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், தேனும், சுனை களும் நிறைந்த தன் செல்வமலையை உடனே உங்களுக்கு அளித்துவிடுவான்" என்று கூறுகிறார். அப்பாடல் வருமாறு:—

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழா தன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினுந்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சிறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கி யும்மே."

—புறநானூறு 109.

இதனல், படைமுகத்தில் இழவாத தான் வாழும் பதியையும் பாரி கொடைமுகத்தாலீவான் இசைப் புலவர்களுக்கு என்பது தெளிவாகும். இதிலிருந்து அக்காலத்து மன்னர் தமிழிசையை எவ்வாறு போற்றினர்கள், அக்கலையும் எவ்வாறு செழித் தோங்கியது என்பன நன்குவிளங்கும்.

தமிழ் மன்னர் தமிழ்ப்பண்ணைக் கேட்டுக் கொண்டே துயிலெழுவர் என்பதைப் பண்டை நூல்களில் நாம் பரக்கக் காணலாம். தமிழரசனது நாளோலக்க மண்டபத்தில் பாட்டும் பண்ணும் பரந்திசைத்துக்கொண்டே யிருக்கும். இதைக் குறித்து வேடிக்கையான செய்தி ஒன்று அக நானூற்றில் காணப்படுகிறது. தித்தன்வெளியன் என்னும் சோழவரசன் காலத்தில் அவன் தலை நகராகிய உறையூரைத் தாக்கவேண்டி வேற்று நாட்டரசனகிய கட்டி என்பவன் படைதிரட்டி வந்தான். காலைப்பொழுதில் உறையூரைக் கிட்டி னன். அப்பொழுது தித்தன் இவன் வரவுக்கு யாதும் கவல்வுறாது தன் கொலுமண்டபத்தில் வீற்றிருந்து பாணர்களைக்கூட்டி இசைவிருந்துண்டு மகிழ்ந்திருந்தான். கட்டி என்பான் பிறநாட்டவன் ஆதலின் தமிழிசையை உணரானய், சோழன் கோயிலினின்றெழுந்த முழவொலியைக் கேட்டுப் போர்முரசோ எனப்பயந்து தன் படைகளுடன் ஓட்டம் பிடித்தவன் இன்னும் பிடிபட வில்லை. அப்பேதைக் கட்டியின் அறிவின் தெளிவும்

போரின் திறமுங் குறித்துத் தமிழ்நாடுமுழுவதும் ஒரே பேச்சாயிருந்தது:—

"வலிமிகு முன்பிற் பாணனொடு மலிதார்த்
தித்தன் வெளியன் உறந்தை நாளவைப்
பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிப்
போரடு தானைக் கட்டி
பொராஅ தோடிய ஆர்ப்பினும் பெரிதே.

—அகநானூறு 226.

தமிழரசர் தம்நாடு பகைவரால் வளைக்கப்பட்ட காலையுங்கூட இசைமாந்தித் திளைப்பதினின்றும் நீங்குவதரிது என்பதால், அன்னவர் எவ்வளவு ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் இசைக்கலையைப் பாராட்டி வளரச் செய்தனர் என்பது விளக்க மாகும்.

இவ்வாறு மூவேந்தரால் வளர்க்கப்பட்ட தமிழ் இசைச் செல்வம் 7-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு முடிய, பல்லவர்களாலும் தஞ்சைச் சோழர்களாலும் பேணப்பட்டுவந்தது. அக்காலத் தெழுந்த தேவாரம், திவ்வியப்பிரபந்தங்கள் எல் லாம் பண்ணோடுபயின்ற பாடல்களேயாகும். அவை என்றும் உலவா இசைக்களஞ்சியங்களாய் மிளிர் கின்றன. தமிழிசையைத் தெய்வமாகவே போற்றித் துதித்துப் பாராட்டினர். திருஞானசம்பந்தர் பல வோசைத் தமிழவையும் சிவனாகவே இருக்கின்றான் என்று அழகுறப்பாடினர். இசைத்தமிழின் பல

ஓசைகளிலும் இறைவன் இலங்குகிறான் என்றதனால், ஒருசிலர்கூடித் தலையாட்டும்விதத்தில் மேடைகளில் ஏறிப் பாகவதர்கள் பாடுவதோடுமட்டும் நின்றுவிடாது, தமிழிசை பலதுறைகளிலும் பலவிதத்திற் பரந்தோங்கிச் செழிப்புற்றது என்பதை நாம் மறந்துவிடலாகாது. தமிழிசையின் பல துறைகளையும் பாரதியார் நமக்குப் பரிவுடன் பாடிக் காட்டுகின்றார்:—

"மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும்"

இத்துறைகள் அனைத்தினும் தம் நெஞ்சைப் பறிகொடுத்தே சம்பந்தர் "பலவோசைத் தமிழவையும்" என்று பண்புறப்பாடினார்.

பின்னர் 14-ஆம் நூற்றாண்டு ஆரம்பமுதல் தமிழரின் ஆட்சி நலிவுற்றது. தமிழ்நாடு ஒருவர்பின்

ஒருவராகத் துலுக்கர்களாலும், விஜயநகரத் தெலுங்கர்களாலும், வடுகர்களாலும், மராட்டியர் களாலும், வெள்ளேயர்களாலும் தாக்குண்டு தத் தளித்தது. தமிழிசையைத் தாங்கும் தமிழ்மன்னர் இல்லாது போயினர். பின்னர் ஆதிக்கம்பெற்ற வடுகரும், மராட்டியரும், தமிழிசையின் இனிமையை நன்கு உணரமுடியாதநிலேயில் தெலுங்குப் பாட்டு களேயே அதிகமாகப் பாராட்டினர். பொருளீட்டும் நோக்கமே இசைவாணர்களுக்கு முக்கியமாயிருந் தமையால் தெலுங்கிசை மிகவும் பயிலப்பட்டுத் தமிழிசை தலேமறையலுற்றது. தமிழ் அறியாத புலவர் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்ததால் உயரிய தமிழ்ப் புலமை குதிரைக்கொம்பாகி விட்டது. போலிப் புலவர் தோன்றித் தமிழைக் கெடுக்கலுற்ற னர். இதைத் தெரிவிக்கும் வேடிக்கைக் கதை ஒன்று உண்டு.

குட்டப்பராயடு என்ருெரு தெலுங்கரசன் தமிழ் நாட்டில் ஒருபகுதியை ஆண்டுவந்தான். கலேமகள் நாளன்று அவன் கொலுவிருந்து புலவரை ஆதரிக்க முயன்ருன். அப்பொழுது ஒருவன் புலவன் எனத் தோன்றி பின்வரும் பாட்டைப் பாடினன்:—

“ராயடு ராயடு காவெட்டி ராயடு
கோவைப் பழம்போலச் சிவந்த ராயடு
குன்றிமணி போலச் சிவந்த ராயடு
காவிக்கல்லுப் போலச் சிவந்த ராயடு
கட்டப்ப ராயடு மகன் குட்டப்ப ராயடு”

என்று ஓலைச்சுருளில் வாசித்தான். ராயடுவுக்குப் பொருள் புரியவில்லை. அருகிருந்தவர்கள் அது ஓர் அருமையான தமிழ்வாழ்த்துப்பாடல் என்று மெச்சுவதைக் கேட்ட ராயடு புலவனுக்குப் பொற்பரிசு வழங்கினான். அதைக்கண்ட மற்றொருவன் பொருனாகி, "இப்பாடலில் உவமைவழு இருக்கின்றது. குன்றிமணி, காவிக்கல்லையும் கோவைப்பழத்தையும் போல் சிறந்ததாகாது. குன்றிமணி மூக்கில் கருத்திருக்கிறது. ராயடு அவ்வாறு இல்லை. ஆதலால், பாட்டு பிழைபட்டது" என்று எதிர்த்தான். பரிசில் பெற்றவனுக்குப் பாடும்புலமை இல்லாதுபோயினும் வேளைக்கடுத்தமதி(சமயோஜிதபுத்தி)உண்டு. அவன் உடனே வழுவுக்கு ஏற்ற அமைதி கூறினான். "இவன் எதிர்த்துக் குற்றம் காட்டுவான் என்று நினைத்தே நான் என்பாடலில் குன்றிமணிக்கு முன்னும் பின்னுமாகக் கோவைப்பழத்தையும் காவிக்கல்லையும் வைத்திருக்கிறேன்; கோவைப்பழத்தைப் பிழிந்தால் சாறுவரும்; அச்சாற்றில் காவிக்கல்லை இழைத்தால் ஒரு சிவந்த குழம்பு உண்டாகும்; அதை எடுத்துக் குன்றிமணியின் மூக்கில் தடவி விட்டால் குன்றிமணியின் களங்கம் மறைந்து போகும்; ஒரே சிவப்பாக இருக்கும். இதைத் தெரிந்துகொள்ளாது இவன் பாடலைப் பழிக்கப் புறப்பட்டுவிட்டான்; இவன் நல்ல ரசிகன் இல்லை" என்று வாதாடினான். ராயடு திருப்தியாகி மேலும் பரிசுகள் கொடுத்தான். இத்தகைய பரிதாபநிலை தான் அக்காலத் தமிழுக்கு ஏற்பட்டிருந்தது. இந்த

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்செய்த தவப்பயனால் தமிழ் மன்னர் இராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நம்மைத் தட்டி எழுப்பிய தன்றி, வேண்டும் தனத்தையும் சொரிந்து, முத் தமிழை வளர்க்கும் முன்பணியில் முனைந்து, தமி ழிசையையும் தாங்கிநின்றார்கள்.

இசைத்தமிழைப் போற்றி மேன்மைப்படுத்த வேண்டுமென்றால் அதற்கு ஓர் எதிர்ப்பா? அவ் எதிர்ப்பும் தமிழ்நாட்டிலா உண்டாகவேண்டும்? இத் தகைய எதிர்ப்பானது தமிழ்நாட்டின் தாழ்ந்த நிலையையும் அதன் பிற்போக்கையுமே எடுத்துக் காட்டுகின்றது. தமிழிசை ஓங்கினால் இசைக்கலையே பாழாகிவிடும் என்கின்றனர். கர்நாடகசங்கீதத்திற் குத் தீங்குவந்துவிட்டது என்று முதலைக்கண்ணீர் முத்து முத்தாய் உதிர்க்கின்றனர். ஒரு மொழியில் உள்ள பாடல்களை அதிகப்படுத்திப் பயிற்றுவித்தால் இசைக்கலை வளர்ச்சியுறுமேதவிர அது தளர்ந்து விடும் என்று சொல்வது வீணேயாகும். அவ்விதம் கூறுவது பேதைமை. தமிழிசை வளரவளர இசைக் கலை சிறப்புறுமேயன்றி நலிந்துவிடாது. கர்நாடக சங்கீதத்தின் ஆணிவேரே இசைத் தமிழ்நிலத்தில் ஊன்றி வளர்ந்ததுதான்.

ஒவ்வொரு நாட்டிற்கும் சென்று அந்த நாட்டு மொழிப் பாடல்கள் தமிழ்ப் பாடல்களுக்கு எத் தாத்தன என்று வினவினால். அந்நாட்டு மொழிப் பாடல்களே தமிழ்ப்பாட்டுகளைவிட மேலென்று

அந்நாட்டுமக்கள் தயங்காது கூறுவர். அவ்விதம் கூறுவது அவர்களுடைய மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும், தம் உயர்நிலையுணர்ச்சியையும் விளக்குகின்றது. ஆனல் தமிழ்நாட்டில்மட்டும் சில தமிழ்மக்கள் தமிழ்மொழி தெலுங்கைப்போல் இசைக்குப் பொருந்தாது என்று துணிந்து கூறுகின்றனர். இத் தமிழறியும் பெருமாள்களைப்பற்றி என்னதான் சொல்வது? அவர்கள் அவ்வளவு நடுநிலைவாய்ந்த நயமுடையார் என்று வியக்கவேண்டியதுதான்! அவர்களைச் சொல்லவும் குற்றமில்லை. நீண்டகாலமாகப் பொருள் விளங்காத பாடல்களைக் கேட்டுவந்ததனல், இசைக்கு அழகு இருள் கவிந்திருத்தல் என்றே கருதியிருந்தார்கள். இப்பொழுது தமிழ்ப் பாடல்களைக் கேட்டுப் பொருள் விளங்குவதனல், இது எப்படி இசையாகும் என்று ஏங்குகின்றனர் போலும்! உண்மையாக அவர்கள் ஐயுறுவதானல் அவர்கள் அளிக்கத்தக்கார். இறைவன் அவர்களுக்கு அருள்புரிவானக! ஆனல் தம் நெஞ்சறிவதைப் பொய்த்துப் புறத்தே தமிழிசையைத் தூற்றிவரும் பெரியார்களும் உளரன்றே? அத் தூமகேதுக்களினின்றும் நம்மை இறைவன் காத்தருள வேண்டும்.

'இசை' என்பது சங்கீதத்திற்கும் புகழுக்கும் உரிய பொருண்மையைக் குறிக்கும் ஒரு தமிழ்ச் சொல். இது வேறு எம்மொழியிலும் காணப்படாத ஒரு தனிச்சிறப்பு. இதனல் தமிழர் இசையை

எவ்வாறு நுணுகி அளந்தறிந்து வைத்துள்ளார் என்பது தெரியவரும். ஒவ்வொரு மொழிக்கும் அது பயிலும் நாட்டின்கண் அதன் பண்ணாகிய இசை வளர்ச்சியைக் கொண்டே அதன் புகழும் வளர்வது இயல்பு. உயிருக்குஎவ்வாறு உடல்அவசியமோ அது போல் பண்ணிற்கு மொழியும் அவசியமேயாகும்.

"பண்ணென்னும் பாடற்கியைபின்றேல்"

என்றார் திருவள்ளுவரும். இசைபொதிந்த ஒரு பாட்டில், அதன் பொருளை நன்கு உணர்ந்தாலே, அவ்விசையையும் ஒருவன் நன்கு நுகரமுடியும். பொருளுணராது ஒலியை மட்டும் ஒருவன் கேட்பதில் பயன் ஒன்றுமிராது. பொருளற்ற இனிய ஒலி ஓடும் ரயிலிலும், வண்டு முரலும் பாட்டிலும், தெலுங்குக் கீர்த்தனத்திலும், மலையாப் பண்ணிலும், உறைகழிக்கும் வாளிலும்கூடக் காணலாம். அவைஎல்லாம் தமிழர்களுக்கு ஒன்றேயாகும். தமிழ்ப்பாட்டைப் பண்ணோடுபாடினால், அவ்வின்பப் பண்ணோசையோடு, அப்பாடலின் சொற்சுவையும், பொருட்சுவையும் தமிழ்மக்களது ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பனவாய், அவர்களது ஆன்மவளர்ச்சிக்கும் ஏதுவாகும். இவ்வுண்மை தெரிந்தே,

"சொற்பாவின் பொருள் தெரிந்து தூய்மைநோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்காதானை"

என்று அப்பரடிகளும் அருளிப்போந்தார்.

தெலுங்குப் பாட்டைமட்டுமே தெலுங்கர்களால் இரசிக்க முடியும். தமிழ்ப் பாடல்களைப் பாடினால் தெலுங்கர் காதைப் பொத்திக்கொள்வர்; அல்லது முன்னர்க்கண்ட கட்டியைப்போல், எழுந்து ஓடி விடுவர். ஆனால் நமது தமிழ்நாட்டுக் கச்சேரிகளில் தமிழர் தெலுங்குப்பாட்டைக் கேட்டு ஓடவில்லையே என்றால், அதுதான் இங்குள்ள வேடிக்கை. இந் நாட்டில் பாகவதர்கள் இரண்டொரு தமிழ்த் துக்கடாக்களைக் கடைசியில் பாடுவது என்ற வழக்கம் வைத்திருக்கிறார்களே, அதுதான் தமிழர்களை எழுந்துஓடாமல் இருத்திவைக்கிறது. கால்கடுக்க இருந்து முதலில் செவிகைப்பக் கேட்டாவது இறுதியில் இரண்டொரு தமிழ்ப்பாடல்களைப் பாடினால் கேட்கலாமே என்றுதான் உட்கார்ந்திருக்கிறார்கள். சிலர் தலையாட்டுவதுகூட உண்டுதான். அது ஒரு பெரிய ஏமாற்றம். பிறர் தலைகள் ஆடுவது கண்டு சிலர் தம் தலைகளையும் உருட்டுவர். அல்லது தாமும் இசைஉணர்ச்சி உடையவர்கள் என்று பிறரை மெய்ப்பிப்பதற்காகவும் இருக்கலாம். சிலர் தூக்கக் கலக்கத்தில் தலையாட்டுவதும் உண்டு. இது கூடச் செய்யாமல்தான் இரண்டுமணி நேரம் எப்படி உட்கார்ந்திருப்பது? இந்தப்பரிதாப நிலையைப் போக்குவதற்காகத்தான் தமிழ்ப்பாட்டைப் பாட வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்படலாயிற்று.

இதை எதிர்த்து, "எம்மொழியிற் பாடினால் என்ன? இசைதான் பிரதானம்" என்கின்றார்கள்

சிலர். "ரொம்பசரி. நாங்கள் தமிழ்மொழியில் இசையோடு பாடுகிறோம். பிறமொழிப் பொருள் எங்களுக்குப் பிடிபடவில்லை. நீங்கள் மொழியை விட்டு இசையைப்பருகி ஆனந்திக்கலாமே" என்றால் இந்தத் தமிழ்த் துவேஷிகள், "மொழித்துவேஷம் கூடாது" என்கிறார்கள். இது கல்வீட்டுக்காரனைக் கண்ணாடிவீட்டுக்காரன் கல்லெறிவது போலத்தான் இருக்கிறது. சாகித்யம் முக்கியமில்லை சங்கீதமே முக்கியம் என்று எதிர்ப்போர் தமிழ் சாகித்யத்தை மட்டும் ஏன் எதிர்க்கவேண்டும்? அவர்கள் எதிர்ப்பே அவர்கள் கூற்றைப் பொய்யாக்குகின்றதல்லவா?

வடநாட்டிலிருந்து ஏமநாதன் என்னும் இசை வல்லான் தமிழ்நாடு போந்து மதுரையை அடைந்ததும், தமிழிசையைப் பழித்தான். அவனால் தமிழிசைச் செல்வத்திற்குப் பேரிடர் நேரும்போலிருந்தது. இசைச்செல்வராகிய பாணபத்திரரும் பயந்துவிட்டார். அத்தமிழ்ப்பாணனின் உயர்வைக் காட்டவும், தமிழிசையின் புகழை நாட்டவும், ஆலவாய் அரனார் திருவுளங்கொண்டார். பாட்டுக்கு உருகும்சொக்கர் தமிழ்ப்பாணனைக் காக்கவேண்டித் தமது தலைகடுக்க விறகுக்கட்டைச் சுமந்து சென்றார். உடன் யாழ்மீட்டிப் பாடற்றொழிற் குற்றம், உடற்றொழிற் குற்றம் ஒன்றும் நிகழாத விதத்தில். சேனும் புவியும் பாதலமும் தித்தித் தொழுகும் செந்தேன் என, சாதாரிப்பண்ணைப் பாடினதும், அவ்வடநாட்டான் இரவிலேயே சொல்

லாமற் பறையாமல் ஓடிமறைந்தான். தமிழிசை ஓங்கி வளர்ந்தது. சோமசுந்தரக்கடவுள் பாடிய அத்தமிழ்பண்ணைக் கேட்டுத் தேவர்களும் உள்ளம் பூரித்தனர். அவர்கள் அப்பொழுது அடைந்த இன்ப நிலையை,

"போதுளான் பரமன்பாதப் போதுளா னுனன்வேலை
மீதுளான் பரமானந்த வேலைமீ துள்ளானுன்
தாதுளாங் கமலக்கண்போற் சதமகன் உடலமெல்லாம்
காதுளா னல்லேனென்றான் கண்ணுளான் கானங்கேட்டு"

என்னும் தெய்வப்பாடல் இனிது கூறுவதாகும்.

இவ்வாறெல்லாம் தமிழ் முதற் கடவுளாலும், தமிழ்முடி மன்னராலும் தழைத்தோங்கிய தமிழிசைச் செல்வம் இப்பொழுதும் தலைசாய்ந்தொழியாதபடி மேலும் தழைத்தோங்கச் செய்தல் வேண்டும். நமது தமிழிசைச்செல்வம் யாதொரு குறைவுமின்றி வீறுபெற்றெழுமென்பது திண்ணம்.

தமிழ் இசை இயக்கம்

தமிழிசை இயக்கமானது, புத்துயிர்கொண்டு இப்பொழுது சில ஆண்டுகளாக அரியதொண்டு ஆற்றிவருகிறது. தமிழன்பர்கள் இவ்வியக்கத்திற்குப் பேராதரவு அளித்து வருகிறார்கள். தமிழ் நாட்டில் இத் தொண்டிற்காக அன்பர்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சியும், ஊக்கமும், ஆர்வமும், பொருட்செலவும் அளவிடற்கரிதாகும். இவ்வளவு உழைப்பையும் தமிழல்லாத வேறு பிறநாடுகளிற் செலவழித்திருந்தால், தமிழ்வழங்காத அந்நாடுகளிற் கூட, தமிழ்ப்பாடல்களின் அருமை பெருமைகள் அந்நாட்டு மக்களால் நன்கு உணரப்பட்டு, எங்கும் தமிழிசை பொங்கிப் பொலிவெய்தியிருக்கலாம். இத் தகைய முயற்சிகள் எல்லாம் பிறநாடுகளுக்குச் சென்று நாம் எடுத்துக்கொண்டிருக்கவேண்டியவை களே. அந்தோ! இம்முயற்சிகளை நாம் நம் அருமைத் தமிழ்நாட்டினுள்ளேயே எடுக்கவேண்டியதாயிற்று.

தொன்றுதொட்டு இயல், இசை, நாடகம் என முத்திறனாய் முளைத்தெழுந்த - தித்திக்கும் தேமதுர முத்தமிழ்மொழியானது, முத்திறத்தும் முறையே சிறப்புற்று ஓங்கி முதன்மையடைந்து வந்தது. ஒவ்வொரு தமிழ்ப்பாடலும் பண்ணுடன் இசைத்தே

பயின்று பாடப்பட்டது. தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவியென்னும் இசைக்கருவிகளின் வகைகளிற் கணக்கிலடங்காத இசைக்கருவிகள் நம்நாட்டில் தோன்றின. இவ்விசைக்கலன்களைத் தோளில்தூக்கிச் சுமந்துகொண்டு கூத்தரும், பாணரும், விறலியரும் கூட்டங்கூட்டமாய் நாடு எங்கும் சுற்றித்திரிந்து இசைத்தமிழை இலங்கச் செய்தனர். தமிழ்மொழியும் ஏழிசைச் சூழலில் களிநடம்புரிந்து நம் முன்னோர்மனதைக் கனியச் செய்தது. முத்தமிழ்வேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தம் உடல், பொருள், ஆவி, மூன்றையும் தமிழுக்கு அளித்து, நமது அன்னை தமிழை அன்புடன் போற்றினர். ஆனல் கி. பி. இரண்டாம்நூற்ருண்டிற்குமேல் சமணக்கொள்கைகள் நம்நாட்டினுட்புகுந்து இசைத்தமிழுக்கு இடையூறு விளைப்பதாயின. 'காமநோயைக் கனல எழுப்பும்' என்று சமணர்கள் இசையைக்கண்டித்து ஒதுக்கினர். ஆரும்நூற்ருண்டிற்குப்பின், சிவனடியார்களும் வைணவ ஆழ்வார்களும் நம்நாட்டிடைத் தோன்றி, ஆயிரக்கணக்காகப் பண்ணூர்ந்த பைந்தமிழ்ப் பாடல்களைப் பாடி, மக்கள் மனதை மகிழச் செய்தனர். இங்ஙனம் வீறிட்டெழுந்த விழுத்தமிழிசையானது கி. பி. பதினைந்தாம்நூற்ருண்டுக்குப் பின் தளர்ச்சியுறலாயது. அயலவரின் படையெடுப்பே இதற்குக் காரணம்.

தெலுங்கரது ஆட்சி தமிழ்நாட்டிற் புகுந்தது. தெலுங்குப்பாடல்கள்பரவலாயின. தெலுங்கு சமஸ்

தானங்கள் தெலுங்கைப்போற்றுவது இயல்பே, தெலுங்குப்பாடல்களுக்குப் பெருமதிப்பு ஏற்பட்டதால், தமிழ்ப்பாடகனும் தன்வயிற்றைவளர்ப்பதற்காகத் தமிழ்ப்பாடல்களைக் கைவிட்டுத் தெலுங்குப் பாடல்களையே பெரிதும் கற்றுவந்தான். தெலுங்கு மன்னர்கள் தமிழ்நாட்டைவிட்டகன்றபின்னரும், தெலுங்குப்பாடல்கள் தமிழ்நாட்டைவிட்டகல்வதாகக் காணோம். இசைக்கலையாசிரியர்கள் தாம்மறந்த தமிழ்ப்பாடல்களைப் புதிதாகக் கற்றுக்கொள்ளும் மதுகையின்றியும், அவ்விதம் கற்றுக்கொள்வதற்குப் போதிய தூண்டுதல் இல்லாமையாலும், தாம் பயின்றுவந்த தெலுங்குப்பாடல்களையே தம்மாணுக்கர்களுக்குக் கற்றுக்கொடுக்கலாயினர். புதிதாக இசைக்கலையிற் பயில்வோர்களும் இசை, தெலுங்குப் பாடல்களிலேதான் நன்கு அமையும்போலும் என்று அவற்றையே படிக்கலானுர்கள். ஆனல் தமிழ்ப்பொதுமக்கள் மட்டும் தமிழ்ப்பாடல்களையே கேட்க விரும்பினர். அவ்விருப்பத்தைத் தீர்ப்பதற்காகவே பாடகர்களும் ஒருசில தமிழ்ப்பாடல்களைக் கைச்சரக்காகவைத்திருந்தனர். முற்றிலும் தெலுங்குப் பாடல்களையே பாடி எந்தப்பாடகனும் தமிழ் நாட்டிற் பெயர்வாங்கியதில்லை; அவ்விதம் பெயர் எடுக்கவும் முடியாது.

இவ்வாறாக, தெலுங்கர் ஆட்சி நீங்கிய பின்னும் தமிழிசையை மறந்த இசைவாணர்கள் தெலுங்குப் பாடல்களை விடாப்பிடியாய்க் கட்டிக்கொண்டு திரிந்தனர். இசை யரங்குகளில் தமிழ்ப் பாடல்கள்

ஒன்றிரண்டே, முடியும் தறுவாயில், பாடகர்களாற் பயிலப்பட்டன. அவை ஒன்றிரண்டேயாயினும், தமிழ்மக்கள் அவற்றைப் பெருமகிழ்ச்சியோடு செவி நுகர்ந்து களிப்பெய்தினர். மூன்றுமணிநேரம் ஒரு கச்சேரி நடப்பதென்றால், தமிழ்மக்களே குழுமி யுள்ள பெருங்கூட்டங்களில், இரண்டரைமணிநேரம் தமிழ்மக்களுக்குப் பொருளேபுரியாத பிறமொழிப் பாடல்களைப் பாடகன் பாடி மக்களுடைய செவியை யும் மனதையும் புண்படுத்துவான். அவற்றையும் தமிழ்மக்கள் பொறுமையோடு கேட்டுக்கொண்டு, ஆடாது அசையாது சித்திரத்தில் சமைத்துவைத்த பதுமைகள்போல் வீற்றிருப்பார்கள். அவ்விதம் அவர்கள் திணறிக்கொண்டு இருக்கும் நிலையைப் பாடகன் கண்டு, தனியிசை மயக்கத்தில் அவர்கள் உருகிக் கிடப்பதாகப் பெருமைப்படுத்திக்கொள்ளு வான். ஆனால், கூட்டத்தின் புழுக்கத்தாலும், மனப்புழுக்கத்தாலும் நேர்ந்த உடம்பின் வியர்வை உருக்கம்தான் அது என்று சொல்லவும் வேண் டுமோ? அவ்விதமெனின் உண்மையில், தமிழ்மக்கள் ஏன் வீணாக மணிக்கணக்கில் உட்கார்ந்து உடல் வெந்தார்கள்? அவன் எப்பொழுது தமிழ்ப்பாட்டுப் பாடுவான் என்றுதான் ஏங்கிக்கொண்டிருந்தார் கள். தமிழ்ப்பாடலின்மேலுள்ள வேட்கைதான் அவர்களை அவ்விதம் துயருற்றாயினும் இருக்கும்படி செய்தது. இதைப் பாடகனும் நன்கு உணர்வான்.

பின், ஏன் அவன் முதலிலேயே தமிழ்ப்பாடல் களைப் பாடவில்லை? இதற்குக் காரணம் காணுதல்

மிக எளிது: தமிழ்ப் பாடல்களை முதலிலேயே பாடி விட்டால், பிறமொழிப்பாடல்களைத் தான் எங்ஙனம் பாடுவது? அவற்றை இருந்து கேட்பார் யார்? தனக்குத் தெரிந்த தமிழ்ப் பாடல்களோ மிகச் சுருக்கம். மூன்று நான்குமணிநேரம் ஓட்டுவதற்கு இயலாது. ஆதலால் முதலில் இரண்டுமூன்றுமணி நேரம் தமிழ் எங்கே? தமிழ் எங்கே? என்று கேட் போரைத் தவிக்கச்செய்து, பின்னர் ஒரு சிறு தமிழ்ப்பாடலை, வறண்ட நிலத்தில் வான்மாரிபொழி வதுபோல், இன்னிசை வாய்ப்ப அவன் தேன்மாரி பொழிவான். அப்பொழுது கேட்போரின் நிலை, ஊன்மாறி, உயிர்மாறி, உணர்ச்சிபொங்கி அவர்கள் சிரக்கம்பம், கரக்கம்பம்செய்து, பாடகனை வாயாரப் போற்றிப் புகழ்வார்கள். பாடகனும் பெரிய பாடக னாகிவிடுவான். கச்சேரியும் ஒருவாறு முடிவடையும். இந்தப்பரிதாபநிலையைமாற்றி அமைப்பதற்காகவே இத்தமிழிசை இயக்கம் தமிழ்நாட்டில் வேண்டப் படுவதாயது.

•

இவ்வியக்கம் ஏற்பட்டது இசைவாணர்களுக்கு ஒரு நல்லகாலம் என்றே சொல்ல வேண்டும். இப் பொழுது நாட்டுமக்கள் அனைவருக்கும் இசை உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. ஐந்து ஆண்டு களுக்கு முன், "இசையென்றால் நமக்கென்ன, அதுதான் பொருளே புரியாதே!" என்று அகன்று சென்றவர்களெல்லாம் இப்பொழுது, இசையரங்கு என்றால் முன்னணியில் வந்து வீற்றிருக்கிறார்கள்.

பாடகன் தமிழிற் பாடுகின்ருனு என்று ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்ருர்கள். இவ்வாய்த்தற்கரிய தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இசை வாணர்கள் தமிழ்ப்பாடல்களைப்பாடிக் கேட்போரை மகிழ்வித்துத் தாங்கள் நல்லபெயர் வாங்குவதுடன் இசைக் கலையையும் மேலோங்கி வளரச்செய்யலாம். விரும்பிப் பாடல்களைக் கேட்கும் இரசிகர்களின் தொகை அதிகரிப்பது, இசைக்கலைவளர்ச்சியின் அறிகுறியேயாகும். பலருக்கும் இசையுணர்ச்சி எழுவதானது இசைக்கலையின் உயர் நிலையைத் தாழ்த்துவதாகும் என்று சிலர் மடமையாற் கூறுகின்றனர். இசையுணர்ச்சியைப் பிறரிடமிருந்தும் போக்கடிப்பதுதான் இசைக்கலையின் உயர்நிலை என்று இவர்கள் கருதுவார்களேயானல், இவர்கள் பட்டப்பகலை இருளென்றுகூறிடும் பாதகரேயாவர்.

இன்னும் சிலர் தமிழ்மொழி இசைக்கு ஏற்ற மொழியில்லையென்றும், தமிழ்மொழிப் பாடல்கள் மிகச்சிலவே கிடைக்கின்றன என்றும் கூசாது வாய்ப்பறை யறைகின்றனர். இது, குதிரை கீழே தள்ளினது மல்லாமல் குழியும் பறித்ததைப் போலாகும். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் மனிதவடிவெடுத்து வந்து, உயர்மதிற் கூடலினுய்ந்த ஒண்டீந்தமிழ் மொழியின் வளத்தையெல்லாம் நன்கு நுகர்ந்த நம் தொல் சான்ருேர் சங்ககாலத்திலேயே வடுகர் மொழியாகிய தெலுங்கைக் "கல்லா நீள்மொழி" என்று எள்ளிநகையாடியதுண்டு. அத்தகைய தெலுங்குமொழி தமிழைவிட எத்திறத்தும்

ஏற்றமுடையது ஆகாது. அதைச் "சுந்தரத் தெலுங்கு" என்று புகழும் விதத்தில் நாம் நமது தமிழ்ப்பாடல்களை மறந்தலைந்தோம். தமிழ்மொழியில் எண்ணிறந்த பாடல்கள் கீர்த்தனங்கள் பதங்கள் இருக்கின்றன. தேவாரம், திவ்யப்பிரபந்தம், திருப்புகழ், திருவருட்பாமுதலிய தெய்வப் பாக்களும் மலிந்து காணப்படும். இவற்றையெல்லாம் என்று பாடக் கேட்போம் என்று தமிழ் மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இசை என்பது நுட்பமானதொரு சக்தி. அது தனித்தியங்குதல் சிறக்காது. சில பண்டிதர்கள் தனிப்பட்ட இசை பரமானந்தம் விளைக்கும் என்று தத்துவோபதேசம் பண்ணுகின்றனர். "நாங்கள் தெலுங்கில் பாடுகிறோம். அதிலுள்ள தனி இசையை நீங்கள் அனுபவியுங்கள்" என்பதே அவர்கள் கருத்த. இதைத் தமிழிசைக்கு ஒரு முட்டுக்கட்டையாக அவர்கள் வைத்திருக்கிறார்கள். இசை கேட்போர்க்குப் புரியும் விதத்தில் பொருளோடு கலந்து, பாடப்பட்டால்தான் அது கேட்போர் மனதைக் கவர்ந்து மகிழ்வுண்டாக்கும். பாம்புகள் இசைக்குக் கட்டுப்படுவது உண்மைதான். ஆனால் எல்லா இசையையும் அவை கேட்டு மகிழா. புன்னாகவராளியில் மகுடி பாடினால்தான் பாம்பும் படமெடுத்தாடும். குறிப்பிட்ட ஒரு பண்ணுக்குத்தான் மதம் பிடித்த யானையும் அடங்கும்; பாலைவனக்கள்வர்களும் படையைத் துறந்து பண்படுவர். எந்தப்

பண்ணும் மேகங்களைக்கூட்டி மழை பொழிய வைக்காது. மேகராகக் குறிஞ்சிதான் மேகங்களை ஈர்க்கும். அதுபோல், தமிழிசைதான் தமிழர்களுடைய மனதை வளைக்கும்; அவர்களுடைய செவியையும் மனத்தையும் கவரும்; அவர்களின் செல்வமாகிய மழையைப் பொழிவிக்கும்.

இசை மின்சார சக்திபோன்றது. ஆகாயத்தில் மேகங்களிடையே மின்சாரம் ஏராளமாய் உண்டாகின்றது. அதனால் நமக்கு யாதொரு பயனுமில்லை. அதைக் கட்டுப்படுத்திக் கம்பியின் மூலம் நம் வீட்டிற்குள் கொண்டுவந்த பின்புதான் நமக்குப் பயன்படும். அதுபோல் தனிப்பட்ட இசையும் செவியளவாய் நின்றுவிடும். சாகித்யம் என்னும் பொருளாகியகம்பியின்வழியே சங்கீதத்தை இயக்கி நம்வீடாகிய உள்ளத்தினுள் நிறைத்தால்தான் நாம் அதை உணர்ந்து நன்கு அனுபவிக்கக்கூடும். அதற்கு, சாகித்யம் நமக்கு விளக்கமாக வேண்டும். தமிழனுக்கு விளக்கம் தமிழ்தான். அதனால் தமிழ் நாட்டில் தமிழிசையே பயிலப்பட வேண்டும்.

இசையின் நுணுக்கங்களை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. பாடுவோரும் கேட்போரும் நெடுங்காலம் அத்துறையிற் பயின்றாக வேண்டும். சுமார் இருபது நூற்றாண்டுகளுக்குமுன் தமிழ்மொழி தழைத்தோங்கிக் களிநடம் புரிந்த காலத்தில் எழுந்த புறநானூறு என்னும் நூலில் இசையானது, "சில்செவித்தாகிய கேள்வி" என்று

கூறப்பட்டுள்ளது. கேட்டார் பலரும் அறிதற் கரிதாய், அறிவார் சிலராகவின், சில்செவிக்கண்ண தாய தன்மைத்து இசை என்பதே அதன்பொருள். அக்காலத்திற்குப்பின், எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு, தமிழே அடியோடு புறக்கணிக்கப்பட்டு, பிறமொழிகளின் மூடுமந்திர மயக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் நம்நாட்டின் இற்றைக்காலத்தில் இசை யின்நிலை எவ்வாறு இருக்கும்? அந்நிலையிலுங்கூடக் கதிர்த்தெழும் காலைக்கதிரவன் போல் தமிழிசை இயக்கம் ஒளிகான்று இருளோட்டி வருகின்றது. ஆகையால் இசைவாணர்கள் மனம் தளரலாகாது. இசை புரப்போரும் இடர்ப்படாது தம் உரிமையைக் கையாளவேண்டும். தமிழிசை பல்செவித்தாகிய கேள்வியாய்ப் பரவவேண்டும்.

நாம் அரிதிற் பெற்ற பணத்தை எளிதிற் செலவிட்டு நமதுவீட்டு மங்கல விழாக்களுக்குப் பாகவதர்களை அழைக்கின்றோம். ஏன்? நாமும் நம்மைச் சேர்ந்தோரும் விரும்பிக் கேட்டு மன மகிழ்ச்சி யடைவதற்குத்தானே? அவ்விதமிருக்க, தமிழ்ப்பாடல் பயிலாத பாடகர்களையும், தமிழ்ப் பாடல்மீது துவேஷம்கொண்ட பாதகர்களையும், நம் வீட்டிற்கு அழைத்து வந்து வைத்துக்கொண்டு "தமிழ்ப்பாட்டு! தமிழ்ப்பாட்டு!" என்று கதறு வானேன்? அதைக்கேட்டுப் பாடுவோர் தொண்டை கரகரப்பிரியா கனைப்பானேன்? பாடலைக் கைவிட் டுப் பாடகர் கால்விடுவானேன்! மயிலே! மயிலே!

இறகுபோடு என்றால் அது போடுமா? முதலிலேயே கண்டித்து, தமிழ்ப்பாடல் பாடுவதானால் வரலாம் என்று பேசி, உடன்பட்டால் அழைத்து வரலாம்; இல்லாவிடில், விட்டுவிடலாம். நம்து பணத்தைச் செலவிட்டு நமக்காகப் பாடவரும் பாடகர் நாம் விரும்பியபடி பாடாவிடில், அவரோடு நமக்கென்ன தொடர்பு? இசைந்தால் அல்லவோ இசை? தமிழோ டிசைந்தால் அல்லவோ தமிழ்மக்களுக்கு இசை? இல்லையேல், அது தமிழின் வசையே யன்றோ! பாடகர்களைச் சொல்ல எள்ளளவும் குற்றமில்லை. குறை நம்மிடத்தில்தான். தமிழிற்பாடாத பாடகர் களை நாம் அழைப்பதில்லை என்று தமிழ்ச்செல்வர் கள் ஒரு கட்டுப்பாடு வைத்துக்கொண்டால், தமி ழிசை வீறிட்டெழும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்கள் தம்மானத்தைக் காப்பதுண்டேல் தமிழிசை யைக் கேட்பாராக.

வாயிருந்தமிழ்

பிறமொழிகளுக்கில்லாத ஒரு தனிச்சிறப்பு நம் அருமைத் தாய்மொழிக்கு உண்டு. பொதுவாக, மொழி என்பது ஒரு கருவிதான். மக்களது அகத்துள் நிகழும் எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் புறத்தே பிறருக்குப் புலனாகும் விதத்தில் எடுத்துக்கூறுவதற்குப் பயனாய் இருக்கும் ஒருகருவி மொழி. ஏனைமொழிகள்யாவும் இத்தகைய வெறுங் கருவிகளேயாகும். ஆனால் தமிழ்மொழி மட்டும் அங்ஙனம் வெறுங்கருவியளவில் நின்றுவிடவில்லை. அது மூலமுதற்பொருளாகிய சிவன் அருள் காட்டி, அவன்தாள் கூட்டி, இன்பம் ஊட்டி நிற்கும் பொய்தீர் ஒழுக்கநெறியாகவும் அமைந்துள்ளது. இறைவனது உண்மை, அறிவியற்றன்மை, உலப்பிலா இன்பம் (சத்துச் சித்து ஆனந்தம்) ஆகிய மூன்றையும் தன்னகத்தேகொண்டு மிளிர்கின்றது. உலகிலுள்ள ஒவ்வொரு மொழியையும் அது எப்பொழுது தோன்றியது, எவ்வாறு வளர்ச்சியுற்றது, எவ்வாறு அழிவெய்தியது, என்றுசொல்லிவிடலாம். ஆனால் நம் தமிழ்மொழி அத்தகையதன்று.

அனைத்துயிர் பொருள்களையும் படைத்து காத்து அழிக்கும் பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு

எவ்வாறு எழுவாய் இறுவாய் இல்லையோ, அது போன்று தமிழ்மொழிக்கும் இல்லை. தமிழ் எப்பொழுது எவ்வாறு தோன்றியது என்று சொல்ல முடியாது. சிவனை ஒத்துப் பிறப்பென்பது இல்லாது, என்றும் ஓங்கி வளராநிற்கும் தமிழ்மொழியைக் கன்னித்தமிழ் என்பர். ஈறிலாத ஈசனைப் போன்று தமிழுக்கும் ஈறென்பதில்லை; அழிவில்லை; முடிவில்லை. தோன்றியவெல்லாம் ஒடுங்கும் இவ்வுலகின்கண் சிவமே தமிழாய்த் தமிழே சிவமாய்த் தழைத்தோங்குவதால், 'என்றுமுள தென்றமிழ்' என்ற சிறப்புக்கொண்டது நம் தமிழ்மொழி. இவ்வுண்மையை மனோன்மணீயப் பாடலைவிட மிக்குச் சிறப்பாக வேறு எங்ஙனம் எடுத்து இயம்புதல் கூடும்!

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும்பலவுலகும் படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."

தமிழ்கொழித்த வளனெல்லாம், வனப்பெல்லாம், வாழ்வெல்லாம் சிவமேயன்றி வேறில்லை. 'தெள்ளூற்ற தமிழமுதின் சுவைகண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்' என்றதன் கருத்தும் இதுவே என்பதை எளிதில் அறியலாம். தமிழமுதின் சுவை சிவபெருமான். தமிழின் சுவையை அறிதல் என்பது அன்பினில்விளைந்த ஆரமுதின் இன்பநுகர்ச்சியே தான். தமிழுக்கு ஏற்றமும், ஏரும், சீரும் தருவது சிவபெருமான. சிவனது ஏற்றமும், ஏரும், சீரும் திகழ்வது தீந்தமிழில். பளிங்கினிற் பதித்த சோதி போற் பரம்பரன் பைந்தமிழினிடையே பரிமளிக்கின்றான். அஞ்சியாகிலும், அன்புபட்டாகிலும் அரசனுக்கு ஆட்செய்யத் தமிழ் உணர்ச்சி வேண்டும். தமிழைக் கசடறக்கற்றல்வேண்டும். அத்தமிழ்க் கல்வியின் பயனாகக் கற்றகல்வியினும் இனியனான சிவபெருமான் அணியனாவான். சிவனே தமிழ் இலக்கியவளத்தின் ஈட்டம். சிவனே தமிழ்மொழியின் தேட்டம். சிவனே தமிழ்மொழியின் நாட்டம். அதன் உயிரோட்டம். இதனைக்கருத்துட்கொண்டே குமரகுருபரர் மீனாட்சியம்மையின்கோலத் திருவுருவைத் தமிழமுதில் தோய்த்து அழகொழுக உயிரோவியமாய் எழுதிக் காண்கிறார்:—

"காலத் தொடுகற் பனைகடந்த
கருவூலத்துப் பழம்பாடற்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுண் மணியே! உயிரால

வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவா த சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தந் தருகவே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய்! முத்தந் தருகவே."

"கற்றிருந்த கலைஞானம் ஆனாய் நீயே"

என்றார் அப்பரடிகள்.

"கற்ற கல்வியினும் இனியானை"

என்று சிவனை ஏத்தினார் சுந்தரரும்.

சிவபெருமானின் தலைமையையும், உண்மை இயல்புகளையும் உள்ளது உள்ளவாறு உள்ளபடி உற்றறிவதற்குத் தமிழறிவு மிகமிக இன்றியமை யாததாகும். சிவபெருமானின் திருநின்றசெம்மை யைத் தமிழ்மொழி எடுத்து விளக்குவதுபோல் ஏனை மொழிகளிற் காண்டல் அரிது. வேதாகமங்களில் ஓரோரிடத்தில் மின்வெட்டுப்போல் இமைத்திமைத் துக் காணும் பரஞ்சுடராகிய சிவனொளி, தமிழ்

14

இலக்கியம் அனைத்திலும் பரந்து, குருடற்கு முன்னரும் குடிகொண்டிருந்து நின்றெறி விளக்குப்போல் நிமிர்ந்தொளிர்கின்றது. தமிழின் இவ்வுயர்ந்த தத்துவ நிலையை உணர்த்தவேண்டியே தாயுமானாரும்,

"பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே!
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே!"

என்று தமிழ்ப்புலவர்கள் தவித்துக்கிடந்து, தாவிக் குதித்துத் தழுவிப்பிடிக்கும் சிவனாரைப் போற்றினர்.

அங்ஙனமாயின், திருமாலைச் சிறப்பிக்கும் வைணவத் தமிழ்நூல்களைப்பற்றி என்ன என்ற ஐயம் எழுதல் கூடும். உண்மைச் சிவநெறியில் உறைத்துநிற்கும் உத்தமர்க்கு இவ் ஐயமே எழுதற்கு ஏதுவில்லை. "அரியலாற் றேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்ற அப்பர் திருவாக்கை மனத்திற் கொள்ளுதல் வேண்டும். திருமாலைச் சிவனது பாகம் பிரியாளாகக்கொண்ட சிவநெறிச் செல்வர்களுக்கு வைணவப்பிரபந்தங்கள் சிவம் திகழும் சீர்த்தி நூல்களாகவே விளங்கும் என்பதில் ஐயம் இல்லை. தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பராய் சிவம் துய்க்கும் சீராளர்கள் வைணவ நூல்களிலும் தாயினைக்கண்டு, தாய்மொழியென்று தலைமேற் கொண்டு போற்றுநிற்பர். திருமாலையே வழுத்திநிற்கும் பேயாருங்கூட,

"தாழ்சடையும் நீள்முடியும் ஒள்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவம் ஒன்றா யிசைந்து"

என்று பாடியிருப்பது யாவரும் அறிந்ததே. இவ் அரிய சிவதத்துவ உணர்ச்சியை ஊட்டும் சிறப்பு நோக்கித் தமிழ்மொழியை 'இருந் தமிழ்' என்று ஏத்துவர்.

"இருந்தமிழே! உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்று ஒரு புலவர் உருகினார். சிவமணம் கமழும் தவவளம் பல்கிய செந்தமிழின் திறமனைத்தினும் தமிழ்வாணரின் கலைத்திறனும், எஃகுப் புலமையும், சிவபத்திச் செல்வமுமே பொதுளும்மாகலின்,

"பழம் பாடற் கலைமாச்செல்வர் தேடி வைத்த
கடவுள் மணியே"

என்றெழுந்தது குமரகுருபரரின் திருவாக்கு. தமிழ் இலக்கியத்தில் தொட்ட தொட்ட இடமெல்லாம் சொட்டச் சொட்டச் சுவைத்தேன்போல் சிவம் சுரக்கும் சீர் அறிந்தே அத்தவத் தமிழ் முனிவர், "தொடுக்குங் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே! நறைபழுத்த துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே!" என்று உள்ளம் குழைய உவந்து பாடினார். இருந் தமிழ், இருமையை உடைய தமிழ்

என விரியும், இருமை என்றால் பெருமை(Greatness) என்று பொருள். தனது உயர்ந்த இலக்கியம் முழுமையும் சிவன் உறையும் சரக்கறையாய் இருப்பதுவே தமிழ்படைத்த பெருமை. இருமை என்பது இம்மை, மறுமையையும் உணர்த்தும். இம்மைக்கும் மறுமைக்கும் செம்மைநலம் அளித்து எழுமையும் வழுவாது இன்பம் சுரக்கும் இனித்த பெருந் தனித் தமிழே நம் இருந் தமிழாம் அன்னை.

அத்தகைய இருந்தமிழாகிய அருந்தமிழ் சிவமாகிய உண்மையை உணர்த்தவல்லதாயிருத்தலின் 'வாயிருந்தமிழ்' என்று தமிழாளியாகிய திருநாவுக்கரசரால் போற்றப்பட்டுள்ளது. வாய் என்பது வாய்மையாகிய உண்மையைக் குறிப்பதாகும். வாய்மை என்பது உண்மை. உண்மை இங்கே சிவப்பொருளைக் குறிக்கின்றது. சிவப்பொருளாகிய சத்தினைத் தமிழ் குறித்துக்காட்டுதல்போல் ஏனைய மொழிகள் குறித்துக் காட்டுதலில்லையாதல்பற்றி தமிழானது வாயிருந்தமிழ் என்ற ஈரடைச் சிறப்புடன் போற்றப்பட்டது. இப்பேறுபெற்ற தமிழைக் கற்றுவைத்தும், கவி காவியம்பாடும் திறனைப் பெற்றுவைத்தும், சிவனைப்பேணி அவன்தாள் அடைவதை விட்டு, அவமேபெருக்கி, உவலைச் சமயமும் ஒவ்வாத சாத்திரமும் கொண்டு உழன்றார் சமணர்கள். தமிழைப் பயின்று நூல்கள் பல எழுதினரேனும், அதன் உயிர் நாடியாம் அரனைப் பேணு அறிவிலி ஆதர்களாய், அமணர்களாய்,

அடாதசெயல்களுக்கும் ஆளானுர்கள். அன்னுர் சிவநெறிச்செல்வர்களுக்கு இழைத்துவந்த தீமைகள் பலவாகும். தமிழ்ச்சுவை அறிதலையும் கைவிட்டு அதன் மறுதலையை மேற்கொண்டனர்.

"மலைகொண் டெழுவார் கடல்கொண் டெழுவார்
மிசைவந்து சிலா வருடம் பொழிவார்
நிலைகொண் டெழுவார் கொலைகொண் டெழுதற்
கிவரிற்பிறர் யாவர் நிசா சரரே"

என்று தக்கயாகப்பரணியுடையாரும் தாங்கலாற்ருது தவித்து உருகினுர். அதனினும் கேடாய், திருப்பழையாறை வடதளி என்னும் இடத்தில், கோயிலில் இருந்த சிவலிங்கத்தை எடுத்து மறைத்துவிட்டு அதனை அமண்பாழியாகவும் மாற்றிவிட்டனர் சமணர்கள். அவ்வழிவந்தடைந்த வாகீசர், கோபுரம் திருமதிலைக்கண்டு, திருக்கோயில் எனக் கும்பிட்டார். அதைக்கண்ட சமணர் சிலர், 'அது அமண்பாழியல்லவோ?' என்று கூறி எள்ளி நகையாடினர். சிவனுர் திருத்தளி சிதடர்களின் சிறுபள்ளியாய்ச் சிதைவதைக்கண்டு ஆற்ருத நாயனுர் மெய்நடுங்கி விதிர்விதிர்த்தார். கோயிலுள்ளிருந்த சிவலிங்கமும் எங்கோ மறைத்துவைக்கப்பட்டமைக்கு வருந்திப் பொறிகலங்கினுர். மறைந்த இலிங்கம் மீண்டும் வந்து, தான் அதைக் கோயிலிற்கண்டு வழிபட்டன்றி, அவ்விடம்விட்டு அகல்வதில்லை என்று அசையாமல் உண்ணுநோன்பிருக்கத்தலைப்பட்டார் உறைத்த அத்திருத்தொண்டர்.

சிவனை நினைந்து வரம்கிடந்தார். "வஞ்ச அமணர் வஞ்சனையால் மறைத்த வஞ்சம் தவிர்த் தருளும்; உமது வண்ணம்கண்டு வணங்கியன்றிப் போகேன்" என்று எண்ணம் முடிக்கும் வாகீசர் அங்கேயேவீற்றிருந்து உடலைவாட்டினார்; திடமனம் நாட்டினார். இதை இறைவன் பொறுத்திருப்பாரா? சிவபெருமான் அன்றிரவே நாடாள் மன்னவன் கனவிற் சென்று செய்தியைக் கூறித் தன்னை மறைத்துவைத்திருக்கும் இடத்தையும் தெரிவித் தார். அதனைக்கேட்ட மன்னவன் சமணர்குலத்தை வேரறுத்து வடதளிக்கோயிலையும் புதுக்கினான். அப்பரும் சிவனைத் தெரிசித்து மகிழ்வெய்தினார். அவ்வமயம், 'மறைத்தாலும் மறைக்கொண்ணுமோ' என்னும் விலையில் வாய்மைக் குறுந்தொகையைச் சொன்மாலைகளாய்ச் சொன்மன்னர் தொடுத்து அளித்தார்.

"மூக்கி னால்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலந் தூரறுத் தேதனக்
காக்கி னானணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யாலரு நோய்களே"

என்று சமணர்குலம் தூரறுத்தசெய்தி கூறப்படு கிறது. சமணர்கள் தங்கள் பொருளற்ற மந்திரங் களை, மூக்கறையர் ஙங்ஙமுங்ங என்பதுபோல், மூக்கால் ஓதி முரன்றுளார். சுந்தரரும் தமது தேவாரத்தில் நகைபட இதனைக் கூறுகிறார்:—

"நமண நந்தியுங் கருமவீரனுந்
தருமசேனனும் என்றிவர்
குமண மாமலைக் குன்றுபோல்நின்று
தங்கள்கூறையொன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாணஞோணமென்
றோதியாரையும் நாணிலா
அமண ராற்பழிப் புடையரோநமக்
கடிகளாகிய அடிகளே."

ஞமண ஞாஞண ஞாண ஞோணம் என்று சங்கதபங்கமாப் பாகதத்தொடு இரைத்துரைக்கும் சனங்கள் வெட்குறும் மந்திரங்கள் எவ்வளவு வேடிக்கையாயிருக்கிறது!

சமணர்கள் தமிழ்நாட்டினுட்புகுந்து தமிழைக் கற்றது, தமிழ்நெறி ஒழுகித் தமிழ்க்கடவுளை வழிபடற்காகவன்று. தமிழில் வல்லவர்களாகித் தம் பொய்மைநெறியைப் புகுத்துவதற்கே முயன்றனர். ஆதலின், தமிழின் உண்மையையும் பெருமையையும் அறிந்து சிவனுக்கு ஆளாகும் தன்மை அவர்களிடம் இல்லாமற்போயிற்று. தமிழைக் கற்றும், அதன்பயனாகிய சிவபத்திச்செல்வம் அவர்களுக்குக் கிட்டவில்லை. அப்பொறியறைபோகிய பொய்யர் ஆயிரவர்களும் சிவன் அருள்பெறாது சிதைந் தொழிந்த வரலாற்றினை,

"வாயிருந் தமிழே படித் தாளுறா
ஆயிரஞ் சமணும் மழி வாக்கினான்

பாயிரும் புனலாறை வடதளி
மேயவன் னென வல்வினை வீடுமே''

என்னும் அருமைத் திருக்குறுந்தொகையில் அப்பர் அறிவுறுத்துகின்றார். வா, இரு என்று உபசரித்து வேளாண்மை விருந்தூட்டும் தமிழர் நாகரிகம் தொனிக்க 'வாயிருந்தமிழ்' என்று வாயாரப்பாடிய தேவாரப்பாடலின் நயம்தெரிந்துணர்க.

ஆரியமும் தமிழும் சீரிதிற்கற்ற சமணர்கள் செந்தமிழின் சேவையிற் பங்குகொண்டது மெய்மையே. ஆயினும் அவர்கள் சருகு அரித்தார்களே யன்றிக் குளிர்காயவில்லை. தமிழ்ப்பயனாகிய சிவபெருமான் ஆரியத்திலும் அறிவொளிவீசுவதை அவர்கள் அறிந்தார்களில்லை. கலகமிடும் அமண் முருட்டுக்கையர் பொய்யேகட்டி நடத்திய தமது நெறியிலேயே குறியாய் இருந்தனர். அவர்கள் மெய்மாசுபடிந்ததுபோல் உளமும் மாசுபட்டது. நாதன் நந்தியைக் காணு அந்தகராய் மந்திபோல மயங்கித்திரிந்தனர் என்று திருஞானசம்பந்தரும் குறித்துள்ளார்.

"சந்து சேனனும் இந்துசேனனும்
தருமசேனனும் கருமைசேர்
கந்து சேனனும் கனகசேனனும்
முதலதாகிய பெயர்கொளா

மந்தி போற்றிரிந் தாரியத்தொடு
செந்தமிழ்ப்பய னறிகிலா
அந்தகர்க் கெளி யேனலேன்திரு
ஆலவாயான் நிற்கவே."

உண்டவீட்டிற் கெண்டியின் கரவுபோல், தமிழ் நாட்டினுட் புகுந்தும் தமிழ்க்கடவுளைப் பழித்து ஒதுக்கினர். மெய்நூல்வழியைப் பற்றாது பொய் நூலின் புறங்கடைநின்றனர். பொங்குநூல் புகல் புங்கவனைப் புறக்கணித்தனர். சங்கப்புலவன் சங்கரனைச் சமழ்ப்பித்தனர். பொய்யடிமையில்லாப் புலவர் குழாத்தையே சிறுமைப்படுத்தியதாக முடிந் தது. நம் ஆவியின் இனிய நாவினுக்கரையரை நஞ்சூட்டி நலிவித்த பாவிகளானோர் புலவரைப் பழியாது மற்றென் தான்செய்வர்?

"தங்களுக்குமச் சாக்கியர்க்குந்
தரிப்பொணாதநற் சேவடி
எங்கணாயக னேத்தொழிந்திடுக்
கேமடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல
வோர்களைப் பழிக்கும்பொலா
அங்கதர்க்கெளி யேனலேன்திரு
ஆலவாயான் நிற்கவே"

என்று நினைவுறுத்திப் பாடுகிறார் ஞானசம்பந்தர். தமிழ் அறிந்தும் அதன் சுவையாகிய சிவனை அறியாதுபோயினர் சமணர்கள். உணர்ச்சியற்ற

மரக்கட்டைகள்போன்று அவிழ்ச்சுவையே அறிந்தனர். தமிழ்ச்சுவை தெரிந்திலர். சமணர் என்றதும், ஊண்சுவை அறியும் தூண் அமை தறிகளையே நினைந்துகொள்கிறார் நம்பியாண்டார்நம்பிகள்:—

"நீத்தது, அவிழ்ச்சுவை யேயறிந் தானடி பரவுந்
தமிழ்ச்சுவை யறியாத் தம்பங்களையே."

இதுகாறும் கூறியவாற்றால் தமிழும் சிவமும் அமிழ்தும் சுவையும்போல் அமைந்து நிற்கும் உண்மை நன்குபுலனாகும். சிவனே தமிழின் சுவை, தமிழின்பயன். தமிழைச்சுவைத்து இன்பம் காணுதல் சிவனை உணர்ந்து சேவடி பணிதலேயாகும். சிவனுக்கு ஆளாகிச் சிவநெறிஒழுகுதலே தமிழின் உண்மையையும் பெருமையையும் உணர்ந்து, கற்று அக் கற்றநிலைக்கேற்ப நிற்றலுமாகும் என்பது தெற்றென விளங்கும்.

தமிழனாய்ப் பிறந்தவன் உலகில் வயிறுபிழைப்பதற்காகப் பிறமொழிகளைக் கற்கிறான். அவை தமிழை நோக்க மிகக் கடினமானவை. பயிலுந்தோறும் பல் உடைபட்டுப்போகும். தமிழைப் பயிலாது பிறமொழிகளையே பயின்று தலைமயிர் வெளுத்துச் செத்து ஒழிவார் பலர். "அதுபோல் எனக்குநேராது, தமிழ்மொழியைக்கற்று உன்னைப் பாடவேண்டும். முருகா! தமிழே கருணைமிகுந்த மொழி; உன்னை அறிதற்குரிய மொழி; முத்தியளிக்கும்மொழி. ஆதலால் தமிழறிவை எனக்குக்கொடு" என்று வேண்டுகிறார் அருணகிரிநாதர்:—

"கொக்குக் கொக்கத் தலையிற்
பற்றுச் சிக்கத் தளகக்
கொத்துற் றுக்குப் பிணியுற் றவனுகிக்
குக்கிக் கக்கிக் கடையிற்
பற்றத் துற்றுக் கழலக்
கொத்தைச் சொற்கற் றுலகிற் பலபாஷை
திக்கிக் திக்கிக் குளறிச்
செப்பித் தப்பிக் கொடுபோய்ச்
செற்றைச் சட்டைக் குடிலைச் சுமைபேணும்
சிக்கற் றுட்குக் கருணைச்
சுத்தச் சித்தித் தமிழைத்
திட்டத் துக்குப் புகலப் பெறுவேனே."

"இக் கொழிதமிழ்ப் பெருமை யார் அறிவார்!"

என்று வியந்தார் குமரகுருபரர். ஆம்! யார்தான் தமிழின் அருமையை அளவிட்டுச் சொல்லமுடியும்!

"நீலச் சுடர்மணி வானம்—ஆங்கே
நிறையக் குளிர்வெண் ணிலவாம்
காலைப் பரிதியின் உதயம்—ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்
மாலைச் சுடரினில் மூழ்கும்—நல்ல
மலைகளின் இன்பக் காட்சி
மேலெனு எழுதும் கவிஞர்—தமிழின்
விந்தையை எழுதத் தாமோ?"

என்பது உண்மையேயன்றோ?

குமரகுருபரர் அவ்வாறு வியவாது வினவாகக் கேட்டார் என்று கூறுதல் கூடாது. ஏனெனில் அத்தகையவினு நம் அறியாமையைத்தான் புலப் படுத்தும் என்கிறுர் அதிவீரராமபாண்டியர். செந் தமிழின் சீர்த்தியினை அறிகின்றவர்கள் அறியத் தான் செய்கிறுர்களாம். அவர்களே சிவன் அருள் பெற்ற செல்வர்கள். எவ்வாறு சிவன் அருளின்றி அச் சிவனை அறியமுடியாதோ, அதுபோலவே, அவன் அருளின்றி அருந்தமிழின் அருமையையும் அறிதலொண்ணுது. கன்னித்தமிழைக் காண்பார் யார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே! என்றே சொல்லிவிடலாம். அவன் அருள்மட்டும் இருந்து விட்டால், சடம் என்று கழிக்கப்படும் மண்ணுக்குக் கூட, தமிழ்உணர்ச்சியும் தமிழ்நுகர்ச்சியும் ஏற்பட்டு விடும். அவ்வாறு மண்ணுக்குத் தமிழ் உணர்ச்சி உண்டானதால்தான்போலும் எண்ணிறந்த தமிழ் மறை ஏடுகளும், பழந்தமிழ் நூல்களும் மண்மூடிச் செல்லரித்து மண்ணேடு மண்ணுகி மறைந்தொழிந் தன. புவிக்கும் கவிக்கும் அரசராகிய அப்புலவர் கோமான் எவ்வளவு இனிமையாக இவ்வுண்மையை எடுத்துக்கூறுகிறுர்:—

"பாரறியு மறிவினும் இப்பார்மேல் நின்ற
பசு ஞானத் தாலுமெட்டிப் பார்க்கொணுத
பேரறிவே! சிற்றறிவேற் கிருளை நீக்கும்
பேரொளியே! அங்கயற்கட் பிரியா தானே!

ஆர்அறிவார் தமிழ்அருமை என்கின்றேன் என்
அறிவீன மன்றோ நின் மதுரைமூதூர்
நீர்அறியும் நெருப்பறியும் அறிவுண்டாக்கி
நீ அறிவித்தால் அறியும் நிலமுந்தானே."

"காட்டுவித்தால் யாரொருவர் காணுதாரே" என்றபடி, காட்டாதனவெல்லாம் காட்டுவிக்கும் கண்ணுதற்கடவுளின் கருணைநோக்கம் வந்தெய்துமாகில், தமிழின் அருமையும் தெரியவருவதாகும். படிக்காசுப்புலவரின் தமிழினிமையைப் புகழ்ந்து பாடிய ஒருவர், அவர்பாடல் எழுதிய ஏடுகளைச் சேற்றுக்கழனியில் ஊன்றி நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்துவிடும் என்று ஆர்வம்பொங்கப் பாடினுர்:—

"மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலுங் கைமணக்கும் சொன்னுலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டிலுறு *நளினந் தானே"

அவர்பாடலிற் காணப்படும் தாமரை என்னும் சொற்கூட ஒன்றுக்குப்பத்தான தாமரைமலராய்ப் பூத்துக் குலுங்கும் என்றும் சொல்லலாம்.

---

*நளினம் - நயச்சொல் அல்லது தாமரை.

இந்தப் பாட்டைப் படித்துவிட்டு யாராவது படிக்காசுப்புலவர் பாடல்வரைந்த ஏட்டை எடுத்துச் சென்று வயல்களிலுள்ள சேற்றினில் நட்டுவைத்தால், பாடலிற்கண்டபடி ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை. ஆயினும், பாடலிற் கூறியது பொய் யாகாது. கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் பாடம் புரிந்துகொள்ளாத மாணுக்கனை நோக்கி என்ன கேட்கிறார்? "உன்மண்டையில் என்னடா இருக்கிறது? களிமண்ணு?" என்று கேட்கிறார் அல்லவா? அத்தகைய களிமண் மண்டையிற்கூட, தமிழை அறியும் அறிவு புகுந்து, பதிந்து, வளர்ந்துவிடும். அவ்வளவு இனிமையும் எளிமையும் வாய்ந்தது படிக்காசரின் தமிழ். அவர்பாடல்கள் சிவன் அருளையும் உடன்கொண்டு திகழ்வன என்றே நாம் கருதுதல் வேண்டும். சிவன் அருளே செந்தமிழாய் உருவு எடுத்ததுபோலும்.

மதுரையில் ஓடும் வைகைத் தண்ணீருக்கும், சிவந்து சூழ்ந்த செந்தழலுக்கும் தமிழ்ச்சுவையுணர்ச்சி உண்டானதால், முத்தமிழ்விரகராம் ஞானபோனகர் வரைந்த தமிழ்மறை ஏடு, வலிக்கப்படாதும் எரிக்கப்படாதும் சீர்பெற்று நிமிர்ந்தது. அப் புனலும் கனலும் சிவன் அருள்பெற்றே பைந்தமிழ்ப் பெருமையைப் பாங்குடன் உணர்ந்தன. இவ்வுண்மையை வரந்தருவார் தமது தந்தையார் பாடியபாரதநூலில் தலைமணியாய்விளங்கும் பாடல் ஒன்றில் பண்புடன் பகர்ந்து போற்றியுள்ளார்:—

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்."

பொருப்பிலேபிறந்து என்று பாடல் தொடங்குகிறது. தமிழ்மொழி சிவனார் அளித்த உயர் தனிச் செம்மொழி என்று மறைகள் கூறுகின்றன. சிவனுக்கு எப்படி தோற்றமும் மறைவும் இல்லையோ, அதுபோல் தமிழுக்கும் இல்லை. சிவன் என்று உண்டு, அன்றே தமிழும் உண்டு. பின், மலையிற் பிறந்ததாகக் கூறுவானேன்? அவ்விதம் சொல்வது ஓர் உபசாரவழக்கு. மலைஎன்பது இங்கே பொதிகை மலையைக் குறிக்கின்றது. ஆங்கு இருப்பவர் அகத்தியர். அவர் கண்டார் எள்ளத்தக்க உருவினராய் இருந்தும் உலகத்திற்கே ஓர் அச்சாணிபோன்று விளங்கினர். அது அவர்பெற்ற தமிழ்க்கல்வியின் பயன். மலையை நெறித்துக் கடலைக் குடித்து வஞ்சரை வாட்டினர். சிவனார் அளித்த தமிழின் அருமை பெருமை உணர்ந்து அதற்கு இலக்கணம் எழுதி முதல் ஆசிரியரானர். அவர்பெற்ற பேறு அனைத்தும் தமிழ் அளித்த பேறு. அவர் அடைந்த வாழ்வெல்லாம் தமிழ்கொடுத்த வாழ்வு. ஓங்கிய

சிறப்பினுயர்ந்த கேள்வி மாங்குடி மருதனுல் மதுரைக்காஞ்சியில்,

> "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
> றென்முது கடவுள்"

என்று புகழப்பட்டார். தான்வேறு தமிழ்வேறு என்னுதபடி அத் தேமதுரத் தமிழ்நூல்களைத் தன் ஞானம்நிமிர் கல்லில் நெடுநாளிட்டரைத்துக் கலக்கிக் குடித்தவர். தான் முன்னர்க்கண்டு கற்ற தமிழ் இலக்கியத்திற்கே அவர் இலக்கணம் வகுத்திருக்க முடியுமல்லவா? அதனுல் அவர் வளர்த்த புகழெல்லாம் தமிழ்வளர்த்த புகழாகவே மாறியது. தமிழுக்கு உறைபதியானுர் அகத்தியர். ஏன்? தமிழோடு அத்துவிதமாய்க் கலந்துவிட்டார் என்றே சொல்லலாம். கன்னித்தமிழ் காயகற்பம்போல் அமிழ்தமாகி அகத்தியர் புகழுக்கு அழிவை அகற்றியது. சிவனைப் போல் மன்னுவாரானுர் அகத்தியரும். இதனை உட்கொண்டே கவிக்கோமான் கம்பரும்,

> "ஈசன் நிகராய் உலகு சீர்பெற இருந்தான்"

> "என்றுமுள தென்றமிழ் இயம்பிஇசை கொண்டான்"

> "நீண்டதமிழால் உலகை நேமியின் அளந்தான்"

என்று பலவாருகத் தமிழ்க்குறுமுனியை உவந்து போற்றினர். சேக்கிழார்பெருமான் அருளிச்செய்த

"ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்"
என்ற திருவாக்கைமறவாது மனத்திருத்திக் கம்பர்,
"நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்"
என்று பொன்னேபோல் போற்றியதை நாம் சிந்தையிற் கொளல்வேண்டும்.

இக்காரணத்தால் அக்காலமக்கள் தமிழ் என்றவுடன் பொதியில்மலையை நோக்கினர். 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்று பாண்டியனும் அழைக்கப்பட்டான். அம்மலையில் வந்து குலாவிய மந்தமாருதமும் சந்தார் மணங் கமழூந் தமிழ்த் தென்றல் என்று வழங்கப்பட்டது. தமிழின் பிறப்பிடமே பொதியில்மலை என்றாகி விட்டது. அக்குறுமுனியின் நெடும்புகழ்போல் தமிழும் நீளவளர்ந்துகொண்டேயிருக்கும். ஏனெனில், அளத்தற்கரிய அண்டர்தளத்தையும் கடந்த களத்திற் கரியர் சீர்வளத்தைப் பெருக்குவது தெய்வத் தமிழ் ஒன்றே அதனைக் கல்வி கேள்வி ஒழுக்கங்களில் உயர்ந்தோர், என்றும் தொழுது உண்மைப் பயனை உடன் எய்துவர். தமிழ் தனது ஞானஒளி வீசி மனக்குகையில் மண்டிக்கிடக்கும் மங்கிருளைக் கடியும் ஞானசூரியன். ஆதலால் புறவிருள்நீக்கும் ஞாயிற்றோடு அகவிருள்போக்கும் தமிழையும்கூட்டி உலகிற்குக் கதிரவன் இரண்டு என்று ஆன்றோர் மொழிவர். பலர்புகழ் ஞாயிறும் பலர்புகழ் தமிழும் மலையிடைப்பிறந்து பலர் தொழ விளங்கி இருளை அகற்றுவதால் ஒப்புமைகொண்டனவாம்:—

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் கதிராழிச் செங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

என்னே இப்பொன்னுரை! ஆகா! தன் நேர் இலாத தமிழ்! இவ்வுண்மையைமட்டும் தமிழ்மக்கள் யாவரும்தெரிந்துகொண்டால், தமிழ்நாடு இப்படியா இருக்கும்? சுவர்க்கலோகமாகவன்றே மாறிவிடும்! சுவர்க்கமா? யார் அதை மதிப்பது? தமிழனுக்கு அத் துறக்கவுலகம் பெரிதா? தமிழ்நாட்டைவிடவா அவ் அமிழ்தநாடு பெரிது? பெரிதா என்ற கேள்வி பிறகு; முதலில் ஒப்புமைதான் கூறமுடியுமா?

ஒத்திருக்கும் என்று சொன்னாற்கூட, கம்பருக்குக் கோபம்வந்துவிடும். "போதும் ஐயா உமது பேச்சு! என்னவார்த்தை சொன்னீர்? தமிழ்நாட்டோடு, கேவலம் அண்டர்நாட்டையா ஒத்திருக்கும் என்று கூறவந்தீர்? நன்றாய் இருக்கிறது! நெல்லும் புல்லும் ஒன்றாகிவிடுமா? சொல்லால் ஒக்குமேயன்றிப் பொருள்ஒவ்வாது. தேவர்நாட்டில் முத்து உண்டா? முத்தமிழ் உண்டா? அவை இல்லாதநாடு நாம் விரும்பிவாழுதற்கு உரிய நாடாகுமா? அங்கு ஒருகணம் நாம் தங்க மனம் வருமா? முத்தும் முத்தமிழும் இல்லாத நாடு அவைமல்கிய தமிழ்நாட்டுக்கு எவ்வாறு நேராகும்?" என்று பொங்கித்துடிப்பார் அப்புலவர் ஏறு:

" அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நாடு
ஒத்திருக்கும் என்றால் உரை யொக்குமோ?
எத்தி றத்தினும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ."

தாய்மொழி, தாய்நாடு என்னும் பத்திப்பெருக்காறு தத்திக் கரைபுரளக் கத்திமுழங்கும் கவிஞனின் உள்ளம் கருதற்பாலதாகும். எத்திறத்தினும் ஏழு உலகத்திலும் புகழை மூத்தி மணக்கும் முத்தமிழை அண்டர்நாடு கொடுக்கலாற்றுமா என்ற பொருளையும் பாடலில் தொனிக்கப் படித்துப் பயனுடன் மகிழ்ந்திடலாம். தமிழ்மன்னர் முத்தைச் சொரிந்து முத்தமிழை வளர்க்கவே தமிழுடன் முத்தும் உடன்தோன்றியதுபோலும்.

*பாட்டும் பண்ணும்

தமிழ்ப் புரவலர் இராஜா. சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் பெயர்தாங்கிய இம்மண்டபத்தில் தமிழ்நாட்டு அரும்பெரும் மணிகளாய்த் திகழும் தமிழ் அறிஞர்களும், அன்பர்களும், இசைவாணர்களும் கூடியுள்ள இத் தஞ்சை ஜில்லா தமிழ் இசை மாநாட்டில் திறப்புரைநிகழ்த்தும் பணியை எனக்கு அளித்ததற்காக யான் தங்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன். இசைப் பயிற்சியிலும், தேர்ச்சியிலும் தஞ்சை ஜில்லா தமிழ் நாட்டிலே தலைசிறந்து விளங்குகின்றது. பெயர் விளங்கிப் புகழ்படைத்த இசைவாணர்களும், இசைக்கருவியாளர்களும் மிகுதியாக இந்த ஜில்லாவிலே தோன்றியுள்ளார்கள் என்று சொன்னல் அது மிகையாகாது. அதிலும் இந்நகர் பலவித்வான்களும் பயின்றும் பழகியும் வருவதற்குச் சிறந்த நிலைக்களமாய் இருத்தலின் இம்மாநாடு இந்நகரில் நடப்பது மிகவும் பொருத்தமேயாகும். இவ்வூர்க்கு இறைவனன சிவபெருமான், காளியின் விசையைத் தீர்க்கக் கூத்தாடியவன் என்றும், " சங்கரவக்கடல்

---

*குடந்தை தமிழிசைமாநாட்டுத் திறப்புரை.

முகடுதட்டவிட்டுச் சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்'' என்றும், 'அரக்கனை வரைக்கீழிட்டுக் குறிகொண்ட இன்னிசை கேட்டுகந்தார்' என்றும் இத்தலத்துத் தேவாரங்களிற் குறிக்கப்பட்டிருப்ப தால், ஆடலும் பாடலும் வல்ல அவ்விறைவன் முன்னிலையில் நடக்கும் இக்கூட்டமானது இனிது நடந்தேறவேண்டி அவ்விறைவனை வழுத்துகிறேன்.

இம்மாபெருங் கூட்டம் தமிழ் இசை இயக்கத் தின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக இன்று இங்குக் கூடியுள்ளது என்றே சொல்லலாம். ஆரம் பத்தில் இத் தமிழிசை இயக்கத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் எல்லாம் பகலவன் முன் பனித்துளி போல் மறைந்தொழிந்தன. இவ்வியக்கத்தின் நோக் கங்கள் அனைத்தும் பல அறிஞர்களாலும் நாடு முழுதும் ஐயந்திரிபின்றித் தெளிவுறுத்தப்பட்டன. 'தமிழர்' என்னும் பதம் ஒரு ஜாதியையோ, மதத் தையோ மட்டும் குறிப்பதன்று. வீட்டிலும் வெளி யிலும் வழக்கியலில் பிறமொழியன்றித் தமிழைப் பயில்வோர் அனைவரும் தமிழரேயாவர். அவர்கள் தமிழ்நாட்டு மக்கள். அத்தமிழைப் பயிலும் தமிழ் மக்கள் தமிழிசையை விரும்புவது இயல்பே. இது காறும் இசைப்பெருமையை உணராது ஏமாற்ற மாகிய இருளினிடையே மூழ்கிக்கிடந்தனர். பல அறிஞர்களினுடைய முயற்சியினால் இப்பொழுது விழித்துக்கொண்டனர். இனி இசையரங்குகளில் பொருளற்ற இன்னொலியை எழுப்பிப் பொது

மக்களை ஏமாற்றமுடியாது. செவிக்கினிதாய்மட்டும் இருந்தால் போதாது. சிந்தைக்கும் இனிதாய் இருக்கவேண்டும். அதற்கு, பாட்டின் பொருள் நமக்குப் புரியும் விதத்தில் அமையவேண்டும்.

சுமார் பத்து ஆண்டுகளாய் "நகுமோமோ கனலே" என்னும் தெலுக்குக் கீர்த்தனம் இசைத் தட்டு மூலமாகவும், வானொலி வழியாகவும் என் காதைத் துளைத்துதான் வருகிறது. ஆனால் அது என்சிந்தையைத்தொட்டுமறியாது. அதன்பொருள் விளங்காததே அதற்குக் காரணம். ஆனால் அத னோடு கூடவெழுந்த "திருவடிசரணம்" என்னும் அருமையான தித்தித்தொழுகும் மதுரகீதம் என் றும் எனக்கு இன்பமளிப்பதாகும். அதைப் பல முறையும் கேட்க விழைகின்றேன். ஏனென்றால் அது தமிழோடுகூடிய இசை; அது நான் பொருள் தெரிந்து இனிது சுவைக்கக்கூடியபாட்டு. இது என் அனுபவம் மட்டும் அன்று. இங்குக் கூடியுள்ள பெரியார்களும் ஒப்புக்கொள்வர். கண்ணோட்டம் இல்லாத கண்ணுடையார் விழி கண் குருடர்களே யாவர். அதுபோல், பாடலின் பொருளை மறைத்து, யாதொரு பொருத்தமுமின்றி வெறுமனே பண்ணை மட்டும் பரப்ப விரும்புவோர் பாமரரை ஏமாற்றும் திருடரே யன்றோ? இப்பொருளைப் பொதிந்து வைத்தே திருவள்ளுவநாயனரும்,

"பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணோட்ட மில்லாத கண்"

என்று இடித்துரைத்தார்.

தமிழனாய்ப்பிறந்த ஒருவன் தமிழையேபயின்று வருங்காரணத்தால் பிறமொழிகளின்மேல் வெறுப்பும் இகழ்ச்சியுங் கொண்டுள்ளான் என்று சொல்வது அடாது. அதுபோல் தமிழ் இசையை அவன் கேட்டு மகிழ விரும்பினால் பிறமொழிப் பாடல்களைச் சிறுமைப்படுத்தினான் என்று குறைகூறமுடியாது. ஜாவாதேசத்துப் பாட்டு காதுக்கு இனிமையாகத் தானிருக்கிறது. ஆனால் பொருள்விளங்கவில்லையே! உடனே ரேடியோப்பெட்டியை இறுக்கி மூடிவிடுகின்றோம் அல்லவா? தமிழன் தமிழ்ப்பாடல்களைத் தான் பாட விரும்புவான்; கேட்க விரும்புவான். தமிழ்ப் பாடல்களையே இசையரங்குகளில் அதிகமாகப் பாடவேண்டும், அவற்றிற்கே முக்கிய இடம் கொடுக்கவேண்டும் என்னும் கொள்கையை இதுவரை தமிழர் ஒருவரும் மறுத்ததில்லை என்று நம்புகிறேன். ஏனென்றால் அக்கொள்கையைக் கையாளுவதும், வற்புறுத்துவதும் தமிழருடைய பிறப்புரிமையாகும். சிலர் தமிழராய்ப் பிறந்துவைத்தும், தமிழையே பயின்றுவந்தும், தம்மைத் தமிழரென்றும், தமிழைத் தாய்மொழி என்றும் நினைக்கக் கூசுவர்போலாம்! இவர்கள் வெளிப்படையாகத் தம்மைத் தமிழர் என்றே பேசிக்கொள்வர். ஆனால் அகத்தில்மட்டும் தமிழைப் பழித்துப் பரிகசிப்பர். காவிரியில் நீராடிக்கொண்டே கைபர் கணவாயைக் கைதொழுவதா? இத்தகையார் அங்கொன்றும்

இங்கொன்றுமாய் மிகமிகச் சிலரேயாயினும் அவர்கள் உறவு இனம்போன் றினமல்லார்கேண்மையாகித் தமிழ்நாட்டுக்கே கேடுவிளைவிப்பதாயிருக்கிறது. இந்தப் பரிதாப நிலையை உன்னி உன்னி என் உள்ளம் உதிரம்கொட்டுகிறது. இந் நடலைவாழ்வு கொண்டுழலும் ஆதர்கள் எற்றிற்குரியர்? இன்னவர் மனப்பான்மையையென்னென்றுசொல்வது? 'தவறு பெரிதுடைத்தே! தவறுபெரிதுடைத்தே!!' என்று நக்கீரர்போற் கூறவேண்டியதுதான். இனியாகிலும் அவர்கள் உண்மையை யுணர்ந்து மெய்வாழ்வு பூண்டொழுகுவார்களாக. அல்லது தாம் தமிழர்கள் இல்லை என்று வெளிப்படையாய்க்கூறி விலகுவார்களாக. தோள்மேலிருந்து செவியைக் கடிப்பது போதும்.

சங்கீதம் என்பது இசை; சாகித்யம் என்பது பொருள். பாவம் என்பது உணர்ச்சியும், மெய்ப்பாடும். இசை பொருளோடுங் கூடி உணர்ச்சியை எழுப்பினல்தான் அதை ஒருவர் கேட்டு உணர்ந்து சுவைத்து மகிழமுடியும். இதை நான் ஓர் இரசிகன் என்ற முறையில் கூறுகின்றேன். "சாகித்யத்தின் அமைப்பினல்தான் சங்கீதத்தின் இன்பம் ஏற்படுகின்றது. அவை சத்தி-சிவனை ஒத்தவைகள்." பொருளேதெரியாதபாடலைப் பயில்வதால் நெஞ்சில் இருளேசூழ்ந்து குடிகொள்ளும். அவ்விருளை இறைவனும் நீக்கிக் களையமாட்டானென்பதை அப்பர் அடிகளும் "சொற்பாவின் பொருள் தெரிந்து

தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்காதானை" என்று அருமையாகப் பாடியுள்ளார்கள்.

தமிழில் சாகித்யம் ஏராளமாக மலிந்துகிடக்கின்றது. இன்னும் கணக்கற்றவை வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய ஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார் போன்ற பெரியார்களின் அருட்பாசுரங்கள் என்றும் உலவாக்களஞ்சியமாய் நமக்கு உதவுகின்றன. முத்துத்தாண்டவர்போன்ற பெரியார்களின் கீர்த்தனங்கள், பதங்கள் முதலியன நம் உளங்கவர் கனிகளாகும். இவற்றை விடுத்துக் காஞ்சிரங்காய்களைக் கவர்ந்தோமாயின் அவற்றை நுகர்வார்யார்? இசைக்குத் தமிழ்சாகித்யமே மிகப்பொருத்தமாகும். இசை தமிழோடு கலந்துவிட்டால் அங்கு இறைவன் உதயமாவான். ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதம் பொழியும் எம்பெருமானின் சீரியல்பை, "பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய்" என்று சுந்தரமூர்த்திகள் போற்றியுள்ளார்கள். தமிழ்நாட்டு இசைவாணர்கள் தமிழ் மக்களின் விருப்பத்தை உணர்ந்து அதற்குப் பொருத்தமாக நடந்துகொள்வதே முறை. அதற்கு எதிராக நடப்பார் ஒருவர் உளரேல், அன்னார் பொதுமக்களின் ஆதரவை இழப்பர் என்பது திண்ணம். தமிழ்மொழிப் பற்றுடையோர் இனித் தமிழிசைக்கு முதன்மைகொடுக்காத அரங்குகளில்

நடக்கும் கச்சேரிகளுக்குச்சென்று, தங்கள் செவி யையும் மனதையும் புண்படுத்தி, தங்கள் மானத் தைக் குலைத்துக்கொள்ளமாட்டார்கள்.

ஒரு சபையைக் கூட்டி, அங்கு மேடையில் வீற்றிருந்து ஒரு சங்கீதவித்வான் பாடுவதென்ருல், தான்மட்டும் பாடி மகிழ்வதற்கன்று. முன்னணியிற் குந்தியிருக்கும் இரண்டொரு தலையாட்டிகளின் சபாஷைப் பெறுவதற்காகவன்று. தன் இசை விருந்தை சபையோர் அனைவருக்கும் ஒருங்களித்து அவர்களை இன்பூட்டுவதற்காகவே கச்சேரிகள் நடக்கப்பெறுகின்றன. அவ்விதமாயின் சபையோர் விரும்பும் பாடல்களையல்லவா அவ்வித்வான் பாட வேண்டும்? தனக்கு இஷ்டப்பட்டதைத்தான் பாடு வேன் என்ருல், அவர் வீட்டினுள் இருந்து பாடிக் கொள்ளலாம். தமிழ்நாட்டுக் கூட்டங்களில் தமிழர் களே நிறைந்திருப்பார்கள். அவர்களுக்கிசைந்த தமிழ் இசைப் பாடல்களையே, பாடுவோர் கைக் கொள்ளவேண்டும். இதைத் தெளிவாகப் புலப் படுத்துவதே இம்மாபெருங் கூட்டத்தின் முக்கிய நோக்கம் என்று எண்ணுகிறேன். தமிழ் இசைக் குப் பொதுமக்கள்காட்டும் ஆதரவை இங்குத் திரண் டிருக்கும் அன்பர்களின் கூட்டமே நன்கு புலப் படுத்துகின்றது.

தமிழ்ப்பாடல்களை நன்குபயிலாது, தெலுங்குக் கீர்த்தனங்களையே மிகவும் பயின்று, ஒன்றிரண்டு சில்லரைத் துக்கடாக்களாகத் தமிழ்ப்பாட்டுக்களைக்

கைக்கொண்ட வித்வான்கள் இருத்தலுங்கூடும். அவர்கள் ஒன்றுக்கும் மலையவேண்டாம். ஏதோ காலநிலையை அனுசரித்து அப்பொழுது அப்படிப் பயின்றிருக்கலாம். இப்பொழுதுள்ள கால முன்னேற்றத்தை ஒட்டி அதிகமாகத் தமிழ்ப்பாடல்களைப் பயின்று, கூட்டங்களிற் கேட்போர் மனம் உருகப் பாடி முன்னிலும் அதிகமான புகழை அவர்கள் சம்பாதித்தல்கூடும். பிறமொழிப் பாடல்களையே அவ்வளவு எளிதில் பொருள்தெரிந்தும், தெரியாததுமாய்க் கற்றுப் பெயர்வாங்கினவர்கள் தாய்மொழிப் பாடல்களைப்பாடிப் புகழ்பரப்புவதற்கு அதிகமாக சிரமப்படவேண்டியிருக்காது. எல்லா இராகங்களுக்கும் தமிழில் தக்க சாகித்யம் உண்டு. தெலுங்கில் இல்லாதவற்றிற்குக்கூட தமிழில் இருப்பதாக நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அத் தமிழ்ப்பாடல்களைப் பாடி வித்வான்கள் தங்கள் முழுத்திறமையையும் காட்டலாம். அதனல் அவர்கள் தமிழின்மேல் துவேஷங்கொள்ளாது இனியாகிலும் தமிழைப் போற்றுவார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

தமிழின் இன்னிசைகொண்டு தமிழ்மக்களின் உள்ளத்தை எளிதாக மகிழ்விக்க முடியுமென்பதை இசைவாணர்கள் நன்கு உணரவேண்டும். தமிழ்மொழி இசைக்கு ஏற்றமொழியென்று அதன் பெருமையை உணரவேண்டும். தமிழ்மொழி தெய்வீகம் வாய்ந்த மொழி என்பதையும், தமிழ்க்கடவுள்

தமிழ்ச்சங்கந் தரித்த குழைக்காதினன் என்பதை யும் நாம் மறந்துவிடலாகாது. இவையெல்லாம் தெரிந்துவைத்தும், இன்று இவரை மகிழ்விக்கத் தமிழ்ப்பாட்டுப் பாடினேன், அவரை ஏமாற்றத் தமிழிசையைப் போற்றினேன் என்று நடித்து விட்டு, பின்னல் சென்று அசட்டுச் சிரிப்புடன் தமிழைப் பழித்துரைப்பார் உளரேல் அம்மக்கட் போலிகளை யான் சினந்து கூறினேன் என்று என்னைக் குறைகூறமாட்டீர்கள் என்று நம்புகின் றேன். இத்தகையார்களைக்கண்டு வள்ளுவருக்கே கோபம் பொங்கிவிட்டது.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறு மாக்கந் தரும்"

என்று அவர் சீறுவதைப் பார்க்கலாம். இதைவிடக் கடுமையாக வேறென்னதான் சொல்வது?

அன்பர்காள்! இன்னொன்றும் கூற விரும்பு கிறேன். தமிழிசைப் பணியில் முனைந்துநிற்கும் சங்கீதவித்வான்கள் தொடக்கத்தில் இன்னல்கள் சிலவற்றிற்கு ஆளாகவுங்கூடும். முன் ஆதரவளித் தோர் இப்பொழுது சற்றுத் தளரவிடுவதுபோலத் தோன்றினும் தோன்றும். அதற்காக நீங்கள் சிறிதும் மனந்தளர்ந்து சலிக்காது உங்கள் துறை யிலே உறைத்துநிற்பீர்களானல் நீங்கள் வெற்றியும் புகழும் எய்துவீர்கள் என்பதில் ஐயமில்லை. பொது மக்கள் ஆதரவு உங்களுக்குப் பூரணமாய் உண்டு என்பது திண்ணம்.

சபையோர்களே! இன்னும்பல பெரியார்கள் தமிழிசைப் பெருமையை எடுத்து நன்கு விளக்கு வார்கள். இன்றும் நாளையும் தமிழ் இசைக் கச்சேரி களைக் கேட்டு ஆனந்தம் அடைவீர்கள். அதனல் என்றும் அவ்வின்பம் பெறவேண்டும் வழியில் உழைப்பீர்கள் என்று நம்புகிறேன். இம்மாபெருங் கூட்டத்தில் நிறைவேறும் தீர்மானங்களைத் திருச்சி, சென்னை, கொழும்பு ரேடியோ நிலயத்தார்களுக் கும் தெரிவித்து, தமிழ் இசையைத் தமிழ்நாடெங்கும் பரப்பவேண்டியது நம்முடைய கடமை. தமிழ் நாட்டில் நடக்கும் விழாக்களிலும், விசேஷங்களி லும் தமிழ் இசையே பெருக ஓங்கித் தமிழ்நாடு இருமை இன்பம் ஒருங்கே எய்தும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் இறைஞ்சு கின்றேன்.

நாடக நற்றமிழ்

சரித்திர வரலாற்றிற்கு முற்பட்டதாகிய மிகத் தொன்மைவாய்ந்த காலத்திருந்தே தமிழ்மக்கள் நாடகக்கலையில் நன்கு தேர்ச்சியுற்றிருந்தனர். இதை, இயல் இசை நாடகம் எனத் தமிழை அவர்கள் மூத்திறப்படுத்திய முறைமைகொண்டே நாம் அறியலாம். நாடகத்தைக் கூத்து என்றே முற் காலத்தில் வழங்கினர். பேரவை எனவும் வழங்கினர். பேரவைகள்நிறுவி, ஆங்கு அரங்கினிடத்தே கூத்தாட்டங்களை நிகழ்த்தி, அவ்வாடல்களைத் திரள் திரளாக மக்கள் கூடியிருந்து குலாவினர் என்பதை,

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று"

என்னும் அருமைத் திருக்குறளே செவ்விதிற் புலப் படுத்தும். பெரியநகரங்களில் செல்வந்தர்கள் துறக்கத்தையொத்த, நீண்ட சுடர்த்தூண்களாற் கட்டப் பட்ட தமது அழகிய மாளிகைகளின் மேல்மாடத் தின் நிலாமுற்றத்திடத்தே, தமது மகளிருடன் கூடியிருந்து, இன்னிசைமுழக்கத்தினிடையே நாட கங்கள் நிகழச்செய்து, இன்பவாழ்வெய்தி இரவுப் பொழுதைப்போக்கினர் என்னும் செய்தி பட்டினப் பாலையிற் பதிவுறக்காணலாம்:—

"பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
* * * *
நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கி
* * * *
பாட லோர்த்து நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்றுய்த்துங்
கண்ணடைஇய கடைக்கங்குலான்."

இவ்வளவு சிறப்புற நாடகக்கலை வளர்ந்தோங்குவதற்கு உதவியாய்க் கூத்தியல்நூல்கள் எண்ணிறந்தன முற்காலத்திருந்து, இந்நாள் இறந்துபட்டனவாகத் தெரிகிறது. இந்திரகாளியம், கூத்தநூல், சயந்தம், செயிற்றியம், பஞ்சபாரதீயம், பரதசேனுபதீயம், பரதம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், குணநூல், சுத்தாநந்தப்பிரகாசம் முதலியன இசை நாடகப் பகுதிகளை விளக்கும் சில நூல்களாகும். இவை நாடக இலக்கணம் இயம்பும் நூல்களாயினும், இவற்றிற்கு இலக்கியமாகவும் பலநூல்கள் இருந்துள்ளன. முத்தமிழ்நுவலும் சித்திரநூலாம் சிலப்பதிகாரம் நாடகவுறுப்புக்களைத் தன்னகத்தேகொண்டுள்ளதால் நாடகக்காப்பியம் என்று வழங்கப்படும்.

கூத்தாவது:— வசைக்கூத்து, புகழ்க்கூத்து, வேத்தியல், பொதுவியல், வரிக்கூத்து, வரிச்சாந்துக் கூத்து, சாந்திக்கூத்து, விநோதக்கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து, இயல்புக்கூத்து, தேசிக் கூத்து எனப் பலவகைப்படும். இவற்றுள் கதை தழுவிவரும் கூத்து நாடகம் எனப்படும். கதை

தழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக் கூத்துக்களை அவிநயக் கூத்து என்று வழங்கினர். சுத்த நிருத்தமாய் நூற்றெட்டுக் கரணங்கள் மட்டுமுடைய கூத்து சொக்கம் என்னப்படும். வசைக்கூத்து என்பது நகைத்திறச் சுவையுடைய விதூடகக்கூத்து.

"பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
வல்லவ னாதல் வசையெனப் படுமே"

என்பது சூத்திரம்.

நாடகக்கலைக்கு உயிர்நாடியாகவுள்ள உறுப்பு அபிநயமாகும். அபிநயமாவது ஒன்பான் சுவையான அகத்துநிகழ் உணர்ச்சிகளைப் பத்துவகைச் சத்துவங்களாய உடல் நிகழ்ச்சிகளின் புறத்தொழில்களால், வெண்பளிங்கு மணிகளின் ஊடுருவிச் செல்லும் செந்நிறநூலானது புறத்தே காணப்படுதல்போல், வெளிப்படுத்திப் பிறர்க்குப்புலப்படும் வகையிற் பாவகம்செய்தல். பத்துவகைச் சத்துவங்களாவன:— மெய்ம்மயிர்சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமெடுத்தல், வியர்த்தல், தோற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என இவை. இவற்றை உடலின்கண்ணே வேண்டியவாறு நிகழச்செய்வது ஓர் அரியவாற்றலாகும். அஃது எவ்விதமெனில், வேம்பென்று கூறுகிறவன் அவ்வேம்பின் இரதங்காட்டாதே, அதன் சுவையால் மெய்யின்கண் நிகழும் மாற்றங்களைக்காட்டி

அதன்மூலம் வேம்பைக்கூறி முடிப்பது. இன்னும், கருணை என்றால் பாவித்துக்காட்டுவதன்றி, மெய்க் கண்ணீர் வந்து அழுவது. இவ்வாறு அகத்தூறும் சுவைகளைச் சத்துவங்களான் உடம்பின் புறத் தோட்டிக்காண்பது அவிநயம். இவை உடம்பினும், மிகுதியாக முகத்திலும், முகத்தினும் மிகுதியாகக் கண்ணிலும், கண்ணினும் மிகுதியாகக் கண்ணின் கடையகத்தும் தோன்றி நிற்கும். மேலும் இக் குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகிய சத்து வம் அல்லது விறல் என்பதை வெகுளி, ஐயம், சோம்பல், களிப்பு, உவகை, அழுக்காறு, இன்பம், தெய்வமேறுதல், ஞஞ்ஞை, உடன்படல், உறக்கம், துயிலுணர்தல், சாக்காடு, மழையால் நனைதல், பனித்தலைப்படுதல், வெயிற்றலைப்படுதல், நாணம், வருத்தம், கண்ணோவு, தலைநோவு, அழற்றிறம்படு தல், சீதமுறுதல், வெப்பமுறுதல், நஞ்சுண்டல் என இருபத்துநான்குவகையாக இன்னின்னவாறு அவி நயித்துக்காட்டவேண்டும் என்று அதற்கு விதிகளை யும் கூட்டித் தெளிவுற அமைத்திருந்தனர்.

பலவகை நாடகங்களையும், நடனங்களையும் நடித்துக்காட்டுவதற்கென ஒரு தனிக்கூட்டத்தார் அக்காலத்திருந்தனர். அவர்கள் கூத்தர் என்னப் படுவர். அவர்களிற் பெண்பாலார் கூத்தியர் அல் லது விறலியர் என்னப்படுவர். அவர்கள் நடிப் பதையே தொழிலாகக்கொண்டு அரசவைமுதல் சிற்றூர் அம்பலங்கள்வரை, பலவிடங்களுக்குச்

சென்று மக்களை மகிழ்வித்துப் பரிசில்கள்பெற்று வாழ்ந்துவந்தனர். ஆனல் ஆடல்வகைகளிற் பல, பொதுமக்கள் எல்லாராலும் பயிலப்பட்டுவந்தன. துணங்கை, குரவை, வெறியாடல் முதலிய பல ஆடல்கள் ஆண்களும் பெண்களும் மகிழ்ந்துகூடிக் கைகோத்து ஆடும் விழாச் சிறப்பு வாய்ந்தன. போருக்குச் செல்லும்பொழுதும், வெற்றிகொண்டு மீளும்பொழுதும், அரசனுடைய தேருக்கு முன்னும் பின்னுமாக வீரர்களும் விறலிமார்களும் துணங்கை யாடிக்கொண்டு செல்வர். அரசர்களும் இவ்வாட்டங் களிற் கலந்துகொள்வதுண்டு. ஒரு சேரவரசன் இவ் விதம் ஆடுவதில் வல்லவனுயிருந்ததால் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்று வழங்கப்பட்டான். திருக்கோயில் விழாக்களிலும் நாடகங்கள் பயின்று வந்தன.

பொய்யை மெய்போல் நடித்துக் காட்டுவது நாடகம். முன் நிகழ்ந்த அல்லது நிகழ்ந்ததாகக் கூறப்பட்ட நிகழ்ச்சி அல்லது சரித்திரம் ஒன்றைக் கண்ணெதிரே இப்பொழுது நிகழ்வதுபோல் நடித் துக் காட்டுவது ஒருசிலருக்கே கைவந்த ஒரு சிறந்த திறனுகும். இதற்கு உலக அனுபவமும், இயற் கையை நுனித்தறியும் கூரியமதிநுட்பமும் சிறந்து அமையப்பெறல்வேண்டும். இதைப் பண்டைத் தமிழர் நன்கு கண்டு அதற்குரிய விதிகளையும் தெளி வுற வகுத்திருந்தனர். ஒரு பார்ப்பனன் அரங் கிடைத் தோற்றுவதாயிருந்தால் குடையிடுக்கிக்

குந்திமிதித்துக் குறுநடைகொண்டுவந்து தோன்று தல்; அரசராயின் எடுத்த கழுத்தொடும், அடுத்த மார்பொடும் நடந்துசெல்லுதல்; இடையராயிற் கோற்கையும், கொடுமடியுடையும், விளித்தவிளை யும், வெண்பல்லுமாகித் தோன்றுதல்; என்று இன்னோரன்ன வழக்குநோக்கியவிதிகள் அளப்பில வாகும்.

இப்பொழுதும் இத்தகைய மரபுகள் வழுவாது நடிக்கின்ற நடிகர்கள் தமிழ்நாட்டில் இருப்பது நமது மொழிக்குச் சிறந்த பெருமையாகும். நான் பார்க்கநேர்ந்த திருக்குறிப்புத்தொண்டர் நாடகம் ஒன்றில், சிவனடியாராக நடித்தவர் ஆடையொலிக் கும் நாயனரிடத்து, மீண்டும் உலர்ந்த ஆடையைப் பெறமுடியாது, மழையில் நனைந்து குளிரின்மிகுதி யால் துயருறுவதுபோல் மிகத் திறம்பட நடித்துக் காட்டினர். கையிரண்டையும் மார்போடு ஒடுக்கித் தோள் இடுக்கி மெய்யெல்லாம் பனிப்பெய்தக் கால் கை நடுங்கிச் சொற்கள் தளர்வுற்று அவர் அவிநயித் துக் காட்டியதைக் கண்டோர் அனைவரும், விரை யலால் மெய்கொடுகுவது போன்றதோர் உணர்ச்சி பிறந்து பரவசமெய்தினர். அப்பொழுது எனக்குப் பின் வரும் சூத்திரம் நினைவுக்குவந்தது:—

“ மழைபெய்யப் பட்டோன் அவிநயம் வருக்கின்
இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும்
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தொடு புணர்த்தலும்

ஒளிப்படு மனனி லுலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையுங்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொளி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்றான் எழுதலு முண்டே"

இது மழைபெய்யப்பட்டோன் இவ்வாறு அவிநயிக்க வேண்டும் என்று வகுக்கப்பட்ட விதியாகும். பழைய நெறிமுறை பிறழாது அவிநயித்துக்காட்டும் நடிகர்கள் இக்காலத்தும் இருப்பதை அறிந்து பெருமகிழ் வெய்தினேன்.

தமிழர் தம்கடவுளை மொழியோடு இணைத்துக் கண்டனர். முக்கண்ணனை முத்தமிழாகப்பரவினர். மூன்றுகவடாய் முளைத்த செந்தமிழில் தோன்றி அருளினன் தோடுடைய செவியனும். நாடகத் தமிழின் நளினத்திடையே ஆடலரசனாய் அரனும் அணைந்தனன். அழகொழுகப்பாடி எழிலொழுக ஆடித் தமிழ் அணங்கு முகமலரக் கால் எடுத்துத் தலைநிமிர்ந்து கூத்து நிகழ்த்தினாள். சிவனும் குழைந்தமனத்துடன் குஞ்சிதபாதம் காட்டி அஞ்ச லென்றோம்பி அருள்கூட்டினான். பாற்கடலில் திரள் திரளாய்க் கொஞ்சுதிரை கூடினபோல் தமிழ்க் கடலில் கூத்துக்கலை கூத்தப்பெருமானைக் குதித் தெழுந்தது. நடராசன் தமிழ்முதற்கடவுள். பண்டைத் தமிழர் பரவித்தொழுத மூலபண்டாரம். முத்தமிழில் நாடகத்தமிழே நடராசப்பெருமான். அவன் ஆடாத கூத்து இல்லை. ஊழித்தோற்றத்

திலும் ஆட்டம்; அதன் ஏற்றத்திலும் ஆட்டம்; அதன் அற்றத்திலும் ஆட்டம். உலகமே ஆடல் பாடலில் தோன்றி ஆடல் பாடலில் அடங்குகிறது. சின்மயானந்தனுய் சச்சிதானந்தப் பொருளாய் இருக்கின்ற சிவபெருமான் அசைவிலா ஆனந்தக் கூத்தனுகவே இருக்கின்ருன். நாடகம் நவிலும் நற்றமிழாய் நடராசனைத் தமிழர் கருத்திலிருத்தியும் கல்விற்பொறித்தும் நூல்களில்நுவன்றும் வழிபடல் போல் வேறு எம்மதத்தினரும் அவர்தம் கடவுளரை வழிபட்டறியார். இது தமிழர்கொண்டபெருமை.

நமது ஆர்த்த பிறவித்துயர் கெடவே சிற்றம் பலத்துத் தீயாடுங் கூத்தன் தீர்த்தனுய் நின்று அருள்சுரக்கின்ருன். அவன் ஆடிய கொடுகொட்டி என்னும் கொட்டிச்சேதம் சிலப்பதிகாரத்தில் உயி ரோவியமாய்ப் புனையப்பெற்றுள்ளது:—

"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்க ணாயிரந் திருக்குறிப் பருளவுஞ்
செஞ்சடை சென்று திசைமுக மலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார்குழை யாடாது மணிக்குழ லவிழாது
உமையவள் ஒருதிற னாக வோங்கிய
இமையவ னாடிய கொட்டிச் சேதம்."

சிவன் ஆடுவது ஊழிக்கூத்து. அவன் சடை விரித்துப் புடைபரப்பித் தடையின்றி ஆடுதற்குக் கடையூழிக்காலமே ஏற்புடையதுபோலும். எங்கும் கடற்பிரளயம், ஒரே நீர்ப்பரப்பு. பொன்னுடை புனைந்தானும் மூன்னேடி மறைந்தகாலம். நான் முகனும் நழுவிநசிந்துபோன இறுதியெல்லை. காலத் தொடு மூவுலகும் நிர்மூலம்பட்டொழிகிற அவ் இறுதி முடிவில் சிவன் ஆடும் கோலம் இது:—

"சங்கரவக் கடல்முகடு தட்ட விட்டுச்
சதுரநடம் ஆட்டுகந்த சைவர் போலும்"

என்று அந்த ஊழிக்கூத்தையும் தெய்வத்தமிழ் உற்றுணர்ந்தோதி உளங் குளிர்விக்கிறது.

பொய்யொழித்துப் பொதுநீக்கிப் பொன்னர் மேனியனைப் போற்றும் புனிதர் திருநாவுக்கரசர். அவர் பொன்னம்பலத்துத் திருநடம் பொலியக் கண்டார். கண்டுகளித்த அக்கவியரசர் வேண்டாப் பிறவியையும் வேண்டிவிழைந்தார். அவ்விழைதகு பாடல் இன்றும் தமிழ்வேதமாய்த் தமிழர்முன் நிற்கிறது:—

"குனித்தபுருவமுங் கொவ்வைச்செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்தசடையும்பவளம்போல்மேனியிற்பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே."

இக்கோலக்காட்சியைக் கண்குளிரக்காண்டலே மனிதப்பிறவியின் மாண்பயன். நாடகத்தமிழ் நலம் சுரக்க நாடியெடுத்ததோற்றம் அது. நடனக்கலை சிதையாது ஆடுதற்கு எடுத்த திருக்குறிப்பால் புருவமும் வளைந்ததாம். அத்தனை கூர்ந்த கவனம் ஆடல் தொழிலில் செலுத்தப்பட்டது. சிவந்தவாயிடை சிறியதோர் முறுவல். மலர்ந்த முகத்திடை முறுவலிப்பு ஆன்மாக்களை அருள்காட்டி அழைக்கிறது. ஆடல்வேகத்தில் சடைகளும் பரந்து திசைகளை மூகந்தன. சிவனடியார் உள்ளம்கவரும் வெண்ணீறு சண்ணித்த மேனியோ பவளமலையிற் பால்பொழிந்தது போன்று கண்ணுக்கு விருந்தூட்டுகின்றது. எடுத்த திருப்பாதம் என்றும் சிவகதி நன்றெனநல்குகிறது. எத்தகைய தெய்வப்பிறவியையும்விட பொன்னம்பலக் கூத்தைக் காணக் கொடுத்துவைக்கும் மனிதப்பிறவியே மேலென்று வணங்கினர் அப்பரடிகள்.

இராமகாதையைப் பத்தியாற்பாடப் புகுந்த கம்பருக்குக்கூட அப் பொன்னம்பலக் கூத்தை மறக்கமுடியவில்லை. மிதிலைக்காட்சியினிடை இராமனது காதலையும், அவன் திருமணத்தையும் கடந்து சென்றது அவர் கற்பனைத்தேர். கடல் முகட்டில் காலைவேளையில் கதிரவன் காட்சி கனகசபையின் திருநடனக் காட்சியாகவே மாறிவிட்டது கவியரசருக்கு:—

“ எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியருங்
கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர வானரங்கின்
நடம்புரிவா னிரவியான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தா
லெனவிரிந்த கதிர்களெல்லாம்”

கடலையும் கதிரவனையும் மட்டுமே கம்பர் கண்டார். உடனே தமது கற்பனைக்கோலோச்சித் தமது சிந்தையுள்ளே யுறைகின்ற சிவனாரின் சிற்சபை நடனத்தை அழகு சொட்டச்சொட்ட அமைத்துக் காட்டிவிட்டார். அரங்கு இழைத்தார்; மணிமுழவை அதிரவைத்தார்; காணப் பலரையும் அழைத்து நிறுத்தினர். இசைக்கருவிகளும் இயம்பின. கனகச் சடை விரித்துக் கடவுளும் ஆடிவிட்டார். அருந்தமி ழைக் குழைத்து அகம் குழைந்து அன்பர் பாடினர். ஐயனும் ஆடினன்.

கம்பர் சிவனார் ஆட்டத்தில் சிந்தைபறிகொடுத்த ஒரு சிறந்தபக்தர். அவன் ஆடலின் அழகை அமுதம்தோய்ந்த அஞ்சொற்களாற் பாடிப்பாடிப் பரவசமெய்தினவர். அவர்பாடிய ஊழிக்கூத்துப் பாடல் ஒன்றையும் காணலாம்:—

“ பாழிப்புய முயர்திக்கிடை யடையப்புடை படரும்
சூழிச்சடை முடிவிண்தொட அயல்வெண் மதிதோற்ற

ஆழிப்புனல் எரிகால்நிலம் ஆகாயமும் அழியும்
ஊழிக்கடை முடிவில்திரி உமைகேள்வனை யொப்ப"

வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர்மண்கெடினும் தான் கெடுதலின்றிச் சலிப்பறியாத சிவபிரானுக்குக் கம்பர் தன் ஊன்கெட்டு உணர்வுகெட்டு உள்ளமும்போய்த் தான் கெட்டநிலையிற் பாடிய பாடல் இதுவாகும்.

"தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்"

என்று புகன்றார் மணிவாசகர். எந்நாட்டவர்க்கும் இறைவனான சிவனைத் தமிழ்மக்கள் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றுதான் பரவிப்பணிவர். தமிழும் சிவனும் அந்நிலையிற் கலந்த கலப்பு அது. தமிழ் மணம் கமழத் தென்றலில் தவழ்ந்து இமயம் வரையும் எட்டியது. தமிழ்வேட்கை சிவனையும் பற்றிக்கொண்டது. தில்லையில்வந்து மெல்லக் குதித்தான். தில்லை கனகசபை. மதுரையில் வெள்ளியம்பலத்தும் மெள்ளப்புகுந்தான். குற்றாலத்துச்சித்திர சபையில் நித்திய நிருத்தம் நின்மலன் ஆடுகிறான். தாம்பிரசபையையும் ஓம்பியளித்தான். இவ்வாறு விடமுண்டகண்டன் தென்திசையை விரும்பிக் களிக்கும் காரணம் யாது? காரணம் தமிழேயாகும். இதைப் பரஞ்சோதியார் பாங்குறப்பாடினார்:—

"கடுக்க வின்பெறு கண்டனுந் தென்திசை நோக்கி
அடுக்க வந்துவந் தாடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க வாரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்கவுந் தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ!"

தமிழ்நாட்டுத் தென்றலுக்கே ஓர் ஒப்பற்ற உயர்வு. பொங்குதமிழ்ப் பொதிகைமலைப் பிறந்து பூஞ் சந்தனத்தின் கொங்கணைந்து குளிர்சாரலிடை வளர்ந்த தமிழ்த்தென்றல், மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங்காற்று, அசைந்துவந்தால் மெய்யசைவு தீரும். தமிழோ செவியினுக்கு உணவு. என்புருக அன்பிற் குழைந்து கொஞ்சும் தமிழும் தென்ற லுடன் குலாவிவந்தால், வேறு வேண்டியது மற் றொன்றில்லை. தென்றலை மருகவும் தமிழைப் பருக வும் சிவன் தென்திசையை விரும்பினன். உள்ளக் களிப்பால் கால்வீசிக் கைவீசிச் சடைவீசிப் பாசம் வீசித் தென்றல்வீச மன்றில்நின்றாடினன். கன்னித் தமிழ்த் தென்றல் கடவுளையே களிப்பூட்டும் இவ்வா றென்றால், மற்றோரை என்செய்யாது? ஊசல்போல வீசி எழும் அவ் இளந்தென்றலாகிய மந்தமாருதம் வந்துலாவித் தனித்தோரை நொந்துவருத்துமாம். ஓர் இளம் புலவர் பாடுகிறார்:—

"அளிசேர்ந்த தண்பூம் பொழில்தோய்ந் தருவித்
துளிதோய்ந்து பால்நிலவும் தோய்ந்து—தெளிவிலேன்
சிந்தை தனைஉணக்க வந்ததால் தென்மலையம்
தந்த தமிழ்மா ருதம்."

இத்தமிழ்த் தென்றல் உடல்நோயை உடன் களைந்து, அறிவைக்கொளுத்திப் பவக்கடலை வறளச் செய்து மெய்ந்நெறியாம் வீட்டின்பத்தைத் தலைக் கூட்டி வைக்கும் என்ற உண்மையைக் குற்றாலத் தலபுராணமுடையார் பெருமிதத்துடன் பாடுகிறார்.

உலகியலில் உன்மத்தனாகி உழன்று பின் உண்மையோர்ந்த ஓர் அந்தணன்மேல் தென்றல்வந்து பாய்ந்தது. அது சம்பந்தப்பிள்ளையாருக்கு உமையம்மையின் பால் பாய்ந்ததுபோல் ஞானம் அளித்தது. அடியார்தம் பிறவிக்கடலைச் சுவறவிடுவதற்கு முருகன் கைவேல் பாய்ந்தது போலவும் இன்ப நலத்தை அடைவித்தது.

"மால்பாய்ந்த மறையவன்மேல் திரிகூடவரைச் சந்தக்
கால்பாய்ந்த தென்கேனோ கவுணியன்வாய்க் கவுரிமுலைப்
பால்பாய்ந்த தென்கேனோ பவக்கடலிற் குகப்பெருமான்
வேல்பாய்ந்த தென்கேனோ யாதெனயான் விளம்புகேன்."

தமிழுக்கும் தென்றலுக்கும் ஓர் இனியபொருத்தம் கண்டு கூறினார் சேக்கிழார். பொதிகைத் தென்றலானது மேகம் தோய்ந்த மலரடுக்கத்துச் சந்தனச்சோலையிற் படிந்துவருவதால் நறுமணத்தைக் கமழச்செய்யும்படியான ஈரத்தை எப்பொழுதும் தந்துகொண்டிருக்கும். அதைச் 'செவ்விமணஞ் செய்ஈரம்' என்றார். அதேபோல் தெய்வத்தமிழும் செவ்விமணஞ்செய் ஈரத்தைத் தந்துகொண்டே இருக்கும் என்று நயம்தோன்றக் கூறினார்:—

"மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்றசந்தின்
மைவைத்த சோலை மலயந் தரவந்த மந்த
மெய்வைத்த காலும் தரும்ஞாலம் அளந்தமேன்மைத்
தெய்வத் தமிழும் தருஞ்செவ்வி மணஞ்செயீரம்"

தென்றற்காற்று குளிர்ச்சியாகிய ஈரத்தைத் தருதல் யாவரும் அறிந்ததே. தமிழ் எவ்வாறு செவ்விமணஞ் செயீரம் அளிக்கவல்லது? செவ்விமணஞ் செயீரம் என்பதை இங்குச்சிலேடைப்பொருளில் வழங்கினர் சேக்கிழார். ஈரம் என்றால் அன்பாகிய காதலையும் குறிக்கும். அவ்விதம் கொள்ளின், தமிழானது உரியகாலத்தே மணக்கும் காதல் இன்பத்தைத் தரவல்லது என்ற பொருளைப் பெறலாம். தமிழ் சிறப்பாக எடுத்துக்கூறுவது அகனைந்திணையேயாதலின் அவ்வாறு கூறப்பட்டது.

மேலும், இறையனர் அகப்பொருள் உரைப்பாயிரத்தில் "இந்நூல் என்னுதலிற்றோ? எனின், தமிழ் நுதலியதென்பது." என்று கூறப்பட்டது. களவியல், கற்பியலைப்பற்றிக் கூறவந்த பொருளதிகாரத்தைத் தமிழ் என்று கூறினர். நுண்மாண் நுழைபுலம் மிக்கவராய் தமிழ் இலக்கியத்துறையனைத்தும் முறையாக நுணுகியாய்ந்த தண்டமிழ் வாணர்களுக்கே அதன் பொருத்தமும் இனிமையும் நன்கு விளங்கும்.

குன்றம்பூதனர் பரிபாடலில் பின்வருமாறு கூறுகின்றார். "நான்மறையிலும் நல்லிசையிலும் விளங்கிய அறிவினையுடைய புலவர்களே! அதைவிடச் சிறந்ததோர்பொருளைக் கூறுகிறேன். செவிசாய்த்துக் கேளுங்கள். காதல் மணமே சாலச் சிறந்தது. கற்பு மணத்திற்குப் பிரிவு உண்டு. அதுவும் பரத்தையிற் பிரிவு அலர்தூற்றப்படும். மனைவி இல்லின்கண் தனித்திருந்துவருந்துவாள். செவ்வணி

யணிந்த சேடியரைத் தலைவனிடத்திற்கு அனுப்பிப் பூப்பினைத்தெரிவிக்க, அதன்பின்னர் அவன்வந்து, வாயில்கள் இடையிட்டு, ஊடிக்கூடிமகிழ்வது கற்பு. ஆனால் களவு மணத்தில் ஊடலும் பிரிவும் கிடையாது. மகளிர் துனி என்னும் குற்றத்திற்கு ஆளாகார். அத்தகைய களவைச் சிறப்பிப்பது பொருள் இலக்கணத்தையுடைய தமிழ். அத்தமிழை ஆராயாதவர்களுக்கு இதுவெல்லாம் எப்படி விளங்கும்?" இக் கருத்துக்கொண்ட அடிகளை இங்கேகாணலாம்.

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர்! கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி
புலத்தலிற் சிறந்தது கற்பே யதுதான்
இரத்தலு மீதலு மிவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை
சுணங்கறைப் பயனு மூடல்."

இதுகாறும் புலனழுக்கற்ற பொய்யில்புலமைத் தெய்வப்பாவலர்கள் நம் தமிழ்மொழியை எவ்வாறு போற்றினர் என்பதைக்கண்டோம்: நாமும் அவ்வாறு தமிழ்மொழியைத் தெய்வமாய் நம் உயிரினும் மேலாகப் போற்றுவோமாக.

முற்றிற்று.

உ

குருபாதம்

தருமபுர ஆதீனப் பணிகள்.

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.

3. சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

4. சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது.

5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது.

6. அறிஞரைக் கொண்டு ஆலயம் தோறும் அறிவுரைவழங்குவது.

7. பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.

8. ஆங்கிலக்கலாசாலைகளில் தமிழ்ப்பரிசு அமைப்பது.

9. ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.

10. தமிழ்க்கல்லூரி நிறுவி வித்துவான் தேர்விற் கனுப்புவது.

11. வடமொழிக் கல்லூரி நிறுவிச் சிரோமணித் தேர்விற்கனுப்புவது.

12. ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவுகள் அமைப்பது.

13. நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது

14. விஞ்ஞான மெய்ஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.

15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.

16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாக சமயஉண்மைகளை அறிவுறுத்துவது.

17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.

18. தமிழ்ப்பணி சமயப்பணி செய்பவர்க்குதவுவது.

19. தமிழ்நாட்டுத் தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.

20. புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.

21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்ன மளிப்பது.

22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர் களுக்கு உதவுவது.

23. மாயூரத்தில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டிவருவது.

24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.

25. காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி, காசநோய் ஆஸ்பத்திரி உதவி நிதி முதலிய பற்பல பொதுஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.

உ

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக
20-ம் பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

மனமுவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
1	சிவஞானசித்தியார் உபன்னியாசக் கட்டளை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ...	15,000
2	கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ...	11,500
3	திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ...	5,000
4	சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு ...	5,000
5	மூவர் தேவாரப் பரிசு- சீகாழி, திருவாரூர் திருவையாறு, திருப்பனந்தாள் ...	10,000
6	ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த போதகாசிரியர் நியமிக்க ...	60,000
7	அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க ...	30,000

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
8	திருப்பனந்தாளில் தமிழ்க்கல்லூரி நிறுவ	1,50,000
9	இசைத்தமிழ்க் கல்விக்கு ...	1,00,000
10	திருப்பனந்தாளில் கால்நடை வைத்தியசாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் ...	20,000
11	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ...	10,000
12	இராமேசுரத்தில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் ...	10,000
13	திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம்	3,000
14	ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழிமாத அன்னதானம் ...	17,000
15	திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி மாணவர்கள் உணவு நிதி ...	1,00,000
16	திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப்பெறுமானம் ...	66,000
17	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ...	2,900
18	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ...	3.000
19	கும்பகோணத்தில் மணிக்கூண்டு ...	25,000
20	தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ...	21,000
21	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் ...	9,000

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
22	மைசூர் மஹாராஜா தேவாரப் பரிசு ...	5,000
23	தருமை ஸ்ரீகுருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுத் தேவாரப்பரிசு, மாயூரம் ...	5,000
24	சென்னை விவேகாநந்தா கல்லூரியில் ராஜாஜி சைவ சித்தாந்தக் கட்டளை ...	10,000
25	ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவ சித்தாந்தக் கட்டளை	20,000
26	ஸ்ரீ குமாரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப் பரிசு, ஸ்ரீவைகுண்டம் ...	5,000
27	மதுரைத் திருமலைநாயக்கர் தேவாரப் பரிசு	10,000
28	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகட்கு ...	1,00,000
29	ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் ...	5,000
30	ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு ...	1,50,000
31	டாக்டர் சுவாமிநாத ஐயர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ...	3,500
32	குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ...	1,000
33	காந்தியடிகள் நினைவு அரிபநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகார நிதி ...	3,000
34	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மாகேசுவர பூசை ...	10,000

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
35	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ...	4,000
36	விஷ்ணுபுரத்தில் ஹைஸ்கூல் படிப்பக நிதி	1,000
37	குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ...	3,500
38	திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு ...	3,500
39	திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தருமம் ...	3.500
40	ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி ...	3,500
41	சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி	35,000
42	சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ...	12,000
43	இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ...	3,500
44	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ...	17,825
45	பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ...	5,000
46	அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ...	3,500
47	ஸ்ரீகாசிகேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீகுமார சாமி அன்னதானம் ...	5,000
48	ஸ்ரீ வில்லிபுத்தூரில் தேவாரப் பரிசு	3,500
49	திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம்போட ...	7,500

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
50	காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு ...	5,000
51	திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம் ...	7,000
52	28வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் முதல்ஆண்டு உதவி நிதி...	13,500
53	30வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு முதல் இரண்டு ஆண்டு மூலதனம் ...	14,000
54	28வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் முதல்ஆண்டுஉதவிமூலதனம்	5,000
55	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமாரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ...	15,000
56	மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவ சித்தாந்த உபன்னியாசக் கட்டளை ...	5,000
57	ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் ...	60,000
58	திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ ...	1,500
59	ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ...	45,000

தொடர் என்	தரும விபரம்	மூலதனம்
60	ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசி யாத்திரை நிதி ...	5,000
61	பனைசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ...	5,000
62	(6) ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித் தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது	16,000
63	30வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் மதுரை முதலாண்டு உதவி மூலதனம் ...	7,000
64	ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமி கள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம்	7,500
65	28வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையரா திருநெல்வேலி முதலாண்டு உதவி மூலதனம் ...	5,000
66	30வது ஸ்ரீசெந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையரா கும்பகோணம் முத லாண்டு உதவி மூலதனம் ...	7,000
67	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நன்கொடை	10,000
68	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர ஸ்வாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை	7,000
69	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளிமாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ...	10,000

தொடர் எண்	தரும விபரம்	மூலதனம்
70	ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டிடம் வாங்க நன்கொடை ...	3,000
71	ஸ்ரீகாசியில் இந்தியக்குடியரசு தின அன்ன தானம் ...	10,000
72	ஸ்ரீ வைகுண்டத்தில் ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் உணவு நிதி ...	1,50,000

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம்.
20—5—50.